Namma Kalvi
www.nammakalvi.in

# GANGA GUIDE

# சமூக அறிவியல்

## பருவம் I, II & III இணைந்தது

# 9

இலவசம்
பயிற்சி புத்தகம் &
வரைபடக் கையேடு

உரையாசிரியர்கள்

S. சுரேஷ்குமார், M.A., B.Ed.
ஈரோடு.

K.P. அன்பு கண்ணன், M.A., D.M.M.Tch.,
கன்னியாகுமரி.

ஜேக்கப் தாமஸ், M.A., B.Ed., M.Phil.,
ஊட்டி.

SRI GANGA PUBLICATIONS®
(A UNIT OF SHYAMALA GROUP)

**Corporate Office :**
No. 1, Sugar Mill Colony,
Salai Kumaran illam,
Madurai Road,
Tirunelveli - 627001.
Phone : 0462 - 233 8899 / 233 8484
Mobile : 94431 58484 / 95978 39822
Email : suryaguides@yahoo.com

**Registered Office :**
New No. 59, 4th Avenue,
Opp. to Govt. Boys Hr. Sec. School,
Ashok Nagar,
Chennai - 600 083.
Phone : 044 - 2474 4484
Mobile : 94421 58484 / 94425 58484
Email : srigangapublications5@gmail.com

Website : www.suryapublications.in

Price ₹ 230/-

# 9

# வரலாறு

www.nammakalvi.in

வரலாறு



# பாடம் 1 மனிதப் பரிணாம வளர்ச்சியும் சமூகமும்: வரலாற்றுக்கு முந்தைய காலம்

## பயிற்சிகள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்க.

1. **மனிதர்களுடன் மரபணுவியல் நோக்கில் மிகவும் நெருக்கமாக இருப்பது.**

அ) கொரில்லா ஆ) சிம்பன்ஸி
இ) உராங் உட்டான் ஈ) கிரேட் ஏப்ஸ் [விடை: ஆ]

2. **வேளாண்மை மற்றும் விலங்குகளைப் பழக்கப்படுத்துதல் தொடங்கிய காலகட்டம்.**

அ) பழைய கற்காலம் ஆ) இடைக்கற்காலம்
இ) புதிய கற்காலம் ஈ) பெருங்கற்காலம் [விடை: இ]

3. **பரிணாம வளர்ச்சி வரிசையில் நவீன மனிதனின் நேரடி முன்னோர் _______ ஆவர்.**

அ) ஹோமோ ஹேபிலிஸ் ஆ) ஹோமோ எரக்டஸ்
இ) ஹோமோ சேபியன்ஸ் ஈ) நியாண்டர் தால் மனிதன் [விடை: இ]

4. **எகிப்து, இஸ்ரவேல்-பாலஸ்தீனம் மற்றும் ஈராக் ஆகியவை அடங்கிய பகுதி _______ எனப்படுகிறது.**

அ) கிரேட் ரிஃப்ட் பள்ளத்தாக்கு ஆ) பிறைநிலப் பகுதி
இ) ஸோலோ ஆறு ஈ) நியாண்டர் பள்ளத்தாக்கு [விடை: ஆ]

5. **சர் இராபர்ட் புரூஸ்ஃபூட் என்ற இங்கிலாந்து நிலவியலாளர் சென்னைக்கு அருகில் உள்ள பல்லாவரத்தில் _______ கருவிகளை முதன்முறையாக கண்டுபிடித்தார்**

அ) கற்காலம் ஆ) பழங்கற்காலம்
இ) இடைக்கற்காலம் ஈ) புதிய கற்காலம் [விடை: ஆ]

6. (i) **எழுத்து தோன்றுவதற்கு முந்தைய காலம் வரலாற்றுக்கு முந்தையதாகும்**
(ii) **வரலாற்றுக்கு முந்தைய கால மக்கள் மொழியை வளர்த்தெடுத்தார்கள்; அழகான ஓவியங்களையும், கலைப்பொருட்களையும் உருவாக்கினார்கள்.**
(iii) **வரலாற்றுக்கு முந்தைய காலச் சமூகங்கள் படிப்பறிவு பெற்றிருந்ததாகக் கருதப்படுகிறது.**
(iv) **வரலாற்றுக்கு முந்தைய காலகட்டம் பழங்காலம் என்று அழைக்கப்படுகிறது.**

அ) (i) சரி ஆ) (i) மற்றும் (ii) சரி
இ) (i) மற்றும் (iv) சரி ஈ) (ii) மற்றும் (iii) சரி [விடை: ஆ]

7. (i) **செல்ட் எனப்பட்ட தீட்டப்பட்ட கற்கோடாரிகளால் புதிய கற்கால மக்கள் பயன்படுத்தினார்கள்.**
   (ii) **புதிய கற்காலக் கிராமம் குறித்த சான்று சென்னை மாவட்டத்தில் உள்ள பையம் பள்ளியில் காணப்படுகிறது.**
   (iii) **புதிய கற்காலத்தைத் தொடர்ந்து வந்த பண்பாட்டுக்காலம் வெண்கலக் காலம் எனப்படுகிறது.**
   (iv) **விலங்குகளை வளர்த்தல், பயிர் செய்தல் ஆகியன நடந்த காலகட்டம் இடைக்கற்காலம் எனப்படுகிறது.**

   அ) (i) சரி
   ஆ) (ii) சரி
   இ) (ii) மற்றும் (iii) சரி
   ஈ) (iv) சரி **[விடை: அ]**

8. **கூற்று : தமிழகத்தின் ஆறுகள், குளங்கள் அருகே இடைக்கற்கால வாழ்விடங்கள் பல கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.**
   **காரணம் : நீர்ப்பாசன மேலாண்மை இடைக்கற்காலத்தில் வளர்ச்சியடைந்து இருந்தது.**

   அ) கூற்றும் காரணமும் சரி. ஆனால் காரணம் சரியாக விளக்குகிறது.
   ஆ) கூற்றும் காரணமும் சரி, ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை.
   இ) கூற்று சரி; காரணம் தவறு.
   ஈ) கூற்றும் காரணமும் தவறானவை. **[விடை: ஈ]**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. கோடாரிகளும் பிளக்கும் கருவிகளும் _________ பண்பாட்டைச் சேர்ந்த முக்கியமான கருவி வகைகளாகும். **விடை: கீழ்ப் பழங்கற்கால**
2. கற்கருவிகளை உருவாக்குவதற்குத் தேவையான வழிமுறைகளும் நுட்பமும் _________ தொழில்நுட்பம் என அழைக்கப்படுகின்றன. **விடை: கற்கருவி**
3. பழங்கற்காலத்திற்கும் புதிய கற்காலத்திற்கும் இடைப்பட்ட காலம் _________ எனப்படும். **விடை: இடைக் கற்காலம்**

## III. சரியான கூற்றைத் தேர்வு செய்க.

1. அ) மனிதர்களின் தோற்றத்தை அறிவியல் நோக்கில் புரிந்து கொள்ள 'தகுதியுள்ளது பிழைக்கும்' என்ற கருத்து உதவுகிறது.
   ஆ) உயிர்களின் தோற்றம் குறித்த ஹெர்பர்ட் ஸ்பென்சர் பதிப்பித்தார்.
   இ) உயிரியல் பரிணாம வளர்ச்சி குறித்த டார்வின் கோட்பாடு இயற்கைத் தேர்வு என்ற வழிமுறையுடன் தொடர்பு உடையது.
   ஈ) கல் தொழில்நுட்பம் குறித்து ஆராய்வது நிலவியல் ஆகும். **[விடை : அ]**
2. அ) குரங்கினங்களில் உராங் உட்டான் மனித மரபுக்கு மிக நெருக்கமான குரங்கினமாகும்.
   ஆ) மனிதர்களின் முன்னோர்களை ஹோமினின் என்கிறோம், அவர்களின் தோற்றம் குறித்த சான்றுகள் ஆப்பிரக்காவில் காணப்படுகின்றன.

இ) இரு பக்கமும் கூர்மையாகச் செதுக்கப்பட்ட சிறு சில்லு சீவல் எனப்படுகிறது.

ஈ) பெரிய கற்களைச் செதுக்கி தயாரிக்கப்படும் கைக்கோடாரிகள் அச்சூலியன் கருவிகள் எனப்படும். **[விடை: ஆ]**

## IV. பொருத்துக: (விடையுடன்)

| | | | |
|---|---|---|---|
| 1. | பழங்கால மானுடவியல் | - | மனித இன முன்னோர்கள் குறித்த ஆய்வு |
| 2. | கோடாரிக் கருவிகள் | - | அச்சூலியன் |
| 3. | கல்லிலும் எலும்பிலும் காணப்பட்ட உருவங்கள் | - | வீனஸ் |
| 4. | செம்மணல் மேடுகள் | - | தேரி |
| 5. | சிறு அளவிலான கல்லால் ஆன செய்பொருள்கள் | - | நுண்கற்காலம் |

## V. சுருக்கமான விடை தருக.

**1. சிந்தனைகளின் காலம் மனிதர்களைத் தன்னுணர்வும் அறிவும் உள்ளவர்களாக எப்படி மாற்றியது?**

✦ உலகம் மற்றும் பேரண்டம் குறித்து புரிந்து கொள்ளவும் அவைப்பற்றிய அறிவை சேகரித்து விளக்கவும் இயன்ற ஒரே உயிரினம் மானுட இனம் மட்டும் தான்.

✦ பரிணாம வளர்ச்சியில் அறிவாற்றலுடன் இயற்கை, தம்மை சுற்றியுள்ள உயிரியனங்கள் குறித்து சிந்தித்து கேள்வி எழுப்பவும் தொடங்கினர்.

✦ இயற்கை பற்றிய அவனது சுயபுரிதலே, இயற்கையை வழிபட வைத்தது.

**2. வரலாற்றுக்கு முந்தைய காலத் தமிழக மக்களின் வாழ்வில் கால்நடை வளர்த்தல் ஏற்படுத்திய தாக்கம் பற்றி குறிப்பு தருக.**

✦ கீழ்ப் பழங்காலப் பண்பாட்டில் தமிழக மக்கள் காட்டு விலங்குகளை வேட்டையாடினர்.

✦ புதிய கற்காலப் பண்பாட்டில் கால்நடை மேய்த்தல் அவர்களது முக்கியமான தொழிலாக இருந்தது.

✦ இரும்புக் கால மக்கள் ஆடு, மாடுகளை வளர்த்தனர். கால்நடை வளர்த்தல் அவர்கள் வாழ்வின் அங்கமானது.

**3. பெருங்கற்காலத்தில் இறந்தோரைப் புதைக்கும் வழக்கத்தின் வகைகளைக் கூறு.**

**பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் :**

டோல்மென் எனப்படும் கற்திட்டை, சிஸ்ட் எனப்படும் கல்லறை, மென்ஹிர் எனப்படும் நினைவுச்சின்ன குத்துக் கல், தாழி, பாறையைக் குடைந்து உருவாக்கிய குகைகள், சார்க்கோபேகஸ் எனப்படும் ஈமத்தொட்டிகள்.

**4. கருவி செய்வதில் கீழ்ப் பழைய கற்கால மக்களிடமிருந்த தொழில்நுட்பத்தைத் திறனாய்வு செய்க.**

✦ பெரிய கற்களைச் செதில்களாகச் சீவி கைக்கோடாரி உள்ளிட்ட பல வகைக்கருவிகளை வடிவமைத்தார்கள்.

www.nammakalvi.in




✦ வாழ்க்கைத் தேவைகளுக்காக கைக்கோடாரி, வெட்டுக்கத்தி உள்ளிட்ட கருவிகளைச் செய்தார்கள். இவை இருமுகக் கருவிகள் என அழைக்கப்படுகின்றன.

## VI. தலைப்பு வினாக்கள்.

**ஒவ்வொரு தலைப்பின் கீழேயும் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளி.**

**1. ஹோமினிட் மற்றும் ஹோமினின்ஸ்**

**அ) ஹோமினிட் என்போர் யாவர்?**
நவீன மற்றும் அழிந்து போன அனைத்து பெருங்குரங்கு இனங்களும் ஹோமினிட் என்று அழைக்கப்படுகின்றன.

**ஆ) ஆப்பிரிக்காவில் கருவிகளை உருவாக்கிய முதல் மனித இனம் எது?**
ஹோமோ ஹேபிலிஸ் என்ற மனித இனம்.

**இ) நவீன கால மனிதர்கள் எந்தப் பெயரால் குறிக்கப்படுகிறார்கள்?**
ஹோமோ சேப்பியன்ஸ்

**ஈ) இந்த இனத்தைச் சேர்ந்த ஏதேனும் ஒரு வகையைக் கூறு.**
ஹோமோ எரக்டஸ், நியாண்டர்தால் இனம், ஹோமோ ஹெபிலிஸ்

**2. மனித முன்னோர்களின் தொடக்க காலக் கற்கருவிகளின் தொகுப்பு**

**அ) அச்சூலியக் கருவிகள் கர்நாடகத்திலும் மத்தியப்பிரதேசத்திலும் எங்கு கண்டெடுக்கப் பட்டுள்ளன?**

| | | |
|---|---|---|
| கர்நாடகத்தில் | - | இசாம்பூர் |
| மத்தியப்பிரதேசத்தில் | - | பிம்பெத்கா |

**ஆ) பியாரின் என்றால் என்ன?**
கூரிய வெட்டுமுனை உள்ள கல்லாலான உளி.

**இ) இருமுகக் கருவிகள் என்றால் என்ன?**
இருபுறமும் செதுக்கப்பட்ட கருவிகளுக்கு இருமுகக் கருவிகள் என்று அழைக்கப் படுகின்றன.

**ஈ) மனித இன முன்னோடிகள் பயன்படுத்திய கல்லால் ஆன ஆயுதங்கள் சிலவற்றைக் கூறு?**
கைக்கோடரி, வெட்டுக்கத்தி, அளைப்பான், பிளக்கும் கருவி, சுரண்டும் கருவி மற்றும் கூர்முனைக் கருவி.

## VII. விரிவான விடையளிக்கவும்.

**1. விவசாயம், பானை செய்தல், உலோகக் கருவிகள் செய்தல் ஆகிய துறைகளில் நிகழ்ந்த வளர்ச்சி பெருங்கற்காலத்தில் ஏற்பட்ட மிக முக்கியமான மாற்றமாகும் - உறுதிப்படுத்தவும்.**

**மட்பாண்டங்கள் :**

✦ கறுப்பு மற்றும் சிகப்பு நிறங்களைக் கொண்ட மண்பாண்டங்களைப் பயன்படுத்தினர்.

- மண்பாண்டங்கள், சமைக்க, பொருட்களை சேமிக்க, உணவை சாப்பிட பயன்பட்டன.
- மண்பாண்டங்கள் உள்ளே கறுப்பாகவும், வெளியே சிவப்பாகவும் மற்றும் வெளிப்புறம் பளபளப்பாகவும் இருந்தன.

**உலோகக் கருவிகள் :**

- ஈமப் பொருட்களாக ஏராளமான இரும்புப் பொருட்கள் வைக்கப்பட்டன.
- வாள், குறுவாள், கோடரிகள், உளிகள், விளக்குகள், முக்காலிகள் பயன்படுத்தப்பட்டன.
- இதில் சிலவற்றிற்கு எலும்பு அல்லது மரத்தாலான கைப்பிடி பொருத்தப்பட்டிருந்தது.
- இரும்புக்கருவிகள் வேளாண்மைக்கும், வேட்டையாடவும், உணவு சேகரிக்கவும், போர்களுக்கும் பயன்பட்டன.
- வெண்கலக் கிண்ணங்கள், வெண்கல முகம் பார்க்கும் கண்ணாடி போன்றவை கண்டெடுக்கப் பட்டுள்ளது.

**வேளாண்மையும், கால்நடை வளர்ப்பும் :**

- இரும்புக் கால மக்கள் வேளாண்மையும், கால்நடை வளர்ப்பையும் மேற்கொண்டனர்.
- தினையும், நெல்லும் பயிரிடப்பட்டன.
- பாசன நிர்வாகம் மேம்பட்டது. ஆற்றுப்படுகைகளில் (டெல்டா பகுதிகளில்) பாசன தொழில் நுட்பம் வளர்ந்தது.


**2. மனிதர்களின் வரலாறு பூமியின் வரலாற்றுடன் நெருங்கிய தொடர்பு உடையது - தெளிவுப்படுத்துக.**

- மனிதனின் வரலாற்றைப் புவியின் வரலாற்றிலிருந்து பிரிக்க முடியாது.
- புவியின் மேலடுக்குகளில் தொல்லியல், உயிரியல் பதிவுகள் பொதிந்து கிடக்கின்றன.
- இப்பதிவுகள் வரலாற்றுக் காலகட்டங்களையும் பல்வேறு உயரினங்களின் வரலாற்றையும் அறிய சான்றாக உள்ளன.
- இவ்வடுக்குகளில் மனித மூதாதையர்களின் எலும்புகளின் புதைபடிவங்களும் புதைந்துள்ளன.
- தொல்லியல் அறிஞர்கள் புவியின் மண் மற்றும் பாறை அடுக்குகளை அகழ்ந்து மனித மூ தாதையர்களைக் குறித்த சான்றுகளைச் சேகரிக்கின்றார்கள்.
- மனிதனின் பரிணாமம், தொல்பழங்காலம், மண்ணடுக்குகளின் அறிவியல்பூர்வமான காலக்கணிப்பு ஆகியவை ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகின்றது.
- நுண்ணுயிர்கள் தோற்றம், பல செல் உயிரினங்கள் தோற்றம், மீன்கள், ஊர்வன, பல்வேறு தாவரங்கள் தோற்றம் தொடர்ந்து டைனோஸர்கள் வாழ்ந்த காலம், பாலூட்டிகளான மனித குரங்குகள் - அதைத் தொடர்ந்து குரங்கினத்திலிருந்து நவீன மனித இனம் - என பூமியின் வரலாறு மனிதனின் வரலாற்றுடன் நெருங்கிய தொடர்பு உடையது.


# வரலாற்றுடன் வலம் வருக

**மாணவர் செயல்பாடுகள்:**

**1. உலக வரைபடத்தில் வரலாற்றுக்கு முந்தைய கால நாகரிகம் நிலவிய பகுதிகளைக் குறிக்கவும்.**





**2. வரலாற்றுக்கு முந்தைய காலம் தமிழ்நாட்டில் நிலவிய இடங்கள் என்ற தலைப்பில் ஒரு கண்காட்சியை அமைக்கவும்.**



















## கூடுதல் வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

**1. கைக்கோடாரிகள் முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்ட செயின்ட் அச்சூல் உள்ள நாடு**

அ) பிரான்ஸ் ஆ) இங்கிலாந்து இ) ஜெர்மனி ஈ) இந்தியா **[விடை: அ]**

**2. கற்கருவிகள் செய்ய பயன்படும் கற்கள் ______ என அழைக்கப்பட்டன.**

அ) கருங்கற்கள் ஆ) கிரேனைட்
இ) மூலக்கற்கள் ஈ) செங்கற்கள **[விடை: இ]**

**3. மைக்ரோலித்திக் என்பது**

அ)நுண்கற்கருவிகள் ஆ) இரும்புக் கருவிகள்
இ)வெங்கலக் கருவிகள் ஈ) ஆயுதங்கள் **[விடை: அ]**

**4. இந்தியாவில் முதல் பழங்கற்காலக் கருவியை சர் இராபர்ட் புரூஸ்ஃபூட் கண்டுபிடித்த இடம்**

அ) சாந்தோம் ஆ) மாமல்லபுரம்
இ)மைலாப்பூர் ஈ) பல்லாவரம் **[விடை: ஈ]**

**5. சங்க காலத்திற்கு அடித்தளமிட்டவர்கள்**

அ)பழையகற்கால மக்கள் ஆ) இரும்புக்கால மக்கள்
இ)புதிய கற்கால மக்கள் ஈ) பெருங்கற்கால மக்கள் **[விடை: ஆ]**

### II. பொருத்துக (விடையுடன்) :

1.

| | | | |
|---|---|---|---|
| 1. | புவியின் நீண்ட வரலாறு | - | ஊழி, நெடுங்காலம் |
| 2. | ஆஸ்ட்ரோலாபித்திஸைன் | - | தெற்கத்திய மனிதக் குரங்கு |
| 3. | பொ. ஆ. மு | - | பொது ஆண்டுக்கு முன் |
| 4. | கோபிடோலைன் | - | உலகின் பழமையான அருங்காட்சியகம் |
| 5. | ஓல்டுவாய் | - | ஆப்பிரிக்கா |

2.

| | | | |
|---|---|---|---|
| 1. | சிறுகற்துண்டு | - | செதில் |
| 2. | லெவலாய்ஸ் | - | பிரான்ஸ் |
| 3. | பியூரின் | - | கல்லாலான உளி |
| 4. | சார்க்கோபேகஸ் | - | ஈமத்தொட்டிகள் |
| 5. | அர்ன் | - | மட்பாண்ட சாடிகள் |

## III. தலைப்பு வினாக்கள் :

**1. வரலாற்றுக் கால ஈமச்சின்னங்கள் :**

**அ) கேரளாவில் காணப்பட்ட ஈமச்சின்னங்கள் யாவை?**

கொடக்கல் அல்லது குடைக்கல், தொப்பிக்கல், பத்திக்கல் ஆகியவை கேரளாவில் காணப்பட்ட ஈமச்சின்னங்களாகும்.

**ஆ) டோல்மென்கள் என்றால் என்ன?**

மேஜை போன்ற கல்லால் உருவாக்கப்பட்ட நினைவுச்சின்னம் டோல்மென்கள் எனப்படும்.

**இ) சிஸ்ட் என்றால் என்ன?**

நான்கு பக்கமும் நான்கு கற்பாளங்களை நிறுத்தி, மேலே ஒரு கற்பாளத்தை வைத்து மூடி உருவாக்கப்படும் கல்லறைகள் சிஸ்ட் எனப்படும்.

**ஈ) மென்ஹிர் என்றால் என்ன?**

தூண் போன்ற நடுகற்கள் மென்ஹிர் எனப்படும்.

## IV. கோடிட்ட இடத்தை நிரப்புக :

1. ________ மனித மூதாதையர்களின் உடலமைப்பு, பரிணாம வளர்ச்சி குறித்து ஆராயும் இயல் ஆகும். **விடை: தொல்மானுடவியல்**
2. வரலாற்றின் தந்தை எனக் கருதப்படுபவர் ________. **விடை: ஹெரோடோடஸ்**
3. உயிரியல் பரிணாமக் கொள்கையை வெளியிட்டவர் ________. **விடை: சார்லஸ் டார்வின்.**
4. ஐரோப்பாவில் வாழ்ந்த பழங்கால மனித இனம் ________. **விடை: குரோமக்னான்.**
5. மாதிரிகளின் காலத்தைக் கணிக்க ________ கதிர்கள் பயன்படுத்தப்படுகின்றன. **விடை: காஸ்மிக்**
6. தூத்துக்குடி அருகே சிவப்பு மணல் குன்றுகள் உள்ள பகுதி ________ என்று அழைக்கப்படுகிறது. **விடை: தேரி**

## கூற்றுகள் மற்றும் காரணங்கள் :

**1. கூற்று** : எண்ணங்கள், அனுபவங்கள் மற்றும் புலனாற்றல்களால் அறிவையும், புரிதலையும் பெறும் மனதின் செயல்பாடு அறிவாற்றல் என்று சொல்லப்படுகின்றது.

**காரணம்** : இது மனிதர்களின் சிந்தனை வளர்ச்சியுடன் தொடர்புடையது அல்ல.

அ) கூற்றும் காரணமும் சரிகூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது.

ஆ) கூற்றும் காரணமும் சரிகூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை.

இ) கூற்று சரி; காரணம் தவறு.

ஈ) கூற்றும், காரணமும் தவறானவை. **[விடை: இ]**

2. **கூற்று** : நவீன மனிதர்களின் இனமான ஹோமோ சேப்பியன்ஸ் இனத்தில் நியாண்டர்தால் இனமும் அடங்கும்.

**காரணம்** : இந்த இனம் நிமிர்ந்து இரண்டு கால்களால் நடக்கும், பெரிய மூளை உண்டு. கருவிகளைப் பயன்படுத்தும்.

அ) கூற்றும் காரணமும் சரி; கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது.

ஆ) கூற்றும் காரணமும் சரி கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை.

இ) கூற்று சரி; காரணம் தவறு.

ஈ) கூற்றும், காரணமும் தவறானவை. **[விடை: அ]**

3. (i) **சிஸ்ட் என்பது ஒருவகை மண்பாண்டமாகும்.**

(ii) **மென்ஹிர் என்பது இரும்பாலான நடு தூண் ஆகும்.**

(iii) **போர்ட் ஹோல் என்பது ஆன்மா வந்து சொல்ல கல்லறை கற்திட்டையிலுள்ள துளை ஆகும்.**

(iv) **கல்லால் உருவாக்கப்பட்ட டோல்மென்கள் ஈமச் சடங்கில் நினைவுச் சின்னமாக நிறுவப்பட்டன.**

அ) (i) சரி ஆ) (i) மற்றும் (ii) சரி

இ) (i) மற்றும் (iv) சரி ஈ) (iii) மற்றும் (iv) சரி **[விடை: ஈ]**

4. (i) **தொல் பழங்காலத்திற்கு எழுத்துப்பூர்வ சான்றுகள் கிடையாது.**

(ii) **வரலாற்றுக் காலத்தில் எழுத்துப்பூர்வமான சான்றுகளும், தொல்லியல் சான்றுகளும் உண்டு.**

(iii) **இரும்புக் கால சான்றுகள் தமிழ்நாட்டில் காணப்படவில்லை.**

(iV) **புதிய கற்காலம் பண்பாட்டுக் காலம் என அழைக்கப்படுகின்றது.**

அ) (i) சரி ஆ) (i) மற்றும் (ii) சரி

இ) (i) மற்றும் (iv) சரி ஈ) (iii) மற்றும் (iv) சரி **[விடை: ஆ]**

## V. சுருக்கமான விடையளி :

**1. தொல்லியல் என்றால் என்ன?**

தொல் பொருள்களை ஆராய்ந்து, விளக்கமளிப்பதன் வழியாக மனிதர்களின் கடந்த காலம் குறித்து ஆராயும் இயல் தொல்லியல் ஆகும்.

**2. புதிய கற்காலம் புரட்சி என்றால் என்ன?**

புதிய கற்காலத்தில் விலங்குகளைப் பழக்குதல் அறிமுகப்படுத்தப்பட்டது. நதிக்கரைகளில் வாழ விரும்பினர். உணவு உற்பத்தி உபரிக்கு இட்டுச் சென்றது. இந்த உபரி உணவு உற்பத்தி நாகரீகங்கள் உருவாக காரணமாயிற்று. இக்காலத்தில் நிரந்தரமான வீடுகள் கட்டப்பட்டன. பெரிய ஊர்கள் உருவாகின. எனவே இவை புதிய கற்காலப் புரட்சி என்று அழைக்கப்படுகிறது.

**3. இரும்புக் காலத்தின் பண்பாட்டினைக் கூறுக.**

இரும்புக் காலத்தின் பண்பாட்டு அம்சங்கள்:

- ✦ உணவு சேகரிப்போரும், மேய்ச்சல் சமூகத்தினரும் ஒரே சமயத்தில் வாழ்ந்தனர்.
- ✦ குழுத் தலைவர் உருவாதல்.
- ✦ இரும்பின் பயன்பாடு அறிதல்.
- ✦ கரும்பு சிகப்பு மண்பாண்டங்கள் உருவாக்கப்படல்.

**4. கீழ்ப் பழங்கால கைக்கோடாரிகள், பிளக்கும் கருவிகள் கண்டெடுக்கப்பட்ட இடங்கள் யாவை?**

கீழ்ப் பழங்கால கைக்கோடாரிகள், பிளக்கும் கருவிகள் கண்டெடுக்கப்பட்ட இடங்கள் பல்லாவரம், குடியம் குகை, அதிரம்பாக்கம், வட மதுரை, எருமை வெட்டிப்பாளையம், பாரிகுளம், வட ஆற்காடு, தர்மபுரி.

## VI. விரிவான விடையளி :

**1. லெமூரியா கண்டமும் தமிழர்களும் குறித்து விவரி.**

- ✦ சில ஆய்வாளர்கள், மூழ்கிய லெமூரியா கண்டத்தில் தமிழர்கள் தோன்றியதாகக் கருதுகின்றனர். லெமூரியா கண்டம் குறித்த இக்கருத்து 19 ம் நூற்றாண்டில் முன்வைக்கப்பட்டது.
- ✦ தமிழ் இலக்கியக் குறிப்புகள் கடல் கொண்டதைப் பற்றி கூறுகின்றன. இவை கன்னியாகுமரியைச் சுற்றியுள்ள சில பகுதிகள் கடலுக்கடியில் மூழ்கடிக்கப்பட்டதாகச் சொல்கின்றன.
- ✦ பொ. ஆ. மு . 5000 க்கு முன் இலங்கையின் சில பகுதிகள் தமிழ்நாட்டின் நிலப்பகுதியுடன் இணைக்கப்பட்டிருந்தன.
- ✦ கடல் மட்ட உயர்வினால், சில நிலப்பகுதிகளும் இலங்கை, இந்திய இணைப்பும் கடலடியில் சென்றிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

வரலாறு

பாடம் 2

# பண்டைய நாகரிகங்கள்

## பயிற்சிகள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்க :**

**1. சொற்களைப் படங்கள் மூலம் உணர்த்தும் குறியீட்டு முறையை ________ என்கிறோம்**

அ) லோகோகிராபி ஆ) பிக்டோகிராபி

இ) ஐடியாகிராபி ஈ) ஸ்ட்ராட்டிகிராபி **[விடை: ஆ]**

**2. எகிப்தியர்கள் இறந்த உடல்களைப் பதப்படுத்தி பாதுகாத்த முறை ________.**

அ) சர்கோபகஸ் ஆ) ஹைக்சோஸ்

இ) மம்மியாக்கம் ஈ) பல கடவுள்களை வணங்குதல் **[விடை: இ]**

**3. சுமேரியர்களின் எழுத்து முறை ________ ஆகும்**

அ) பிக்டோகிராபி ஆ) ஹைரோகிளிபிக்

இ) சோனோகிராம் ஈ) க்யூனிபார்ம் **[விடை: ஈ]**

**4. ஹரப்பா மக்கள் ________ பற்றி அறிந்திருக்கவில்லை.**

அ) தங்கம் மற்றும் யானை ஆ) குதிரை மற்றும் இரும்பு

இ) ஆடு மற்றும் வெள்ளி இ) எருது மற்றும் பிளாட்டினம் **[விடை: ஆ]**

**5. சிந்து சமவெளி மக்கள், 'லாஸ்ட் வேக்ஸ்' முறையை அறிந்திருந்தார்கள் என்பதைத் தெரிவிக்கும் வெண்கலச்சிலை ________ ஆகும்.**

அ) ஜாடி ஆ) மதகுரு அல்லது அரசன்

இ) நடனமாடும் பெண் ஈ) பறவை **[விடை: இ]**

6. (i) **மெசபடோமியாவின் மிகப் பழமையான நாகரிகம் அக்காடியர்களுடைய நாகரிகம் ஆகும்.**

(ii) **சீனர்கள் ஹைரோகிளிபிக் முறையை வளர்த்தெடுத்தார்கள்.**

(iii) **யூப்ரடிஸ், டைகிரிஸ் ஆகிய ஆறுகள் மன்னார் வளைகுடாவில் கலக்கின்றன.**

(iv) **பாபிலோனிய அரசரான ஹமுராபி பெரும் சட்ட வல்லுனர் ஆவார்.**

அ) (i) சரி ஆ) (i) மற்றும் (ii) சரி இ) (iii) சரி ஈ) (iv) சரி **[விடை: ஈ]**

7. (i) **யாங்சி ஆறு சீனாவின் துயரம் என்று அழைக்கப்படுகிறது.**

(ii) **வு-டி சீனப்பெருஞ்சுவரைக் கண்டுபிடித்தனர்.**

(iii) **சீனர்கள் வெடிமருந்தைக் கண்டுபிடித்தனர்.**
(iv) **தாவோமிசத்தை நிறுவியவர் மீனியஸ் என்று சீன மரபு கூறுகிறது.**

அ) (i) சரி ஆ) (ii) சரி
இ) (iii) சரி ஈ) (iii) மற்றும் (iv) சரி **[விடை: இ]**

**8. பின்வருவனவற்றுள் மெசபடோமியாவைச் சேர்ந்த நான்கு நாகரிகங்களின் சரியான காலவரிசை எது?**

அ) சுமேரியர்கள்- அஸிரியர்கள் - அக்காடியர்கள் - பாபிலோனியர்கள்
ஆ) பாபிலோனியர்கள் -சுமேரியர்கள - அஸிரியர்கள் - அக்காடியர்கள்
இ) சுமேரியர்கள் - அக்காடியர்கள் - பாபிலோனியர்கள் - அஸிரியர்கள்
ஈ) பாபிலோனியர்கள் - அஸிரியர்கள் - அக்காடியர்கள் - சுமேரியர்கள் **[விடை: இ]**

**9. கூற்று** : மெசபடோமிய நாகரிகத்தின் அஸிரியர்கள் சிந்துவெளி நாகரிகத்தின் சமகாலத்தவர் ஆவர்.

**காரணம்** : அஸிரிய ஆட்சியாளரின் ஆவணம் ஒன்று மெலுஹாவிலிருந்து வந்த கப்பல்கள் பற்றி கூறுகின்றது.

அ) கூற்றும் காரணமும் சரி; கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது.
ஆ) கூற்றும் காரணமும் சரி; ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை.
இ) கூற்று சரி; காரணம் தவறு.
ஈ) கூற்றும் காரணமும் தவறானவை. **[விடை: ஈ]**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. ________ என்பது மனிதத்தலையும் சிங்க உடலும் கொண்ட, கல்லால் ஆன மிகப் பெரிய உருவம் ஆகும். **விடை: ஸ்பிங்க்ஸின்**
2. எகிப்தியர்கள் தொடக்க காலத்தில் பயன்படுத்திய உருவ எழுத்துகள் சார்ந்த முறை ________ ஆகும். **விடை: ஹைரோகிளிபிக்**
3. ________ என்பது பல்வேறு குற்றங்களுக்கான சட்டங்களை விளக்கிக் கூறும் பண்டைய பாபிலோனியாவில் ஒரு முக்கியமான ஆவணம் ஆகும். **விடை: ஹமுராபியின் சட்டத் தொகுப்பு**
4. 'செள' அரசின் தலைமை ஆவணக்காப்பாளர் ________ ஆவார். **விடை: லாவோ ட் சு**
5. ஹரப்பா நாகரிகம் நிலவிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட பானைகளின் மீதுள்ள ________ உருவங்களும், ஒவியங்களும் அவர்களின் கலைத்திறனை உணர்த்துகின்றன. **விடை: சுடுமண்ணாலான**

## III. சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும் :

1. அ) ஹரப்பாவில் உள்ள பெருங்குளம் அருகில் சில அறைகள் நன்கு கட்டப்பட்டிருந்தது.
ஆ) க்யூனிபார்ம் குறிப்புகள் கில்காமெஷ் காவியத்துடன் தொடர்புடையவை.

இ) சுடுமண்ணால் செய்யப்பட்ட உருவங்களும், செம்பில் செய்யப்பட்ட நடனமாடும் பெண் உருவமும் எகிப்தியர்களின் கலைத்திறனை உணர்த்துகின்றன.

ஈ) மெசபடோமியர்கள் சூரிய நாள்காட்டி முறையை வகுத்தார்கள். **[விடை: ஆ]**

2. அ) பழங்கால எகிப்தில் அமோன் - கடவுளின் அரசனாகக் கருதப்பட்டார்.

ஆ) அரண்களால் சூழ்ந்த ஹரப்பா நகரத்தில் கோயில்கள் இருந்தன.

இ) பெரிய ஸ்பிங்ஸ் என்பது பழங்கால மெசபடோமியாவில் உள்ள பிரமிடு வடிவ நினைவுச் சின்னம்மாகும்.

ஈ) பானை வனைவதற்கான சக்கரத்தைக் கண்டுபிடித்த பெருமை எகிப்தியர்களைச் சாரும். **[விடை: அ]**

## IV. பொருத்துக (விடையுடன்) :

| | | | |
|---|---|---|---|
| 1. | பாரோ | - | எகிப்திய அரசர் |
| 2. | பாப்பிரஸ் | - | ஒருவகைப் புல் |
| 3. | பெரும் சட்ட வல்லுனர் | - | ஹமுராபி |
| 4. | கில்காமெஷ் | - | பூமியின் மிகப் பழமையான எழுத்துக் காவியம் |
| 5. | பெருங்குளம் | - | மொகஞ்சதாரோ |

## V. சுருக்கமான விடை தருக :

**1. எகிப்தியர்கள் கலை கட்டடக்கலையில் திறன் பெற்றவர்கள் - விளக்குக.**

✦ எகிப்தியர்களின் கலை கட்டடக்கலையில் சிறப்புற்றிருந்தனர்.

✦ அவர்களின் எழுத்து முறை கூடச் சித்திர வடிவில் இருந்தது.

✦ பாரோக்களின் சமாதிகளான பிரமிடுகள் இன்றும் பிரம்மாண்டமான நினைவுச் சின்னங்களாக உள்ளன.

✦ கெய்ரோவிற்கு அருகில் உள்ள கிஸா பிரமிடுகள் உலக அதிசயங்களில் ஒன்றாக கருதப்படுகின்றன.

✦ 'ஸ்பிங்ஸின்' - சிங்க உடலும் மனித முகமும் கொண்ட சிற்பங்களில் ஒன்றாகும்.

**2. சிகுரட்களின் முக்கியமான பண்புகளைக் கூறுக.**

✦ பண்டைய மெசபடோமியாவின் நகரின் மையத்தில் மேடை மீது சிகுராட் என்னும் கோவில்கள் கட்டப்பட்டன.

✦ கோவிலை சுற்றி சடங்குகளுக்கான தாழ்பாரங்கள், புனித இடங்கள் ஆண் மற்றும் பெண் மதகுருமார்களின் கல்லறைகள் சடங்குகளுக்கான விருந்து அரங்குகள் போன்ற வளாகங்கள் இருந்தன.

**3. ஹமுராபியின் சட்டம் முக்கியமான சட்ட ஆவணமாகும் - விவரி.**

✦ பல்வேறு குற்றங்களுக்கான சட்டங்களைக் கூறும் ஒரு முக்கியமான சட்ட ஆவணம் ஹமுராபியின் சட்டத் தொகுப்பு ஆகும்.

- குடும்ப உரிமைகள், வணிகம், அடிமை முறை, வரிகள், கூலி - பற்றிய வழக்குகளின் 282 பிரிவுகள் ஆவணத்தில் இருந்தன.
- இது "கண்ணுக்குக் கண்", "பல்லுக்குப் பல்" என்ற பழிவாங்கும் கொள்கையின் அடிப்படையில் அமைந்தது.

## VI. தலைப்பு வினாக்கள் :

**ஒவ்வொரு தலைப்பின் கீழேயும் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளி.**

### 1. தொடக்க கால நாகரிகம் :

**அ) நாகரிகம் என்றால் என்ன?**
நாகரிகம் என்பது ஒரு முன்னேறிய, முறைப்படுப்படுத்தப்பட்ட வாழ்க்கை முறை என்று கருதப்படுகிறது.

**ஆ) தொடக்க கால நாகரிகங்களின் பெயர்களை எழுதுக.**
எகிப்திய நாகரிகம், மெசபடோமிய நாகரிகம், சிந்துவெளி நாகரிகம், சீன நாகரிகம்

**இ) பெரும்பாலான மக்களுக்கு வாழ்வாதாரமாக இருந்தவை எவை?**
வேளாண்மையும், கால்நடையும் பெரும்பாலான மக்களுக்கு வாழ்வாதாரமாக இருந்தன.

**ஈ) நாகரிகம் வடிவம் பெறத் தொடங்கியபோது என்ன நடந்தது?**
கிராமங்களில் மக்கள் பெரிய குழுக்களாக வாழத் தொடங்கினர். பண்பாட்டு வளர்ச்சி ஏற்பட்டது. மொழி, இலக்கியம், அறிவியல், கணிதம், வானவியல் பற்றிய ஆராய்ச்சிகள் வளர தொடங்கின.

### 2. எகிப்திய நாகரிகத்தின் பண்புகள் :

**அ) எகிப்து ''நைல் நதியின் நன்கொடை'' என்று அழைக்கப்படுவது ஏன்?**
நைல் நதி ஆண்டுதோறும் புதிய வண்டல் மண்ணை படியவைத்தலால் வேளாண்மை செழித்து உபரி உற்பத்தி ஏற்பட்டது.

**ஆ) பாரோ மற்றும் விசிரியர்கள் என்போர் யார்?**
எகிப்திய அரசர் "பாரோ'' என்றழைக்கப்பட்டார். பாரோவின் கீழ் மாகாணங்களை ஆளும் நிர்வாகி 'விசிரியர்' என்றழைக்கப்பட்டார்.

**இ) பிரமீடுகள் என்றால் என்ன? அதனை ஏன் கட்டினார்கள்?**
பாரோவின் சமாதிகளே பிரமீடுகள் ஆகும்.

**ஈ) மம்மி உருவாக்க முறையைக் கூறு.**
சோடியம் கார்பனேட், சோடியம் பைகார்பனேட் ஆகியவற்றின் கலவையான 'நாட்ரன் உப்பு' இறந்த உடல் மீது இடப்படும். 40 நாட்களில் உப்பு உடலிலுள்ள ஈரப்பதத்தை உறிஞ்சிய பின், உடலை மரத்தூளால் நிரப்பி, லினன் துண்டுகளால் சுற்றி துணியால் மூடி சார்க்கோபேகஸ் எனப்படும் கல்லாலான சவப்பெட்டியில் பாதுகாப்பார்கள்.

## VII. விரிவான விடையளிக்கவும் :

**1. ஹரோகிளிபிக்ஸ், க்யூனிபார்ம் - இவற்றை அவற்றின் முக்கியமான கூறுகளுடன் விளக்குக.**

**ஹரோகிளிபிக்ஸ் :**

- ✦ எகிப்தியாகிளன் சித்திர எழுத்து முறை ஹரோகிளிபிக்ஸ் என்று அழைக்கப்படுகிறது.
- ✦ இந்த எழுத்து வகை நினைவுச்சின்னங்களில் உள்ள முத்திரை மற்றும் இதர பொருட்களில் பயன்படுத்தப்பட்டது.
- ✦ இது பிக்டோகிராம் எனப்படும் சித்திர எழுத்து வடிவமாகும்.
- ✦ இந்த எழுத்தைப் பயன்படுத்தி ஏராளமான புத்தகங்களும் பிரதிகளும் எழுதப்பட்டன.
- ✦ பிரெஞ்சு அறிஞரான பிராங்குவா சம்போலியன் எகிப்திய எழுத்துகளுக்கு பொருள் கண்டுபிடித்தார்.
- ✦ எகிப்திய கல்வெட்டு நெப்போலியனால் பிரான்சுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இப்போது லண்டன் பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

**க்யூனிபார்ம் :**

- ✦ சுமேரிய எழுத்து முறை க்யூனிபார்ம் என்று அழைக்கப்படுகிறது.
- ✦ எழுத்துகள் ஆப்பு வடிவத்தில் இருப்பதால் அதற்கு இப்பெயர் இடப்பட்டது.
- ✦ பொ.ஆ.மு.3000-ல் உருவான இம்முறை உலகின் பழமையான எழுத்து முறையில் ஒன்றாகும்.
- ✦ இவ்வெழுத்துகள் சுட்ட களிமண் பலகைகளில் எழுதப்பட்டது.

**2. தத்துவம், இலக்கியம் ஆகிய துறைகளில் சீனத்தின் தாக்கம் எந்தளவிலானது என்பதைக் கூறு.**

**ஹரோகிளிபிக்ஸ் :**

- ✦ சீன நாகரிகத்திற்கு பங்களித்த தத்துவ ஞானிகள் மற்றும் கவிஞர்கள். லாவோ-ட்-சு, கன்பூசியஸ், மென்சியஸ் மோ டி, தாவோ சின், சன்-ட்-சூ.
- ✦ சீன நாகரிகத்தில் எழுதப்பட்ட முக்கிய நூல்கள்.

**சன்-ட்-சூ எழுதிய ‘போர்க் கலை அதிகாரபூர்வ சீன அரசு நூல் :**
தி ஸ்பிரிங் அண்ட் ஆடோம் அனல்ஸ் (வசந்த கால, இலையுதிர் கால ஆண்டு குறிப்புகள்)

**மஞ்சள் பேரரசரின் :**
கேனன்ஸ் ஆஃப் மெடிசின் (மருத்துவ குறிப்புத் தொகுப்புகள்)

**தாவோயிசம் :**

லாவோ ட் சு - செள அரசின் தலைமை ஆவணக் காப்பாளராக இருந்தார். இவர்தான் தாவோயிசத்தைத் தோற்றுவித்தார். ஆசை தான் அனைத்து துன்பங்களுக்கும் மூலகாரணம் என வாதிட்டார்.

**கன்பூசியஸ் :**

இவர் சீன தத்துவ ஞானி மற்றும் அரசியல் சீர்திருத்தவாதி. அவரது பெயருக்கு தலைவர் என்று பொருள். "ஒருவரது தனிப்பட்ட வாழ்க்கை சீர்திருத்தப்பட்டால், அவரது குடும்ப வாழ்க்கை முறைப்படுத்தப்படும். குடும்பம் முறைப்படுத்தப்பட்டால், தேச வாழ்வு முறைப்படுத்தப்பட்டு விடும் என்று குறிப்பிட்டார்.

**3. சிந்துவெளி நாகரிகத்தின் மறைந்த பொக்கிசங்களைப் பற்றி எழுதுக.**

✦ இந்நாகரிகம், பரவியுள்ள முக்கிய பகுதிகள் குஜராத், பாகிஸ்தான், இராஜஸ்தான் மற்றும் ஹரியனா.

✦ ஹரப்பா மக்கள் சுட்ட, சுடாத செங்கற்களையும், கற்களையும் கட்டுமானங்களுக்கும் பயன்படுத்தினார்கள்.

✦ மொஹஞ்சதாரோவில் உள்ள மாபெரும் குளியல் குளம் ஒரு முக்கியமான கட்டுமானமாகும். இக்குளத்தின் அருகே நன்கு தளமிடப்பட்ட பல அறைகளும் உள்ளன. தோண்டியெடுக்கப்பட்ட சில கட்டுமானங்கள் களஞ்சியங்கள் போல் காணப்படுகின்றன.


✦ ஹரப்பா மக்கள் ஓவியங்கள் தீட்டப்பட்ட மட்பாண்டங்களைப் பயன்படுத்தினார்கள். மட்பாண்டங்கள் ஆழமான சிவப்பு வண்ணம் பூசப்பட்டு கருப்பு நிற ஓவியங்கள் தீட்டப்பட்டவை.

✦ ரோஹ்ரி சேர்ட் என்பவை பாக்கிஸ்தானிலுள்ள ரோஹரி என்ற பகுதியிலிருந்து பெறப்பட்ட செர்ட் மூலப்பொருள்களைக் குறிக்கிறது.

## வரலாற்றுடன் வலம் வருக


**மாணவர் செயல்பாடுகள் :**

**1. வெண்கலக் கால நாகரிகம் நிலவிய இடங்களை உலக வரைபடத்தில் குறிக்கவும்.**




உலகின் பண்டைய நாகரிகங்கள்

2. பிரமிடுகள் மற்றும் எகிப்தியர்களின் எழுத்து முறை குறித்து ஒரு விளக்கப்படம் தயாரிக்கவும்.






3. சிந்துவெளி நாகரிகத்தைச் சேர்ந்த முத்திரைகள், பானைகள் உள்ள படங்களைச் சேகரிக்கவும்.











**ஆசிரியரின் வழிகாட்டுதலுடன் செய்ய வேண்டியவை :**

**1. பழங்கால நாகரிகங்களை ஒப்பிட்டு ஒரு துண்டுப்பிரசுரம் தயாரிக்கவும்.**

| எகிப்து நாகரீகம் | மெசபடோமிய நாகரீகம் | சீன நாகரீகம் | சிந்துவெளி நாகரீகம் |
|---|---|---|---|
| நைல் நதி | யூப்ரடீஸ், டைகிரீஸ் நதிகள் | ஹோவாங்ஹோ, யாங்ட்சி ஆறுகள் | சிந்து நதி |
| நைல் நதியின் நன்கொடை எகிப்து | வளமான பிறை நிலம் | சீனாவின் துயரம் மஞ்சள் ஆறு | வேளாண்மையும் கால்நடை வளர்ப்பு |
| அரசர்கள்-பாரோக்கள் | ஆப்பு எழுத்து முறை (கியூனிபார்ம்) | தத்துவ ஞானிகள் கன்பூசியஸ், லாவோட்சு | பருத்தி பட்டு ஆடைகள் |
| பாப்பிரஸ்-காகிதம் | மார்குத்-தலைமை தெய்வம் | சித்தர எழுத்து முறை | பிற நாகரீகங்களுடன் வணிக தொடர்பு |
| ஹைரோகிளிபிக் எழுத்து முறை | சிகுராட் கோயில் | சீனப் பெருஞ்சுவர் உலக அதிசயம் | மதம் - இயற்கை வழிபாடு |
| கடவுள்கள் ரா, அமோன், சேத், தோத்ஹோரஸ், அனுபிஸ் | கடவுள்கள் என்லில்,நின்லின், மார்டுக் அஸீர், இஸ்டார் | காகிதம், பட்டு, தேயிலை, வெடிமருந்து. | பொருள் கண்டுபிடிக்கப்படாத எழுத்துகள் |

| | | | |
|---|---|---|---|
| பிரமிடுகள் | பாபேல் கோபுரம் | | முறையான எடை கற்கள் |
| ஸ்பிங்ஸ் | தொங்கும் தோட்டம் | | ஈரடிமான எண், எடைகள் |
| மம்மி பதப்படுத்தப் பட்ட உடல்கள் | ஹமுராபியின் சட்டத் தொகுப்பு | | |
| கண்ணாடி, கடிகாரம், நீர்க் கடிகாரம் | கணிதம், வானவியல், மருத்துவம் | | |

2. **சிந்து நாகரிகம் குறித்து துண்டுப் படங்களைச் சேரித்து, ஒரு படத்தொகுப்பு தயார் செய்.**
இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்தோ, அல்லது கடைகளிலிருந்து படங்களை வாங்கியோ, படத்தொகுப்பை தயார் செய்யலாம்.

## கூடுதல் வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் :

1. **நைல் நதியின் நன்கொடை என்று குறிப்பிடப்படும் நாடு**
அ) எத்தியோப்பியா ஆ) பாலஸ்தீனம்
இ) சூடான் ஈ) எகிப்து **[விடை: ஈ]**

2. **பாரோவின் கீழ் மாகாணங்களை ஆளும் நிர்வாகி**
அ) விசியர் ஆ) மேயர் இ) ஆளுநர் ஈ) அமைச்சர் **[விடை: அ]**

3. **கெய்ரோவிற்கு அருகில் உள்ள பிரமிடுகள் ________ பிரமிடுகள் என்று அழைக்கப்படுகின்றன.**
அ) ஸ்பிங்ஸ் ஆ) கிஸா இ) அனுபிஸ் ஈ) அமோன் **[விடை: ஆ]**

4. **எகிப்தியர்களின் முதன்மையான கடவுள்**
அ) சேத் ஆ) தோத் இ) ரே ஈ) ஹோரஸ் **[விடை: இ]**

5. **ஆசியாவின் வணிக, பண்பாட்டு மையமாக திகழ்ந்த அக்காட் நகரத்தின தற்போதைய பெயர்**
அ) பாபிலோன் ஆ) கெய்ரோ இ) நைரோபி ஈ) காபூல் **[விடை: அ]**

6. **ஹமுராபியின் சட்டத் தொகுப்பு ________ பிரிவுகளைக் கொண்டது.**
அ) 272 ஆ) 262 இ) 282 ஈ) 292 **[விடை: இ]**

7. (i) **புதிய கற்கால வாழ்க்கை முறையில் கிராமங்களில் மக்கள் பெரிய குழுக்களாக, தொல்குடி சமுதாயங்களாக இருந்தனர்.**
(ii) **இடைக்கற்காலக் காலகட்டத்தில் உருவான தொல்குடி அமைப்புகள் பெரும்பாலும் சமத்துவ இயல்பு கொண்டதாகவே இருந்தது.**

(iii) **தொல்குடி சமுதாயம் வேட்டையாடுவோர் ஆவர்.**

(iv) **தொல்குடி சமுதாயம் அரசின் கட்டுபாட்டில் இயங்கியது.**

அ) (i) சரி ஆ) (i) மற்றும் (ii) சரி

இ) (iii) சரி ஈ) (iv) சரி **[விடை: ஆ]**

8. (i) **ஸ்பிங்ஸ் பிரம்மாண்டமான சிலை. சிங்க உடலும் மனித முகமும் கொண்ட சுண்ணாம்புக்கல் படிமம்.**

(ii) **ஸ்பிங்ஸ் மனித உடலும் சிங்க முகமும் கொண்ட சுண்ணாம்புக்கல் படிமம்.**

(iii) **ஸ்பிங்ஸ் பாரோ காஃப்ரெ காலத்தைய ஓவியமாகும்.**

(iv) **ஸ்பிங்ஸ் பாரோ காஃப்ரெயின் சமாதியாகும்.**

அ) (i) சரி ஆ) (i) மற்றும் (ii) சரி

இ) (iii) சரி ஈ) (iv) சரி **[விடை: அ]**

## சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும் :

1. **கூற்று** : யூப்ரடிஸ், டைகிரிஸ் என்ற நதிகளுக்கிடையே தோன்றிய நாகரீகம் மெசபடோமிய நாகரிகம் ஆகும்.

**காரணம்** : கிரேக்க மொழியில் "மெஸோ" என்றால் 'நடுவில்' என்றும் "பொடோமஸ்" என்றால் 'ஆறு' என்றும் பொருள்.

அ) கூற்றும் காரணமும் சரி; கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது.

ஆ) கூற்றும் காரணமும் சரி;கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை.

இ) கூற்று சரி; காரணம் தவறு.

ஈ) கூற்றும், காரணமும் தவறானவை. **[விடை: அ]**

2. **கூற்று** : அஸிரிய பேரரசு உலகின் முதல் இராணுவ அரசு எனக் கருதப்படுகிறது.

**காரணம்** : இரும்புத் தொழில் நுட்பத்தை அறிந்து வைத்திருந்தனர்.

அ) கூற்றும் காரணமும் சரி; கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது.

ஆ) கூற்றும் காரணமும் சரி; கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை.

இ) கூற்று சரி; காரணம் தவறு.

ஈ) கூற்றும், காரணமும் தவறானவை. **[விடை: ஆ]**

## II. கோடிட்ட இடத்தை நிரப்புக :

1. நைல் நதி ________ ஏரியில் உற்பத்தியாகி மத்திய தரைக் கடலில் கலக்கிறது.
**விடை: விக்டோரியா**

2. பண்டைய ரோமானியப் பேரரசின் தலைநகரம் இத்தாலியில் உள்ள ________. **விடை: ரோம்**

3. எகிப்திய அரசர் ________ என்று அழைக்கப்பட்டார். **விடை: பாரோ**

4. எகிப்திய பாரோவான ________ சமாதி எகிப்தில் லக்ஸருக்கு அருகே உள்ள அரசர்கள் பள்ளத்தாக்கில் உள்ளது. **விடை: டூடன் காமனின்**

5. எகிப்தியர்களின் எழுத்து முறை ________ எனும் சித்திர எழுத்து முறையாகும்.
விடை: ஹைரோகிளிபிக்

6. சீனப்பெருஞ்சுவரைக் கட்டியவர் ________. விடை: ஷி ஹீவாங் டி

7. கியூனிபார்ம் எழுத்துக்களில் காணப்படும் ________ என்ற குறிப்பு சிந்து பகுதியைக் குறிப்பதாகும். விடை: மெலுஹா

## III. பொருத்துக (விடையுடன்) :

1.

| | | |
|---|---|---|
| 1. சார்க்கோபேகஸ் | - | கல்லாலான சவப்பெட்டி |
| 2. லாபிஸ் லாசுலீ | - | நீல வைடூரியக் கல் |
| 3. இபிஸ் | - | பறவையின் முகம் |
| 4. அனுபிஸ் | - | நரியின் தலை |
| 5. பேப்பர் | - | பாப்பிரஸ் |

2.

| | | |
|---|---|---|
| 1. பொடோமஸ் | - | ஆறு |
| 2. அஸீர்பனிபால் | - | கியூனிபார்ம் ஆவண நூலகம் |
| 3. சிகுராட் | - | கோவில் |
| 4. இஸ்டார் | - | பெண் தெய்வம் |
| 5. ஷி ஹீவாங் டி | - | சுவர்க்கத்தின் புதல்வர் |

## IV. சுருக்கமான விடையளி :

**1. எகிப்து நைல் நதியின் நன்கொடை என அழைக்கப்படுவது ஏன்?**

- நைல் நதி ஆண்டுதோறும் புதிய வண்டல் மண்ணைக் கொண்டு வந்து படிவித்தலால், நைல் சமவெளி செழிப்பாக இருக்கின்றது. இந்த வண்டல் மண் வேளாண்மையைச் செழிக்க வைத்து உபரி உற்பத்திக்கு உதவியது.
- இது எகிப்திய நாகரிக வளர்ச்சிக்கு வித்திட்டது. நைல் நதியின் இருபக்கங்களிலும் பாலைவனங்களே காணப்படுகின்றன.
- எனவே நைல் நதியின் கரையில் உள்ள எகிப்து நைல் நதியின் நன்கொடை என அழைக்கப்படுகிறது.

**2. 'மம்மியாக்கம்' என்றால் என்ன?**

- எகிப்தியர்கள் மரணத்திற்குப் பிறகு வாழ்வு இருப்பதாக நம்பினார்கள். எனவே அவர்கள் இறந்தவர்களின் உடல்களைப் பதப்படுத்தி வைத்தார்கள்.
- இவ்வாறு உடலைப் பதப்படுத்தி வைக்ககும் முறைக்கு மம்மியாக்கம் என்று பெயர். பாரோக்களின் உடலைப் பாதுகாக்க பிரமிடுகளையும், சமாதிகயையும் கட்டினர்.

**3. கன்பூசியஸ் குறிப்பு வரைக.**

- கன்பூசியஸ் ஒரு புகழ்பெற்ற சீன தத்துவ ஞானி. அவர் ஒரு அரசியல் சீர்திருத்தவாதி. அவரது பெயருக்கு 'தலைவர் (குங்)' என்று பொருள்.

- ✦ அவர் ஒருவரது தனிப்பட்ட வாழ்க்கையை சீர்திருத்துவதை வலியுத்தினார்.
- ✦ ஒருவரது தனிப்பட்ட வாழ்க்கையை சீர்திருத்தப்பட்டால், அவரது குடும்ப வாழ்க்கை முறைப்படுத்தப்படும்.
- ✦ குடும்பம் முறைப்படுத்தப்பட்டு விட்டால் தேச வாழ்வு முறைப்படுத்தப்பட்டு விடும் என்று குறிப்பிடுகிறார்.

**4. சீன நாகரிகத்தின் பங்களிப்பு நான்கினைக் கூறுக.**

- ✦ எழுத்து முறையை மேம்படுத்தியது.
- ✦ காகிதம் கண்டுபிடித்தது.
- ✦ பட்டுப் பாதையைத் திறந்தது.
- ✦ வெடி மருந்தைக் கண்டுபிடித்தது.

**5. சிந்து சமவெளி நாகரிகம் தற்போது சிந்துவெளி நாகரிகம் என்று அழைக்கப்படுவது ஏன் ?**

- ✦ ஹரப்பா தான் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட இடம் என்பதால், சிந்து வெளி நாகரிகம் ஹ ரப்பா நாகரிகம் என்றும் அழைக்கப்படுகிறது.
- ✦ இந்த நாகரிகம் சிந்து நதிக்கு அப்பாலும் பரவியுள்ளதால் சிந்து சமவெளி நாகரிகம் என்று முன்னர் அழைக்கப்பட்டதற்கு மாறாக சிந்து வெளி நாகரிகம் என்று அழைக்கப்படுகிறது.

## V. விரிவான விடையளி :

**1. சிந்து வெளி நாகரிகம், தமிழர் நாகரிகத்துடன் தொடர்புடையது ஆராய்க.**

- ✦ தென்னிந்தியாவின் பெருங்கற்கால முதுமக்கள் தாழிகளில் காணப்படும் கோட்டுருவக் குறியீடுகள் சிந்து வெளி எழுத்துக்களை ஒத்திருக்கின்றன.
- ✦ பாக்கிஸ்தானின் சிந்து பகுதி ஊர்களின் பெயர்கள் தமிழ் ஊர்ப் பெயர்களுடன் தொடர்புடைய பெயர்களாகும்.
- ✦ வரலாற்று ஆய்வாளர்கள் தந்தை ஹென்றி, அஸ்கோ பர்போலா, ஐராவதம் மகாதேவன் போன்றோர் சிந்துவெளி எழுத்திற்கும் திராவிட/தமிழ் மொழிக்கும் இடையே ஒற்றுமை உள்ளதை கண்டுபிடித்துள்ளனர்.
- ✦ சிந்து வெளியிலிருந்து சில குழுக்கள் தென்னிந்தியாவிற்கு இடம் பெயர்ந்திருக்கக் கூடும் என நம்புகிறது.
- ✦ தமிழ்நாட்டில் கண்டெடுக்கப்பட்ட கார்னீலியன் பாசிமணிகள், சங்கு வளையல்கள், செம்பு முகம் பார்க்கும் கண்ணாடிகள் ஆகியவை முதலில் சிந்துவெளி மக்களால் அறிமுகம் செய்யப்பட்டவை எனக் கருதப்படுகிறது.

வரலாறு

# பாடம் 3 தொடக்ககாலத் தமிழ்ச் சமூகமும் பண்பாடும்

## பயிற்சிகள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்க :**

**1. சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்ட எழுத்து முறை யாது?**

அ) ஆங்கிலம் ஆ) தேவநாகரி

இ) தமிழ்-பிராமி ஈ) கிரந்தம் [விடை: இ]

**2. தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்குச் சென்ற வியாபாரிகளையும் குதிரை வணிகர்களையும் பற்றிக் குறிப்பிடுகின்ற இலங்கையின் பாலி மொழி வரலாற்று நூல் எது?**

அ) தீபவம்சா ஆ) அர்த்தசாஸ்திரா

இ) மகாவம்சா ஈ) இண்டிகா [விடை: இ]

**3. காடாக இருந்த இடங்களை வேளாண் நிலங்களாக மாற்றுதல், நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்துதல் ஆகிய பெருமைகளுக்கு உரிய சோழ அரசன் யார்?**

அ) கரிகாலன் ஆ) முதலாம் இராஜராஜன்

இ) குலோத்துங்கன் ஈ) முதலாம் இராஜேந்திரன் [விடை: அ]

**4. சேரர்களை பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு எது?**

அ) புகளூர் ஆ) கிர்நார்

இ) புலிமான் கோம்பை ஈ) மதுரை [விடை: அ]

**5. ‘காயல் சிறந்த நகரம்’ என்று விவரித்த வெனீஸ் நகரப் பயணி யார்?**

அ) வாஸ்கோடகாமா ஆ) அல்பெருனி

இ) மார்கோபோலோ ஈ) மெகஸ்தனிஸ் [விடை: இ]

**6.** (i) **பொருள் பரிமாற்றத்துக்கான ஊடகமாக நாணயங்கள் சங்க காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன.**

(ii) **மௌரியர் காலத்தில் வட இந்தியாவில் இருந்த சாதாரண மக்கள் பிராகிருத மொழி பேசினார்கள்.**

(iii) **ரோமானிய ஆவணமான வியன்னா பாப்பிரெஸ் முசிறி உடனான வாணிகத்தைக் குறிப்பிடுகிறது.**

(iv) **தமிழ் இலக்கண நூலான பத்துப்பாட்டில் திணை குறித்த கருத்து இடம்பெற்றுள்ளது.**

அ) (i) சரி ஆ) (ii) சரி

இ) (i) மற்றும் (ii) சரி ஈ) (iii) மற்றும் (iv) சரி **[விடை: இ]**

7. (i) **பதிற்றுப்பத்து பாண்டிய அரசர்களையும் அவர்களின் ஆட்சிப் பகுதிகளையும் குறித்துச் சொல்கிறது.**

(ii) **காவிரிப்பூம்பட்டினத்தில் நடந்த வணிக நடவடிக்கைகளை அகநானூறு விவரிக்கிறது.**

(iii) **சோழர்களின் சின்னம் புலி ஆகும். அவர்கள் புலி உருவம் பொறித்த, சதுர வடிவிலான செம்பு நாணயங்களை வெளியிட்டார்கள்..**

(iv) **நெய்தல் என்பது மணற்பாங்கான பாலைவனப் பகுதி ஆகும்.**

அ) (i) சரி ஆ) (ii) மற்றும் (iii) சரி

இ) (iii) சரி ஈ) (iv) சரி **[விடை: இ]**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. கற்கள், செப்பேடுகள், நாணயங்கள், மோதிரங்கள் ஆகியவற்றில் மீது பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் _________ ஆகும். **விடை: கல்வெட்டுச் சான்றுகள்**
2. கடந்தகாலச் சமூகங்கள் குறித்து அறிந்துகொள்வதற்கான சான்றுகளாக உள்ள சில பொருட்களை மீட்டெடுப்பதற்கு ஓரிடத்தை முறைப்படி தோண்டுதல் _________ ஆகும். **விடை: தொல்லியல் அகழாய்வு**
3. மௌரியர் காலத்தில் ஆட்சிக்கலை மற்றும் பொருளாதாரம் குறித்து கௌடில்யர் எழுதிய நூல் _________ ஆகும். **விடை: அர்த்தசாஸ்திரம்**
4. _________ என்பது பிரிவு அல்லது வகை என்ற பொருளில் செய்யுள்களில் பயன்படுத்தப்பட்ட கருப்பொருள்; மேலும், இது ஒரு வாழ்விடத்தை அதன் தனித்தன்மை வாய்ந்த இயற்கைக் கூறுகளுடன் குறிப்பதாகவும் உள்ளது. **விடை: திணை**
5. கிரேக்கர்கள், ரோமானியர்கள், மேற்கு ஆசியர்கள் ஆகியோரை உள்ளடக்கிய மேற்கத்தியர்களை _________ என்னும் சொல் குறிக்கிறது. **விடை: யவனர்**

## III. சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும் :

1. அ) இரும்பை உருக்கியதற்கான சான்றுகள் கொடுமணல், குட்டூர் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.

ஆ) எரித்ரியன் கடலின் பெரிப்ளூஸ் இந்தியா உடனான மிளகு வணிகம் குறித்து கூறுகிறது.

இ) இந்தியாவில் தொடக்க காலத்தில் பயன்படுத்தப்பட்ட நாணயங்களில் உருவங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. நாணயங்கள் பெரும்பாலும் தங்கத்தால் செய்யப்பட்டிருந்தன.

ஈ) சங்க காலம் வெண்கலக் காலத்தில் வேரூன்றத் தொடங்கியது. **[விடை: அ]**

2. அ) சேரர்கள் காவிரிப்பகுதியை ஆட்சி செய்தனர். அவர்களின் தலைநகர் உறையூர் ஆகும்.

ஆ) மாங்குளம் தமிழ-பிராமி கல்வெட்டுக் குறிப்புகள் அரசன் கரிகாலனைக் குறிப்பிடுகின்றன.

இ) தமிழ்-பிராமி கல்வெட்டுக் குறிப்புகளில் காணப்படும் வணிகன், நிகமா ஆகிய சொற்கள் வணிகர்களில் வெவ்வேறு வகையினரைக் குறிப்பிடுவதாகும்.

ஈ) உப்பு விற்றவர்கள் வணிகர்கள் என்று அழைக்கப்பட்டனர்; அவர்கள் வணிகத்துக்காக மாட்டு வண்டியில் தங்கள் குடும்பத்தினருடன் பயணம் செய்தார்கள். [விடை: இ]

## IV. பொருத்துக. (விடையுடன்) :

| | | | |
|---|---|---|---|
| 1. | கல்வெட்டியல் | – | கல்வெட்டுக் குறிப்புகளை ஆராய்வது |
| 2. | காலவரிசைக் குறிப்புகள் | – | முக்கியமான வரலாற்று நிகழ்வுகளின் தொகுப்பு |
| 3. | மேய்ச்சல் வாழ்க்கை | – | கால்நடைகளை வளர்த்துப் பிழைக்கும் நாடோடி மக்கள் |
| 4. | புடைப்பு மணிகள் | – | விலையுயர்ந்த கல்லில் செய்யப்பட்ட ஆபரணம் |
| 5. | அரிக்க மேடு | – | சங்க காலத் துறைமுகம். |

## V. சுருக்கமான விடை தருக :

**1. தொல்லியல் ஆய்வுக்களங்கள் கடந்த கால வரலாற்றுச் சான்றுகளை அளிக்கின்றன - உன் கருத்துகளை முன் வைக்கவும்.**

✦ அரிக்கமேடு, அழகன்குளம், கீழடி, கொடுமணல், உறையூர், கரூர், காஞ்சிபுரம், காவிரிப்பூம்பட்டினம், கொற்கை, வசவசமுத்திரம் ஆகிய இடங்களில் மேற்கொண்ட அகழாய்வுகளிலிருந்து சங்க கால மக்களின்

✦ பண்டைய மக்கள் வாழ்ந்த இடங்களை தொல்லியல் ஆய்வுகள் மூலம் மட்டும் தான் ஆய்வு செய்ய முடியும்.

**2. சங்க காலம் குறித்து அறிந்து கொள்ள நாணயங்கள் எந்தளவுக்கு ஒரு முக்கியமான சான்றாக உள்ளன?**

✦ சேர, சோழ, பாண்டிய அரசர்களின் முத்திரை பொறிக்கப்பட்ட நாணயங்கள் அவர்களைப் பற்றி அறிந்துகொள்ள உதவுகின்றன.

✦ ரோமானிய நாணயங்கள் சங்க கால கடல் கடந்த வணிகம் பற்றி அறிய உதவுகின்றது.

**3. சங்க காலத்தில் விவசாயம் ஒரு முக்கியமான வாழ்வாதாரமாக இருந்தது. இதற்கான காரணங்களைக் கூறு.**

✦ சங்க காலத்தில் வேளாண்மை முதலிடத்தில் இருந்தது. நெல், கரும்பு, சிறுதானியங்கள் பயிரிடப்பட்டன.

✦ நன்செய் நிலத்திலும், புன்செய் நிலத்திலும் பயிர்தொழில் நடைபெற்றது.

✦ செந்நெல், வெண்ணெல், ஐவன நெல் என பலவகையான நெல்கள் இலக்கியங்களில் காணப்படுகின்றன.

✦ ஆதிச்சநல்லூரிலும், பொருந்தல் என்ற இடத்திலும் அகழாய்வில் தாழிகளுடன் நெல்லும் கிடைத்துள்ளது.

4. **அயல்நாடுகளுடனான தொடர்பு பழங்காலத் தமிழகத்துக்குப் பெருமை சேர்த்தது - இதற்கான சான்றுகளுடன் இக்கூற்றை நிறுவுக.**

- ✦ யவனர் என்று அழைக்கப்பட்ட கிரேக்க, ரோமானிய மேற்கு ஆசிய வணிகர்கள் பழங்கால தமிழகத்துடன் வணிகத் தொடர்பு வைத்துள்ளனர்.
- ✦ மிளகு போன்ற நறுமணப் பொருட்களும், யானைத் தந்தம், நவமணிகள் தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி ஆயின. தங்கம், வெள்ளி, செம்பு போன்ற உலோகங்கள் இறக்குமதி செய்யப்பட்டன.
- ✦ செங்கடல் துறைமுகங்களான பெர்னிகே, குசேர் அல் காதிம் போன்ற இடங்களில் தமிழ் பிராமி எழுத்துக்கள் பொறித்த பானை ஓடுகள், சுடுமண் பாண்டத் துண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன.
- ✦ தாய்லாந்து நாட்டில் குவான் லுக் பாட் என்ற இடத்தில் அரிய கல் ஒன்று கிடைத்துள்ளது.

## VI. தலைப்பு வினாக்கள் :

**ஒவ்வொரு தலைப்பின் கீழேயும் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளி.**

1. **நடுகற்கள் :**

**அ) மேய்ச்சல் சமூகங்களுக்கிடையே காணப்பட்ட பொதுவான நடைமுறை என்ன?**
போர்க்களத்திலும் ஆநிரை கவரும் சண்டைகளிலும் வீரமரணம் அடைந்தவர்கள் நினைவாக நடுகற்கள் நடப்பட்டன.

**ஆ) பகைவர்களின் கால்நடைச் செல்வத்தைக் கவர்ந்தவர்கள் யாவர்?**
அருகருகே வாழ்ந்த இனக்குழுவினர் மற்ற குழுவினரின் கால்நடைகளைக் கவர்ந்து தமதாக்கிக் கொண்டனர்.

**இ) இறந்த வீரர்களை மக்கள் எவ்வாறு நினைவு கூர்ந்தனர்?**
நடுகற்கள் நட்டு நினைவு கூர்ந்தனர்.

**ஈ) நடுகற்களை நிறுவுவதற்கான வழி முறைகளை விளக்கும் தமிழ் நூல் எது?**
தொல்காப்பியம்.

2. **தமிழ் அல்லாத சான்றுகள் (வெளிநாட்டவர் குறிப்புகள்) :**

**அ) தமிழ் அல்லாத சான்றுகள் மூலம் நாம் அறிந்துகொள்வது என்ன?**
பண்டைத் தமிழ் சமூகம் உலகெங்கிலும் விரிந்த தொடர்புகளைக் கொண்டிருந்ததை தமிழ் அல்லாத சான்றுகள் மூலம் நாம் அறிந்து கொள்கிறோம்.

**ஆ) பாண்டிய நாட்டிலிருந்து முத்தும் சங்கும் வந்ததைக் கூறும் மௌரியர் காலச் செவ்வியல் நூல் யாது?**
பாண்டிய காவாடகா.

**இ) கால வரிசையான வரலாற்றுக் குறிப்பு என்றால் என்ன?**
முக்கியமான வரலாற்று நிகழ்வுகளைக் கால வரிசையில் விவரிக்கும் குறிப்பு வரலாற்றுக் குறிப்பு எனப்படும்.

**ஈ) இந்தியாவுக்கும், ரோமானிய பேரரசுக்கும் இடையே நடந்த மிளகு வணிகம் குறித்து கூறியவர் யார்?**
ரோமானிய வரலாற்று ஆசிரியர் பிளினி.

**3. இந்திய தொழில் துறைகள் மற்றும் சங்க காலக் கைவினைகள் :**

**அ) நகர மயமாக்கத்தின் முக்கியமான கூறுகளைக் கூறுக.**
திட்டமிட்ட வடிவமைப்பும், செங்கல் கட்டுமானங்களும் கொண்ட மக்கள் வசிப்பிடம் - பற்பல உற்பத்திப் பணிகள் நடைபெறும் இடம்.

**ஆ) மட்கலம் செய்பவருக்கான இன்னொரு தமிழ் பெயர் என்ன?**
குயவர்.

**இ) பானை செய்தலின் வெவ்வேறு வகைகள் யாவை?**
1. கரிய நிறத்தவை
2. செந்நிற வண்ணம் பூசிய வெள்ளைக் கோடுகள் வரையப்பட்டவை
3. கருப்பு - சிவப்பு நிறத்தவை.

**ஈ) விவசாயத்திலும் போரிலும் இரும்பின் பயன்பாடுகள் என்ன?**
இரும்பால் உழகருவிகளும், வாள், ஈட்டி, கத்தி போன்ற படைக்கருவிகளும் தயாரிக்கப் பட்டன.

## VII. விரிவான விடையளிக்கவும் :

**1. தமிழகத்தின் அரசியல் சக்திகள் எந்தளவுக்குச் சங்க கால ஆட்சி மீது தாக்கம் செலுத்தின?**
சங்க காலத்தின் தாக்கம் தமிழக அரசியலில் காலகாலமாக இருந்துவந்துள்ளது.

**குழுவாழ்வும் - குழுத்தலைவனும் :**
மக்கள் குழுக்களாக வாழ்ந்து வந்தனர். குழுக்களிலிருந்து உருவான தலைவர்களில் இருந்தே வரலாற்றின் தொடக்கக் காலத்தில் வேந்தர்கள் தோன்றினார்கள். வேளிர்கள் எனபோர் சங்க காலத்தின் குறுநில மன்னர்கள் ஆவர்.

**மூவேந்தர் - அரசியல் நிலப் பிரிவுகள் :**
சங்க கால ஆட்சியாளர்களில் சேர, சோழ, பாண்டியர் என்ற மூவேந்தர்களே முன்னிலையில் இருந்தனர்.

**சேரர் :**
தற்காலத்து கேரளத்தையும், தமிழ்நாட்டின் மேற்குப் பகுதியையும் ஆட்சி புரிந்தனர்.

- ✦ தலைநகர் - வஞ்சி
- ✦ துறைமுகங்கள் - முசிறி, தொண்டி,

- புகழ்பெற்ற அரசர் - சேரன் செங்குட்டுவன்
- இலச்சினை - வில்லும் அம்பும்

**சோழர் :**

காவிரி வடிநிலப்பகுதியையும் தமிழ் நாட்டின் வடபகுதிகளையும் ஆண்டனர்.

- தலைநகர் - உறையூர்
- துறைமுகங்கள் - பூம்புகார் (எ) காவிரிபூம்பட்டினம்
- புகழ்பெற்ற அரசர் - கரிகால சோழன்
- இலச்சினை - புலி

**பாண்டியர்:**

தென் தமிழகத்தை பாண்டியர்கள் ஆண்டார்கள். தமிழ்ச் சங்கங்களை நிறுவி ஆதரவு அளித்தார்கள்.

- தலைநகர் - மதுரை
- புகழ்பெற்ற அரசர் - பாண்டியன் நெடுஞ்செழியன்
- இலச்சினை - மீன்

**குறுநில மன்னர்கள்:**

பாரி, காரி, ஓரி, நள்ளி, பேகன், ஆய், அதியமான் போன்ற குறுநில மன்னர்கள் மூவேந்தர்களோடு துணைநின்றோ, மூவேந்தர்களை எதிர்த்தோ, ஆட்சி செய்தனர்.

**2. சங்க காலத்தில் தொழில்களும் கைவினைக் கலைகளும் எவ்வாறு பொருளாதாரத்தை மேம்படுத்தின?**

**வேளாண்மைத் தொழில் :**

சங்க காலத்தில் வேளாண்மை முதலிடத்தில் இருந்தது. நெல், கரும்பு, சிறுதானியங்கள் பயிரிடப்பட்டன. நன்செய் நிலத்தில் நெல்லும், புன்செய் நிலத்தில் தானியங்களும் பயரிடப்பட்டது.

**கால்நடை வளர்ப்பு :**

பசு, எருமை, காளை, உள்ளிட்ட மாடுகள், வெள்ளாடு, செம்மறி ஆடுகளை வளர்த்தார்கள்.


**கைவினை மற்றும் தொழிற் கூடங்கள் :**

- மட்கலங்கள் செய்தல், கல்லினால் ஆன அணிகலன்கள், தங்க ஆபரணங்கள், கண்ணாடி மணிகள், முத்துக் குளித்தல், சங்கு வளையல்கள், துணி நெசவு போன்ற பல துறைகளில் சங்ககால மக்கள் திறன்பெற்றிருந்தனர்.
- மட்கலங்கள் கரியநிறத்தவை, செந்நிற வண்ணம் பூசிய வெள்ளைக் கோடுகள் வரையப்பட்டவை, கருப்பு - சிவப்பு நிறத்தவை என பலவிதமாக தயாரிக்கப்பட்டன.
- இரும்பை உருக்கி உழகருவிகளும், வாள், ஈட்டி, கத்தி போன்ற படைக்கருவிகளும் தயாரிக்கப்பட்டன.
- செல்வர்கள் செம்பு, தங்கம், வெள்ளி போன்ற உலோகங்களில் செய்த நகைகளில் நவமணிகளையும் பதித்து அணிந்தனர்.
- கண்ணாடி மணிகள் பல்வேறு வண்ணங்கிளலும் வடிவங்களிலும் தயாரிக்கப்பட்டன.

## வரலாற்றுடன் வலம் வருக

### VIII. மாணவர் செயல்பாடு :

1. **சங்க காலத் தமிழகம் மற்றும் அன்றைய தமிழ் அரசர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த பகுதிகளையும் தென்னிந்திய வரைபடத்தில் குறிக்கவும்.**




சங்ககாலத்து இடங்கள்

2. **அருங்காட்சியத்துக்குச் சென்று, பழங்காலத் தமிழர் குறித்த கல்வெட்டுச் செய்திகள், அவர்கள் பயன்படுத்திய நாணயங்கள், கருவிகளைப் பற்றிய செய்திகளை சேகரிக்க.**

   ஆசிரியரின் உதவியுடன் அருகில் உள்ள அருங்காட்சியகத்துக்குச் சென்று செய்திகளை சேகரிக்கவும்.

3. **வரலாற்றின் தொடக்க காலத்தில் மக்கள் வாழ்ந்த அரிக்கமேடு, காவிரிப்பூம்பட்டினம், கீழடி போன்ற இடங்களுக்குச் சென்று பார்வையிடுக.**

   அரிக்கமேடு, காவிரிப்பூம்பட்டினம், கீழடி போன்ற இடங்களுக்கு வாய்ப்பு கிடைத்தால் சென்று வரவும்.

4. **வரலாற்றுக்கு முந்தைய காலத்தைச் சேர்ந்த ஆய்வுக்களங்களிலிருந்து நமக்குக் கிடைத்திருக்கும் பொருட்கள் மற்றும் தமிழ்-பிராமி எழுத்து முறை குறித்து ஓர் ஆய்வை மேற்கொள்க.**

   வரலாற்றுக்கு முந்தைய கால பொருட்கள், தமிழ்-பிராமி எழுத்து முறை பற்றிய விவரங்களை இணையத்திலிருந்து பெறவும்.

## கூடுதல் வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் :

1. **தமிழின் பழமையான இலக்கண நூல்**

அ) தொல்காப்பியம் ஆ) நற்றிணை
இ) குறுந்தொகை ஈ) புறநானூறு **[விடை: அ]**

2. **வாழ்வியல் அறநெறிகளை கூறும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் முதன்மையான நூல்**

அ) பரிபாடல் ஆ) திருக்குறள்
இ) கலித்தொகை ஈ) மலைபடுகடாம் **[விடை: ஆ]**

3. **இலங்கையின் புத்த சமய வரலாற்றைக் கூறும் மகாவம்சம் என்ற நூல் எழுதப்பட்ட மொழி**

அ) தமிழ் பிராமி ஆ) பிராகிருதம்
இ) பாலி ஈ) இந்தி **[விடை: இ]**

4. **சங்க கால குறுநில மன்னர்கள்**

அ) இளவரசர் ஆ) மன்னர் இ) அரசர் ஈ) வேளிர்கள் **[விடை: ஈ]**

5. **காவிரிப்பூம்பட்டினம் பற்றிக் கூறும் உருத்திரங்கண்ணனார் நூல்**

அ) பட்டினப்பாலை ஆ) பதிற்றுப்பத்து
இ) கலித்தொகை ஈ) முல்லைப்பாட்டு **[விடை: அ]**

6. (i) **தொல்காப்பியம், பதினெண் மேல்கணக்கு, பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், ஐம்பெருங்காப்பியங்கள் ஆகியவை செவ்வியல் தமிழ் இலக்கியங்களாகும்.**
(ii) **இவை சங்ககால மக்களின் வாழ்க்கை முறை பற்றி கூறவில்லை.**
(iii) **தொல்காப்பியம் ஐந்து பகுதிகளைக் கொண்டது.**
(iv) **பத்துப்பாட்டும், எட்டுத் தொகையும் பதினெண் கீழ்கணக்கு நூல்களாகும்.**

அ) (i) சரி ஆ) (ii) மற்றும் (iii) சரி
இ) (iii) சரி ஈ) (iv) சரி **[விடை: அ]**

7. (i) **அசோகரின் கல்வெட்டுகளில் பயன்படுத்திய வரி வடிவத்திற்கு அசோகன் பிராமி என்று பெயர்.**
(ii) **வியன்னா பாப்பிரஸ் என்பது இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த ரோமானிய ஆவணமாகும்.**
(iii) **ஹெர்மாபோலோன் என்பது ரோமானிய நாட்டு போர்க்கப்பலாகும்.**
(iv) **பியூட்டிங்கேரியன் அட்டவணை என்பது ரோமானியப் பேரரசின் சாலைகள் குறித்த விளக்கமான நிலப்படம் ஆகும்.**

அ) (i) சரி ஆ) (ii) சரி
இ) (i) மற்றும் (iV) சரி ஈ) (iii) மற்றும் (iV) சரி **[விடை: இ]**

## II. தலைப்பு வினாக்கள் :

### 1. செவ்வியல் தமிழ் இலக்கியங்கள் :

**அ) செவ்வியல் தமிழ் இலக்கியங்கள் யாவை?**
தொல்காப்பியம், பதினெண்மேல்கணக்கு, பதினெண்கீழ்கணக்கு, ஐம்பெருங்காப்பியங்கள்.

**ஆ) பழமையான இலக்கண நூல் எது? அது எத்தனை பகுதிகளைக் கொண்டது?**
தொல்காப்பியம், மூன்று பகுதிகளைக் கொண்டது.

**இ) எட்டுத்தொகை நூல்கள் இரண்டினைக் கூறுக.**
அகநானூறு, புறநானூறு.

**ஈ) பத்துப்பாட்டு நூல்கள் இரண்டினைக் கூறுக.**
முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு.

### 2. திணை:

**அ) திணை என்ற கருத்தை விவரிக்கும் இலக்கண நூல் எது?**
தொல்காப்பியம்.

**ஆ) திணை எதனைக் குறிப்பிடுகின்றது?**
திணை என்பது குறிப்பிட்ட நில அமைப்பையும், அதன் வாழ்வியல் முறைகளையும் குறிப்பதாகும்.

**இ) அகத்திணை, புறத்திணை யின் அச்சங்கள் யாவை?**
அகத்திணை - காதல் வாழ்வு, குடும்ப வாழ்வு.
புறத்திணை - போர், வீரம்.

**ஈ) ஐந்து திணைகளைக் கூறுக. அல்லது நிலங்களைக் கூறுக.**
ஐவகை நிலங்கள் - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை.

## III. பொருத்துக (விடையுடன்) :

1.
1. புற நானூறு - எட்டுத்தொகை நூல்
2. நெடுநல்வாடை - பத்துப்பாட்டு நூல்
3. சீவக சிந்தாமணி - தமிழ்க் காப்பியம்
4. மாங்குளம் - குகை வாழிடம்
5. புலிமான் கோம்பை - தமிழ் பிராமி கல்வெட்டுக்கள்

2. 1. கீழடி - தொல்லியல் அகழாய்வுக் களம்
2. பழங்காலப் பொருட்கள் மற்றும் கலைக் கருவூலங்கள் சட்டம் - 1972
3. தங்கம், வெள்ளி போன்ற மதிப்புமிக்க உலோகங்கள் - புல்லியன்
4. சாணக்கியர் (கௌடில்யர்) - அர்த்த சாஸ்திரம்
5. சாலைகள் குறித்த நிலப்படம் - பியூட்டிங்கேரியன் அட்டவணை

## IV. சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும் :

1. அ) திருக்குறள் 1330 குறட்பாக்களைக் கொண்டது. **[சரியான கூற்று]**
   ஆ) திருக்குறள் அறம்,பொருள் என இரு பால்களைக் கொண்டுள்ளது. **[தவறான கூற்று]**
   இ) காப்பியங்கள் என்பவை கவிதை நயமுடைய செய்யுள் வடிவிலான நீண்ட இலக்கியப் படைப்புகளாகும். **[சரியான கூற்று]**
   ஈ) வளையாபதி, குண்டலகேசி, மணிமேகலை போன்றவை தமிழ் காப்பியங்களில் அடங்கும். **[சரியான கூற்று]**

2. அ) பிராகிருதம் மௌரியர் காலத்தில் வட இந்தியாவில் பொதுமக்களால் பேசப்பட்ட மொழியாகும். **[சரியான கூற்று]**
   ஆ) அரசன் இறந்தால் அவன் நினைவாக நடுகற்கள் நடப்பட்டன. **[தவறான கூற்று]**
   இ) நடுகற்களில் இறந்தவரின் உருவம் அல்லது சிலை காணப்பட்டது. **[தவறான கூற்று]**
   ஈ) பண்டைத் தமிழர்கள் எகிப்து, ஓமன், மேற்கு ஆசியா ரோமானியப் பகுதிகளுடன் வணிக தொடர்பு கொண்டிருந்தனர். **[சரியான கூற்று]**

## V. கோடிட்ட இடத்தை நிரப்புக :

1. ________ என்ற வரிவடிவத்தில் தமிழ்மொழி முதன் முதலில் எழுதப்பட்டது.
   **விடை: தமிழ் பிராமி**
2. சுடுமண் கலங்களில் காணப்படும் பெரும்பாலான பெயர்கள் தமிழிசம் சில பெயர்கள் _______ மொழியிலும் உள்ளன. **விடை: பிராகிருத**
3. பண்டைய மக்கள் பயன்படுத்திய தொல்பொருள்களையும், அவர்கள் வாழ்ந்த இடங்களையும் ஆராய்ந்து ________ ஆகும். **விடை: தொல்லியல்**
4. தொல்லியல் ஆய்வுத் துறை _________ கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகிறது.
   **விடை: மத்திய அரசின்**
5. _________ என்னும் சொல் பாண்டிய நாட்டு பொருட்களைக் குறித்து அர்த்த சாஸ்த்திரத்தில் உள்ள செயலாகும். **விடை: பாண்டிய காவாடகா**
6. இயற்கை வரலாறு என்ற நூலை எழுதியவர் _________. **விடை: பிளினி**

7. சேர அரசர்களையும் அவர்களுடைய நாட்டின் எல்லைகளையும் கூறும் சங்க இலக்கியம் ________ **விடை: பதிற்றுப்பத்து**

8. சோழ மன்னர்களில் தலை சிறந்தவராகப் போற்றப்படுபவர் ________. **விடை: கரிகால சோழன்**

## VI. சுருக்கமான விடையளி :

**1. தொன்மைக்கால தமிழர்களின் வரலாற்றை அறிய உதவும் அறிவியல்பூர்வமான சான்றுகள் யாவை?**

- செவ்வியல் தமிழ் இலக்கியங்கள்
- கல்வெட்டுகள்
- தொல்லியல் அகழாய்வுச் சான்றுகள் மற்றும் பண்பாட்டுப் பொருள்கள்.
- தமிழ் அல்லாத மற்றும் அயல்நாட்டினரின் இலக்கியக் குறிப்புகள்.

**2. எட்டுத்தொகை நூல்கள் யாவை?**

**எட்டுத் தொகை நூல்கள்:**

- நற்றிணை
- குறுந்தொகை
- பரிபாடல்
- பதிற்றுப்பத்து
- ஐங்குறுநூறு
- கலித்தொகை
- அகநானூறு
- புறநானூறு

**3. சங்க கால மக்களின் வாழ்க்கை முறைக்கான பலவகையான தொல்லியல் சான்றுகள் கிடைத்த இடங்கள் யாவை?**

அரிக்கமேடு, அழகன் குளம், கீழடி, கொடுமணல், உறையூர், கரூர், காஞ்சிபுரம், காவிரிப்பூம்பட்டினம், கொற்கை, வசவ சமுத்திரம், ஆகிய தமிழக இடங்களிலும், கேரளத்தில் பட்டணம் என்ற இடத்திலும் சான்றுகள் கிடைத்தன.

**4. 'எரித்திரியன் கடலின் பெரிப்ளஸ்' குறிப்பு வரைக.**

- எரித்திரியன் கடலின் பெரிப்ளஸ் என்பது பண்டைய கிரேக்க நூலாகும். இந்நூலின் ஆசிரியர் யாரென்று தெரியவில்லை.
- பெரிப்ளஸ் என்றால் கடல்வழிகாட்டி என்று பொருள். செங்கடலைச் சுற்றியுள்ள கடற்பரப்பே எந்திரியன் கடல் ஆகும்.
- முசிறி, தொண்டி, குமரி, கொற்கை ஆகிய சங்ககாலத் துறைமுகப் பட்டினங்களையும், சேர, பாண்டிய அரசர்கள் குறித்தும் இந்நூலில் குறிப்புகள் உள்ளன.

**5. ஐவகை நிலங்களை விவரி.**

ஐவகை நிலங்கள்: குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை.

- மலையும் மலைச் சார்ந்த பகுதிகளும் குறிஞ்சி.
- காடும் காடு சார்ந்த பகுதிகளும் முல்லை.
- வயலும் வயல் வெளி சார்ந்த பகுதிகளும் மருதம்.

✦ கடலும் கடல் சார்ந்த பகுதிகளும் நெய்தல்.

✦ வறண்ட நிலப்பகுதி பாலை.

**6. ஐவகை நிலங்களின் தெய்வங்களைக் கூறுக.**

| | | |
|---|---|---|
| குறிஞ்சி | - | முருகன் |
| முல்லை | - | திருமால் |
| மருதம் | - | இந்திரன் |
| நெய்தல் | - | வருணன் |
| பாலை | - | கொற்றவை |

## VII. விரிவான விடையளி :

**1. குறிப்பு வரைக - பட்டணம், கொடுமணல், கீழடி.**

பட்டணம், கொடுமணல், கீழடி ஆகிய இடங்கள் சங்க காலத்தைப் பற்றி அறிந்து கொள்ளும் மிக முக்கியமான தொல்லியல் ஆய்வு களங்களாகும். இவ்விடங்களிலிருந்து சங்க கால மக்களின் வாழ்க்கை முறை பற்றிய பல வகையான தொல்லியல் சான்றுகள் கிடைத்துள்ளன.

**பட்டணம் :**

கேரள மாநிலம் எர்ணாகுளம் மாவட்டத்திலுள்ள வடக்கப் பரவூர் என்ற ஊரை ஒட்டிய வடக்கேகரா என்ற சிற்றூரின் அருகே பட்டணம் அமைந்துள்ளது. மேலை நாடுகளோடும் வணிகத் தொடர்பு கொண்டிருந்த பழங்காலத் துறைமுகம் தான் பட்டணம்.

**கொடு மணல் :**

கொடு மணல் தமிழ்நாட்டில் ஈரோடுக்கு அருகில் உள்ளது. பெருங்கற்கால முதுமக்கள் தாழிகளும் இரும்பு, மணிக்கற்கள், சங்கு வேலைப்பாடுகள் குறித்த சான்றுகளும் இங்கே கிடைத்துள்ளன. தமிழ் பிராமி எழுத்துககள் கொண்ட 300 க்கும் மேற்பட்ட மட்கலப் பொறிப்புகள் இங்கு கிடைத்துள்ளன.

**கீழடி:**

மதுரையிலிருந்து ராமேஸ்வரம் செல்லும் நெடுஞ்சாலையில் சிலைமான் என்ற ஊருக்கு அருகில் கீழடி உள்ளது. இங்கு சங்க கால நகரம் புதையுண்டது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. செங்கற் கட்டுமானங்கள் , கழிவுநீர் வழிகள், தமிழ் பிராமி எழுத்துக்கள் கொண்ட மட்கல ஓடுகள், செம்மணிக்கற்களாலான அணிகள், முத்து, இரும்பு பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், கண்ணுக்கு மை தீட்டும் செம்புக் கம்பி போன்றவை கண்டறியப்பட்டுள்ளன.

# பாடம் 4 அறிவு மலர்ச்சியும், சமூக-அரசியல் மாற்றங்களும்

## பயிற்சிகள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்க :**

1. ஒரு தத்துவப் பிரிவை நிறுவிய __________ எளிமைக்கும், தன்னல மறுப்பிற்கும் உதாரணமாக விளங்கினார்.

அ) புத்தர் ஆ) லாவோட் சே
இ) கன்ஃபூசியஸ் ஈ) ஜொராஸ்டர் **[விடை: அ]**

2. மகாவீரரின் போதனைகளால் ஈர்க்கப்பட்ட மகத அரசர் __________.

அ) தனநந்தர் ஆ) சந்திரகுப்தர்
இ) பிம்பிசாரர் ஈ) சிசுநாகர் **[விடை: இ]**

3. வடக்கில் காபூல் பள்ளத்தாக்கிலிருந்து தெற்கில் கோதாவரி வரை பரவியிருந்த வட இந்தியாவின் __________ எனப்பட்ட பதினாறு மாநிலங்களின் அரசுகளின் எழுச்சி ஏற்பட்டது.

அ) மஹாஜனபதங்கள் ஆ) கனசங்கங்கள்
இ) திராவிடம் ஈ) தட்சிணபதா **[விடை: அ]**

4. மும்மணிகள் (திரி ரத்னா) என்ற மூன்று கொள்கைகளை போதித்தவர் __________.

அ) புத்தர் ஆ) மகாவீரர்
இ) லாவோட் சே ஈ) கன்ஃபூசியஸ் **[விடை: ஆ]**

5. மௌரிய ஆட்சி அமைப்பு மற்றும் சமூகம் குறித்த செய்திகளைத் தன் குறிப்புகளால் அளித்தவர்

அ) மார்க்கோ போலோ ஆ) ஃபாஹியான்
இ) மெகஸ்தனிஸ் ஈ) செல்யூகஸ் **[விடை: இ]**

6. (i) மகத அரசர்களின் கீழ் இருந்த மகாமாத்ரேயர்கள் அமைச்சர்களுக்குச் செயலாளர்களாகச் செயல்பட்டார்கள்.

(ii) மெகஸ்தனிஸ் எழுதிய 'இண்டிகா' என்னும் வரலாற்றுக் குறிப்பு மௌரிய ஆட்சி அமைப்பு மற்றும் சமூகம் குறித்த ஆவணமாக விளங்குகிறது.

(iii) ஒரு பேரரசைக் கட்டமைக்க நந்தர் செய்த முயற்சியை, மௌரிய அரசை உருவாக்கிய அசோகர் தடுத்து நிறுத்தினர்.

(iv) **மரபுகளின் படி, சந்திரகுப்தர் அவரது வாழ்வின் இறுதியில் புத்த சமயத்தின் தீவிரமான ஆதரவாளராக இருந்தார்.**

அ) (i) சரி ஆ) (ii) சரி

இ) (i) மற்றும் (ii) சரி ஈ) (iii) மற்றும் (iv) சரி **[விடை: ஆ]**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. வெவ்வேறு காலகட்டங்களைச் சேர்ந்த, பிரார்த்தனைகளும் மரபுவழிக் கதைகளும் அடங்கிய புனித இலக்கியத் தொகுப்பு ________ ஆகும். **விடை: ஜென்ட் அவெஸ்தா**
2. கங்கைச் சமவெளியில் ________ வேளாண்மைக்கு மாடுகளின் தேவை அவசியமானது. **விடை: இரும்பு கலப்பை**
3. ________ தீர்த்தங்கரர்களின் நீண்ட மரபில் வந்தவர் என்றும் 24-வது மற்றும் கடைசி தீர்த்தங்கரர் என்றும் சமணர்கள் நம்புகிறார்கள். **விடை: மகாவீரர்**
4. புத்தருக்கு ஞானோதயம் ஏற்பட்ட இடத்தில் கட்டப்பட்டுள்ள மஹாபோதி கோயில் இன்றும் ________ -இல் உள்ளது. **விடை: பீஹாரில் உள்ள புத்த கயா**
5. மௌரியப் பேரரசைப் பற்றியும் குறிப்பாக அசோகரின் தர்மம் சார்ந்த ஆட்சியைப் பற்றியும் அறிந்து கொள்ள _______ பாறைக் குறிப்புகள் பெரிதும் உதவுகின்றன. **விடை: கலிங்கத்தில் உள்ள 14 முக்கியமான**

## III. சரியான கூற்றைத் தேர்வு செய்க :

1. அ) வெண்கலக் கருவிகளின் வரவால் கங்கை ஆற்றங்கரையில் இருந்த அடர்த்தியான காடுகளை அகற்றுவது எளிதானது.

   ஆ) அசிவிகம் மேற்கு இந்தியாவில் சிறு அளவில் பரவியிருந்தது.

   இ) குறிப்பிட்ட இனக்குழுக்கள் ஆதிக்கம் செலுத்திய நிலத்தொகுதிகள் மௌரியர்களுக்கு முற்பட்ட அரசுகள் எனப்பட்டன.

   ஈ) இலக்கியங்களில் குறிப்பிடப்படும் அரசுகளில் காசி, கோசலம், மகதம் ஆகியவை வலிமை படைத்தவையாக இருந்தன. **[விடை: ஈ]**

2. அ) மகதத்தின் முதல் முக்கிய அரசன் அஜாதசத்ரு.

   ஆ) நிர்வாகத்துக்கான ஒரு விரிவான கட்டமைப்பை உருவாக்குவதில் பிம்பிசாரர் வெற்றிகரமாகச் செயல்பட்டார்.

   இ) வட இந்தியாவில் ஆட்சி செய்த சத்ரியர் அல்லாத அரச வம்சங்களில் முதலாமவர்கள் மௌரியர்களாகும்.

   ஈ) ஒரு பேரரசுக்கான கட்டமைப்பை உருவாக்க நந்தர் மேற்கொண்ட முயற்சியை அசோகர் தடுத்து நிறுத்தினார். **[விடை: ஆ]**

## IV. பொருத்துக (விடையுடன்) :

| | | | |
|---|---|---|---|
| 1. | எண் வழிப் பாதை | – | தூய மனநிலையை அடைவதற்கான பாதை |
| 2. | பாகுபலி | – | மிக உயரமான சமணச்சிலை |
| 3. | வசந்த மற்றும் இலையுதிர் கால வரலாற்றுப் பதிவேடு | – | அரசியல் அறநெறிகளின் சட்டத்தொகுப்பு |
| 4. | ஜெண்ட் அவெஸ்தா | – | சட்டங்களும் புராணக் கதைகளும் அடங்கிய புனித இலக்கியம். |
| 5. | ரிஷபா | – | முதல் தீர்த்தங்கரர் |

## V. சுருக்கமான விடை தருக :

**1. ஹீனயானம் மற்றும் மகாயானம் பற்றி குறிப்பு வரைக.**

| ஹீனயானம் | மகாயானம் |
|---|---|
| புத்தரை பின் பற்றியவர்கள் | புத்தரை கடவுளாக வழிபட்டவர்கள் |
| உருவ வழிபாட்டை மறுத்தவர்கள் | உருவ வழிபாட்டை ஏற்றவர்கள் |

**2. மும்மணிகள் (திரி ரத்னா) - இச்சொல்லை விளக்கிக் கூறு.**

- மும்மணிகள் - மூன்று கொள்கைகள்.
- நன்னம்பிக்கை, நல்லறிவு, நன்னடத்தை ஆகியவை ஆகும்.

**3. அஜாதசத்ருவைப் பற்றிக் கூறு.**

- பிம்பிசாரரை கொன்றுவிட்டு அவர் மகன் அஜாதசத்ரு அரியணை ஏறியதாகச் சொல்லப்படுகிறது.
- ஐந்து மலைகளால் சூழப்பட்ட ராஜகிருஹ கோட்டையை வலுப்படுத்தினார்.
- கங்கைக் கரையில் பாடலிபுத்திரத்தில் மற்றொரு கோட்டையைக் கட்டினார்.
- பின்னர் மௌரியத் தலைநகர் பாடலிபுத்திரமாக மாறியது. அஜாதசத்ரு பொ.ஆ.மு 461 இல் இறந்தார்.

**4. கலிங்கா கல்வெட்டுக் குறிப்பு கூறுவது என்ன?**

கலிங்கா கல்வெட்டில் போர் மற்றும் வெற்றிக்காக நடந்த படுகொலைகளைப் பார்த்துப் தாம் மன வேதனை அடைந்ததாக அசோகர் பதிவு செய்துள்ளார். மற்றொரு கல்வெட்டில், தாம் இனிமேல் கலிங்கப் போரில் நடந்த படுகொலைகளில் நூற்றில் ஒரு பங்கைக் கூட பொறுத்துக்கொள்ளப் போவதில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

**5. புத்த சமயத்தைப் பரப்ப அசோகர் மேற்கொண்ட முயற்சிகள் என்னென்ன?**

- உயிர்களைக் காக்கும் பொருட்டு விலங்குகளைப் பலியிடுவதை அசோகர் தடை செய்தார்.
- விலங்குகளுக்கான மருத்துவமனைகள் திறக்கப்பட்டன.
- அசோகர் தனது மகன் மகேந்திரனையும், மகள் சங்கமித்திரையையும் தம்மம் குறித்த தனது செய்தியைப் பரப்புவதற்காக இலங்கைக்கு அனுப்பினார்.

## VI. தலைப்பு வினாக்கள் :

**ஒவ்வொரு தலைப்பின் கீழேயும் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளி.**

**1. ஜொராஸ்ட்ரியனிசம் :**

**அ) இதைத் தோற்றுவித்தவர் யார்?**
ஜொராஸ்டர்.

**ஆ) அவர் 'ஒளியின் கடவுள்' என யாரைப் பிரகடனம் செய்தார்?**
'அஹுர மஸ்தா' என்ற கடவுளை.

**இ) ஜொராஸ்ட்ரியர் எதனைப் போதித்தார்?**
ஒரு மதம் அல்லது அரசு அல்லது சமூகத்தின் முதன்மையான நோக்கம் **ஒழுக்கத்தை வளர்ப்பது** தான் என்று போதித்தார்.

**ஈ) வழிபாட்டின் உயர்ந்த வடிவம் எது?**
தீயை வணங்குவது தான் உயர்ந்த வழிபாட்டு முறையாகக் கருதப்பட்டது.

**2. கௌதம புத்தர் :**

**அ) புத்தரின் இயற்பெயர் என்ன?**
சித்தார்த்தர்.

**ஆ) புத்தர் பிறந்த ஊர் என்ன?**
நேபாளத்தில் உள்ள கபிலவஸ்து.

**இ) அவருக்கு எங்கே ஞானோதயம் ஏற்பட்டது?**
பீஹாரில் உள்ள புத்த கயா.

**ஈ) புத்தர் முதல் போதனையை எங்கு நிகழ்த்தினார்?**
சாரநாத்தில்

## VII. விரிவான விடையளிக்கவும் :

**1. கன்பூசியஸின் ஐந்து முக்கியமான கோட்பாடுகளை விளக்கிக் கூறு.**

**கன்பூசியஸின் ஐந்து முக்கிய கோட்பாடுகள்.**

1. மனிதத்தன்மை 2. நேர்மை 3. நன்னடத்தை 4. மெய்யறிவு 5. நம்பகத்தன்மை

**மனிதத்தன்மை:**
மெய்யறிவு குடும்பத்திலிருந்துதான் வளரும் என்றார்.

**நேர்மை:**
ஓர் ஒழுங்கான குடும்பத்தின் கட்டுப்பாடு மிக்க தனிநபர் தான் சமூகத்தின் அடித்தளம் என்றார்.

**நன்னடத்தை:**

மனிதர் என்பவர் வெறும் அறிவாளியாகவோ, அறிஞராகவோ மட்டும் இல்லாமல், முன்மாதிரியான நடத்தை கொண்டவராகவும் இருக்க வேண்டும்.

**மெய்யறிவு:**

“உத்தரவு தவறென்றால், ஒரு மகன் தனது தந்தையை எதிர்க்க வேண்டும். ஓர் அமைச்சர் அரசரை எதிர்க்க வேண்டும் என்றும் தெளிவாக முன்மொழிகிறார்.

**நம்பகத்தன்மை:**

ஒரு அரசிற்கு மூன்று விசயங்கள் அவசியமானவை; நாட்டில் போதுமான உணவு, போதுமான இராணுவத் தளவாடங்கள், மக்களுக்குத் தம் ஆட்சியாளர் மீது நம்பிக்கை ஆகியன இருக்க வேண்டும்.

**2. சமண, புத்த சமயக் கொள்கைகளுக்கு இடையேயான ஒற்றுமைகளையும், வேறுபாடுகளையும் எழுதுக.**

**சமண, புத்த சமயக் கொள்கைகளுக்கு இடையேயான ஒற்றுமைகள்**

- சமணம், புத்தம் இரண்டும் பொ.ஆ.ம 6-ம் நூற்றாண்டில் தோன்றியது.
- சமணம், புத்தம் இரண்டும் யாகம், சடங்குகளுக்காக விலங்குகள் பலியிடுவது போன்றவற்றை எதிர்த்தன.
- இவை இரண்டும் துறவு, சொத்துக்களை துறந்து வாழும் முறை போன்றவைகளை ஆதரித்தது.
- மகாவீரரும், புத்தரும் தூய வாழ்க்கை வாழ்ந்தார்கள். எளிமைக்கும் தன்னல மறுப்பிற்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார்கள்.

**வேறுபாடுகள் :**

- மகாவீரரின் போதனைகள் மும்மணிகள் (திரிரத்னா) எனப்பட்டது. புத்தரின் போதனைகள் எண் வழிப் பாதை எனப்பட்டது.
- சமணம் திகம்பரர் என்றும் சுவேதாம்பரர் என்றும் இரண்டாகப் பிரிந்தது. பௌத்தம் ஹீனயானம், மஹாயானம் என இரண்டாகப் பிரிந்தது.
- சமணத்தை தனநந்தர், சந்திரகுப்த மௌரியர், காரவேலன் போன்ற அரசர்கள் ஆதரித்தனர். பௌத்தம் மத்திய ஆசியா, இலங்கை, திபெத், தென்கிழக்கு ஆசியா, சீனா, மங்கோலியா, கொரியா, ஜப்பான், வியட்நாம் நாடுகளுக்கும் பரவியது.

## வரலாற்றுடன் வலம் வருக

**மாணவர் செயல்பாடு :**

**1. அசோகரின் கல்வெட்டுக் குறித்து ஓர் ஆய்வறிக்கை தருக.**

சுய செயல்பாடு.


2. **புத்தரின் வாழ்க்கை மற்றும் போதனைகளைச் சித்தரிக்கும் வகையில் ஒரு நாடகத்தை நண்பர்களுடன் சேர்ந்து நிகழ்த்தவும்.**
சுய செயல்பாடு.

**ஆசிரியரின் வழிகாட்டுதலுடன் செய்ய வேண்டியவை:**

1. **புத்த சமயம் பின்பற்றப்படும் நாடுகளைப் பட்டியலிட்டு உலக வரைபடத்தில் குறிக்கவும்.**

**புத்த சமயம் பின்பற்றப்படும் நாடுகள்:**

| | | | |
|---|---|---|---|
| 1. சைனா | 2. தாய்லாந்து | 3. ஜப்பான் | |
| 4. மியன்மார் (பர்மா) | 5. இலங்கை (ஸ்ரீலங்கா) | 6. வியட்நாம் | |
| 7. கம்போடியா | 8. தென்கொரியா | 9. இந்தியா | 10. மலேசியா |




2. **சாஞ்சி ஸ்தூபி மற்றும் தர்மச்சக்கரத்தின் களிமண் மாதிரிகளைச் செய்க.**
சுய செயல்பாடு.

## கூடுதல் வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் :

**1. சீனாவில் தாவோயிசத்தை தோற்றுவித்தவர்**

அ) கன்பூசியஸ் ஆ) லாவோட்சே
இ) ஷி ஹீவாங் டி ஈ) ஹீடி [விடை: ஆ]

**2. ஜொராஸ்ட்ரியர்களின் புனித நூல்**

அ) குரான் ஆ) பைபில்
இ) ஜென்ட் அவெஸ்தா ஈ) ராமாயணம் [விடை: இ]

**3. _________ வேதப் பாடல்களின் விளக்கங்கள் அடங்கியவை ஆரண்யங்களும், உபரிடதங்களும் ஆகும்.**

அ) ரிக் ஆ) யஜீர் இ) சாம ஈ) அதா்வ [விடை: அ]

**4. இருபத்துநான்குகாவது மற்றும் கடைசி தீா்த்தங்கரா்**

அ) ரிசபா் ஆ) மகாவீரா்
இ) புத்தா் ஈ) பாா்சுவநாதா் [விடை: ஆ]

**5. கௌதம புத்தா் _________ நாட்டிலுள்ள கபிலவஸ்துவில் பிறந்தாா்.**

அ) இந்தியா ஆ) இலங்கை இ) நேபாளம் ஈ) பா்மா [விடை: இ]

**6. 'மஹாபோதி' அமைந்துள்ள மாநிலம்**

அ) பீஹாா் ஆ) மத்திய பிரதேசம்
இ) ஒரிஸா ஈ) மேற்கு வங்காளம் [விடை: அ]

### II. கோடிட்ட இடத்தை நிரப்புக :

1. சீனாவின் அரசியல் ஒழுக்க நெறி பற்றிக் கூறும் கன்பூசியஸ்-ன் நூல் _________.
**விடை: இளவேனிலும் இலையுதிா்காலமும்**

2. தாவோ டே ஞிங் என்ற நூலை எழுதியவா் _________ விடை: லாவோட்சே

3. ஜொராஸ்ட்ரியனிசத்தைத் தோற்றுவித்தவா் _________. **விடை: ஜொராஸ்டா்**

4. பாரசீகத்தை விட்டு இந்தியா வந்த ஜொராஸ்ட்ரிய மதத்தினா் _________ என அழைக்கப் படுகின்றனா். **விடை: பாா்ஸிகள்**

5. மகாவீரா் வைஷாலிக்கு அருகே உள்ள _________ பிறந்தாா். **விடை: குந்த கிராமத்தில்**

6. மகாவீரா் தனது 72 வது வயதில் _________ காலமானாா். **விடை: பவபுாியில்**

7. பல்லவ மன்னரான _________ சமண சமயத்தைச் சாா்ந்தவா். **விடை: மகேந்திரவா்மன்**

8. சாக்கிய முனி என்று அழைக்கப்பட்டவா் _________. **விடை: புத்தா்**

## III. சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும் :

1. அ) கன்பூசியஸ் ஒரு அரசிற்கு மூன்று விசயங்கள் அவசியமானது. அவை உணவு, உடை, இருப்பிடம் என்றார். **விடை: தவறான கூற்று**

ஆ) லாவோட்சேவின் போதனைகள் தாவோயிசம் என்று அழைக்கப்படுகின்றது. **விடை: சரியான கூற்று**

இ) ஆரண்யங்களும், உபநிடதங்களும் சிந்து சமவெளியில் தொகுக்கப்பட்டன. **விடை: தவறான கூற்று**

ஈ) புத்தரும், மகாவீரரும் புகழ் பெற்ற மகத அரசர்களான பிம்பிசாரர், அஜாதசத்ரு ஆகியோரின் சம காலத்தவர்கள். **விடை: சரியான கூற்று**

2. அ) மகாவீரர் அனைத்துப் பொருட்களுக்கும் ஆன்மா உண்டு என கூறினார். **விடை: சரியான கூற்று**

ஆ) புத்தர் தனது 80 வது வயதில் குஷிநகரத்தில் பரிநிர்வாணம் அடைந்தார். **விடை: சரியான கூற்று**

இ) கடுமையான துறவு வாழ்வை மேற்கொள்ள வேண்டும் என புத்தர் தனது சீடர்களை அறிவுறுத்தினார். **விடை: தவறான கூற்று**

ஈ) பௌத்தத்தைப் பரப்ப பிட்சுக்களும் (ஆண் துறவிகள்) பிட்சுணிகளும் (பெண் துறவிகள்) நியமிக்கப்பட்டனர். **விடை: சரியான கூற்று**

## IV. பொருத்துக (விடையுடன்) :

1.

| | | | |
|---|---|---|---|
| 1. | கன்பூசியஸ், லாவோட்சே | - | சீனா |
| 2. | ஜெராஸ்டர் | - | ஈரான் |
| 3. | புத்தர், மகாவீரர் | - | இந்தியா |
| 4. | அஹீர மஸ்தா | - | ஒளிக் கடவுள் |
| 5. | ஜீனர் | - | உலகை வென்றவர் |

2.

| | | | |
|---|---|---|---|
| 1. | ஹீனயானம் | - | புத்த சமய பிரிவு |
| 2. | சுவேதாம்பரர் | - | வெண்ணிற உடை உடுத்தியவர்கள் |
| 3. | கோமதீஸ்வரர் | - | சிரவண பெலகொலா |
| 4. | எண்வழிப் பாதை | - | புத்தர் |
| 5. | அஸ்வமேதம் | - | வேள்வி |

## V. சுருக்கமான விடையளி :

**1. கன்பூசியஸ் -ன் ஐந்து நூல்கள் யாவை?**

- ஆவண நூல்
- இசைப்பாடல் நூல்
- மாற்றம் குறித்த நூல்

- இளவேனிலும் இலையுதிர் காலமும்
- வரலாற்று நூல்

**2. 'அஹூர் மஸ்தா' குறிப்பு வரைக.**

ஜொராஸ்ட்ரிய சமயத்தின் கடவுள் அஹூர மஸ்தா. ஒளிக் கடவுளான அஹூர மஸ்தா தான் உலகின் ஒரே கடவுள் என ஜொராஸ்டர் பிரகடனம் செய்தார். அஹூர மஸ்தா அனைத்தும் அறிந்தவர். சகல சக்திகளும் கொண்டவர். எங்கும் நிறைந்திருப்பவர். தீயை வணங்குவதன் மூலம் அவரை வணங்கலாம் என்றார்.

**3. மஹாவீரரின் ஐம்பெரும் சூளுரைகள் யாவை?**

**மகாவீரரின் ஐம்பெரும் சூளுரைகள் :**

- எந்த உயிரினத்தையும் துன்புறுத்தலாகாது.
- நேர்மையுடன் இருப்பது
- கருணை
- உண்மையுடன் இருப்பது
- பிறருடைய சொத்துக்களுக்கு ஆசைப்படாமல் வாழ்வது.

**4. புத்தரின் எண் வழிப் பாதைகளைக் குறிப்பிடுக.**

**புத்தரின் எண் வழிப்பாதைகள் :**

- நன்னம்பிக்கை
- நல்ல ஆர்வம்
- நற்பேச்சு
- நற்செயல்
- நல் வாழ்க்கை முறை
- நன் முயற்சி
- நற்சிந்தனை
- நல்ல தியானம்

**5. அசோகர் தீவிர புத்தப் பற்றாளராக மாற காரணம் என்ன?**

- அசோகர் கலிங்கத்தின் மீது படையெடுத்தார். கலிங்க மக்கள் வீரத்தோடு போர் புரிந்தனர்.
- ஆனால் பெரும் உயிர்பலிகளுக்குப் பிறகு அவர்கள் தோற்கடிக்கப்பட்டனர். இந்தப் போரும் படுகொலைகளும் அசோகரைப் பெரிதும் பாதித்தன. அவர் போரிடுவதை விட்டுவிட முடிவு செய்து தீவிர புத்தப் பற்றாளராக மாறினார்.

## VI. விரிவான விடையளி :

**1. மௌரிய ஆட்சி நிர்வாகம் பற்றி எழுதுக.**

- மௌரியர்கள் செயல்திறன் மிக்க அரசாட்சி முறையை உருவாக்கினர். நிர்வாகத்தின் தலைவர் அரசர்.
- அரசருக்கு அமைச்சர் குழு உதவிபுரிந்து மகாமாத்ரேயர்கள் என்ற அதிகாரிகள் அமைச்சர்களுக்குச் செயலாளர்களாகப் பணியாற்றினார்கள்.
- வருவாய், செலவினங்களுக்கு பொறுப்பான அதிகாரி சமஹர்த்தா என்று அழைக்கப்பட்டார்.

- பேரரசு நான்கு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவற்றை ஆளுநர்கள் ஆட்சி செய்தனர்.
- மாவட்ட நிர்வாகம் ஸ்தானிகா என்பவரின் கீழ் கொண்டு வரப்பட்டது.
- பத்து கிராமங்களை கோபர் என்பவறும், நகர நிர்வாகத்தை நகரகா என்பவறும் நிர்வகித்தனர்.
- நகரம் ஆறு குழுக்களைக் கொண்டு நிர்வகிக்கப்பட்டது.
- ராணுவம் 30 பேர் கொண்ட குழுவால் நிர்வகிக்கப்பட்டது.
- மக்கள், கால்நடைகளை கிராமணி கணக்கெடுத்தார்.
- சிறந்த உளவுத் துறை இயங்கியது.
- எல்லா ஊர்களிலும், நகரங்களிலும் நீதி வழங்க நீதி மன்றங்கள் அமைக்கப்பட்டன.

வரலாறு

# பாடம் 5 செவ்வியல் உலகம்

## பயிற்சிகள்

### I. சரியான விடையை தேர்ந்தெடு :

1. ________ என்ற கிரேக்க நகர அரசு பாரசீகர்களை இறுதி வரை எதிர்த்து நின்றது.
   அ) அக்ரோபொலிஸ் ஆ) ஸ்பார்ட்டா
   இ) ஏதென்ஸ் ஈ) ரோம் [விடை: இ]

2. கிரேக்கர்களின் மற்றொரு பெயர் ________ ஆகும்.
   அ) ஹெலனிஸ்டுகள் ஆ) ஹெலனியர்கள்
   இ) பீனிசியர்கள் ஈ) ஸ்பார்ட்டன்கள் [விடை: ஆ]

3. ஹன் அரச வம்சத்தைத் தோற்றுவித்தவர் ________ ஆவார்.
   அ) வு-தை ஆ) ஹங்சோவ்
   இ) லீயு-பங் ஈ) மங்குகான் [விடை: இ]

4. இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்படுவதற்குக் காரணமாக இருந்த ரோமானிய ஆளுநர் ________ ஆவார்.
   அ) முதலாம் இன்னசென்ட் ஆ) ஹில்ட்பிராண்டு
   இ) முதலாம் லியோ ஈ) போண்டியஸ் பிலாத்து [விடை: ஈ]

5. பெலப்பொனேஷியப் போர் ________ மற்றும் ________ ஆகியோர்களுக்கிடையே நடைபெற்றது.
   அ) கிரேக்கர்கள் மற்றும் பாரசீகர்கள்
   ஆ) பிளேபியன்கள் மற்றும் பெட்ரீசியன்கள்
   இ) ஸ்பார்ட்டா மற்றும் ஏதென்ஸ் நகரவாசிகள்
   ஈ) கிரேக்கர்கள் மற்றும் ரோமானியர்கள் [விடை: இ]

### II. கோடிட்ட இடத்தை நிரப்புக :

1. கிரேக்கர்கள் ________ என்ற இடத்தில் பாரசீகர்களைத் தோற்கடித்தனர். விடை: மராத்தான்
2. ரோமானியக்குடியரசில் ஏழை விவசாகிகளுக்கு ஆதரவாக இருந்தவர் ________ .
   விடை : டைபிரியஸ் கிராக்கஸ் மற்றும் காரியஸ் டோ கிராக்கஸ்

3. ________ வம்சத்தினரின் ஆட்சியின் போது தான் பௌத்தம் இந்தியாவிலிருந்து சீன வருகை தந்தது.
**விடை: ஹன்**

4. ________ ஐரோப்பியாவின் நேர்த்தியான கட்டடம். **விடை: புனித சோபியா ஆலயம்**

5. ________ மற்றும் ________ ரோம நீதிபதிகள் ஆவார்கள்.
**விடை: கான்சல்கள் மற்றும் செனட்டர்கள்**

## III. சரியான கூற்றினை தேர்வு செய்க :

1. i) கிரீஸின் மீதான முதல் பாரசீகத் தாக்குதல் – தோல்வியடைந்தது.
   ii) ரோமப் பேரரசின் வீழ்ச்சிக்கு ஜீலியஸ் சீஸர் ஒரு காரணமாயிருந்தார்.
   iii) ரோமின் மீது படையெடுத்த கூட்டத்தினர் பண்பாட்டில் மேம்பட்டவர்களாக் கருதப்பட்டனர்.
   iv) பௌத்த மதம் ரோமப் பேரரசை வலுவிழக்கச் செய்தது.
   அ) (i) சரி ஆ) (ii) சரி இ) (ii), (iii) சரி ஈ) (iv) சரி **[விடை: அ]**

2. i) யூகிளிட் கோள்கள் மற்றும் நட்சத்திரங்கள் எவ்வாறு நகர்கின்றன என்பது குறித்து ஒரு மாதிரியை உருவாக்கினார்.
   ii) எட்ரூஸ்கர்களை முறியடித்து ரோமானியர்கள் ஒரு குடியரசை நிறுவினர்.
   iii) அக்ரோபொலிஸ் புகழ் பெற்ற அடிமைச் சந்தை ஆனது.
   iv) ரோமும், கார்த்தேஜீம் கிரேக்கர்களைத் துரத்துவதற்கு ஒன்றிணைந்தன.
   அ) (i) சரி ஆ) (ii) சரி இ) (ii), (iv) சரி ஈ) (iv) சரி **[விடை: இ]**

3. i) பட்டு வழித்தடம் ஹன் வம்ச ஆட்சியின் போது மூடப்பட்டது.
   ii) வேளாண் குடிமக்களின் எழுச்சி ஏதேனிய குடியரசுக்கு அச்சத்தைக் கொடுத்தது.
   iii) விர்ஜில் எழுதிய ஆனெய்ட் ரோம ஏகாதிபத்தியத்தை புகழ்வதாய் அமைந்தது.
   iv) ஸ்பார்ட்டகஸ் ஜீலியஸ் சீஸரைக் கொன்றனர்
   அ) (i) சரி ஆ) (ii) சரி இ) (iii), (iv) சரி ஈ) (iii) சரி **[விடை: ஈ]**

4. i) ரோமப் பேரரசர் மார்க்கஸ் அரிலியஸ் ஒரு கொடுங்கோலன்.
   ii) ரோமுலஸ் அரிலிஸ் ரோமானிய வரலாற்றின் மிகவும் மெச்சத்தக்க அரசர்.
   iii) பேபியஸ் ஒரு புகழ் பெற்ற ஒரு கார்த்தேஜியப் படைத்தலைவர் ஆவார்.
   iv) வரலாற்றாளராக லிவியை விட, டாசிடாய் மதிக்கத்தக்கவர்.
   அ) (i) சரி ஆ) (ii) சரி இ) (ii), (iii) சரி ஈ) (iv) சரி **[விடை: ஈ]**

5. i) பௌத்த மதம் ஜப்பானிலிருந்து சீனாவிற்கு பரவியது.
   ii) இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட பின்னர், புனித தோமையர் கிறித்துவக் கொள்கைகளைப் பரப்பினார்.
   iii) ஐரோப்பாவில் புனித சோபியா ஆலயம் மிகநேர்த்தியான கட்டடம் ஆகும்.
   iv) டிராஜன், ரோமனின் மோசமான சர்வாதிகாரிகளில் ஒருவராவார்.
   அ) (i) சரி ஆ) (ii) சரி இ) (iii) சரி ஈ) (iv) சரி **[விடை: இ]**

**IV. பொருத்துக (விடையுடன்) :**

| | | | |
|---|---|---|---|
| 1. | அக்ரோபொலிஸ் | - | பாதுகாக்கப்பட்ட நகரம் |
| 2. | பிளாட்டோ | - | தத்துவஞானி |
| 3. | மாரியஸ் | - | கான்சல் |
| 4. | ஜீயஸ் | - | ஏதேன்ஸ் |
| 5. | எபிகியுரஸ் | - | பொருள் முதல் விதி |

**V. கீழ்க்காணும் வினாக்களுக்கு சுருக்கமான விடையளி :**

**1. ரோமானிய அடிமை முறையைப் பற்றி எழுதுக.**

- ரோமில் போர்க் கைதிகள் அடிமைகளாக ஆக்கப்பட்டனர். மிகப் பெரும் நிலப்பிரபுக்கள் இவ்வடிமைகளைக் குறைந்த விலைக்கு வாங்கி தங்கள் நிலங்களில் வேளாண் பணிகளில் ஈடுபடுத்தினர்.
- ரோம் அரசுக்கு அதிக வருவாயை அள்ளிக் கொடுத்தது அடிமை வியாபாரமாகும். டெலாஸ்தீவு மிகப் பெரிய அடிமைச் சந்தையாக இருந்தது. ரோமில் சுமார் 2 மில்லியன் அடிமைகள் இருந்தனர்.

**2. கான்ஸ்டன்டைனின் முக்கிய பங்களிப்பை சுட்டிக்காட்டுக.**

- கான்ஸ்டன்டைன் இவர் ரோமானிய பேரரசர்களில் ஒருவராவார். இவர் கிறித்தவராக மாறியதால் கிறித்தவம் பேரரசின் அரசு மதமாயிற்று,
- இதனால் கிறித்தவம் நாடு முழுவதும் பரவிற்று இதுவே கான்ஸ்டன்டைன் பங்களிப்பாகும்.

**3. கார்த்தேஜ் ஹன்னிபால் குறித்து நீ அறிவது என்ன?**

- வட ஆப்பிரிக்காவின் பேரரசு கார்த்தேஜ் ஆகும். இப்பேரரசின் படைத்தளபதி ஹன்னிபால், இவர் ரோமின் படைகளை தோற்கடித்து இத்தாலியின் பெரும் பகுதியை பாலைவனமாக்கினார்.
- இவரின் போர்திறமையால் கார்த்தேஜ் பேரரசு தனது நாட்டின் எல்லை பகுதிகளை அதிகமாக விரிவுபடுத்தியது.
- இருப்பினும் இரண்டாம் பியூனிக் போரில் ஹன்னிபாலை எதிர்த்து போரிட்ட ரோமின் படைத் தலைவர் பாபியஸ், ஜமா போர்க்களத்தில், அவரை தோற்கடித்தார். இதனால் ஹன்னிபால் விஷமருந்தி மாண்டார்.

**4. ஹன் பேரரசின் செழிப்பிற்கான காரணங்கள் யாவை?**

- ஹன் பேரரசு பட்டு வணிக வழித்தடத்தை வணிகத்திற்காக திறந்து விட்டது. இதனால் பெருமளவிலான ஏற்றுமதி பண்டங்கள், முக்கியமாக பட்டு துணிகள் ரோம பேரரசு வரை சென்றடைந்தன.
- மேலும் ஹன் பேரரசின் வடபகுதியில் வாழ்ந்தவர்களில் கைவினைஞர்களும், கால்நடைகளை மேய்பவர்களும் குதிரைகளைக்கான காப்புக்கவசம், சேணம், குதிரையில் பயணிப்போர் பாதங்களை வைத்துக் கொள்வதற்கான அங்கவடி போன்ற புதிய நுட்பங்களை கண்டுபிடித்து ஏற்றுமதி செய்தனர்.

- மேலும் பாலங்கள் கட்டுதல், மலைப்பகுதிகளில் சாலைகள் அமைத்தல், கடற்பயணம் செய்தல் ஆகியவற்றிற்கான தொழில் நுட்பங்களைக் கொண்டு வந்தனர். இவர்களின் இந்த புதிய தொழில் நுட்பங்களால் ஹன் பேரரசு செழிப்புற்று விளங்கியது.

**5. புனித சோபியா ஆலயம் பற்றி எழுதுக.**

- புனித சோபியா ஆலயம் கி.பி. ஆறாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் கட்டப்பட்டதாகும்.
- அக்கால ஐரோப்பாவின் மிக நேர்த்தியான கட்டடமான இத்தோவாலயம் பல புதுமையான கட்டடக்கலை நுணுக்கங்களுக்கு பெயர் பெற்றதாகும்,
- கான்ஸ்டான்டி நோபிள் நகரை உதுமானிய துருக்கியர் கைப்பற்றிய போது இத்தோவாலயம் ஒரு மசூதியாக மாற்றப்பட்டது.

## VI. கீழ்க்கண்ட தலைப்பில் உள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளி :

**1. ரோம் ஒரு பேரரசாக உருவாதல்**

**அ) கிராக்கஸ் சகோதரர்கள் யார்?**
டைபிரியஸ் கிராக்கஸ் மற்றும் காரியஸ் டோ கிராக்கஸ்.

**ஆ) அவர்கள் ஆற்றிய பங்கு என்ன?**
ஏழை விவசாயிகளுக்கு ஆதரவாக அரசுக்கு எதிராக தங்கள் கருத்துக்களை கூறினர்.

**இ) அவர்களின் உயிர்த் தியாகத்தின் வெளிப்பாடு என்ன?**
ரோம் குடியரசு ரோமப்பேரரசாக மாற்றம் பெற்றது.

**ஈ) முதல் ரோமப் பேரரசர் யார்?**
முதல் ரோமப் பேரரசர் “அகஸ்டஸ்” ஆவார்.

**2. ஹன் பேரரசு :**

**அ) ஹான் பேரரசைத் தோற்றுவித்தவர் யார்?**
லீயு - பங்.

**ஆ) ஹன் பேரரசின் தலைநகரம் எது?**
சாங் - அன்.

**இ) ஹன் பேரரசின் புதிய தலை நகரம் எங்குள்ளது?**
சீனாவில் குவாங்ஷோ.

**ஈ) ஹன் பேரரசின் புகழ் பெற்ற வலிமை வாய்ந்த அரசர் யார்?**
வு - தை.

## VII. கீழ்க்காணும் வினாக்களுக்கு விரிவான விடையளி :

**1. ஏதென்ஸின் எழுச்சி, வளர்ச்சி ஆகியவற்றையும், அதன் சிறப்புமிக்க கொடைகளையும் சுட்டிக்காட்டுக.**

**ஏதென்ஸின் எழுச்சி :**

- ✦ ஏதென்ஸில் அடித்தள மக்கள் கொடுத்த அழுத்தத்தின் விளைவாக குழு ஆட்சியும், கொடுங்கோலட்சியும் அகற்றப்பட்டு மக்களாட்சி முறை நிறுவப்பட்டது.
- ✦ இங்கு 200 ஆண்டுகள் மக்களாட்சி நீடித்தது. ஏதென்ஸ் நகர் பெரிகிளிஸ் என்னும் மாபெரும் தலைவரைப் பெற்றிருந்தது. அவர் முப்பதாண்டு காலம் அதிகாரத்தில் இருந்தார்.
- ✦ இவருடய ஆட்சியின் போது ஏதென்சும், அண்டை நகர அரசான ஸ்பார்ட்டாவும் ஒன்றுக்கெதிராக மற்றொன்று தொடர்ந்து போர் செய்து வந்தன
- ✦ இந்த போர்கள் பெலப்போனேசியப் போர்கள் என அழைக்கப்பட்டன. இந்த போர் இடையூறுகள் இருந்த போதிலும் ஏதென்ஸ் எழுச்சியை எட்டத் தொடங்கியது.

**ஏதென்ஸின் வளர்ச்சி :**

- ✦ ஏதென்ஸ் நகர மக்கள் நாட்டுபற்றுடன் இருந்ததால் நகரம் பல இடையூறுகளுக்கு கிடையிலும் பிரமிக்கச் செய்யும் கட்டிடங்களைக் கொண்ட உன்னதமான நகரமாக மாறியது.
- ✦ அந்நகரத்தில் மாபெரும் கலைஞர்களும் சிந்தனையாளர்களும் இருந்தனர்.

**ஏதேன்ஸின் சிறப்பு :**

- ✦ வரலாற்று அறிஞர்கள் இந்தகாலத்தை பெரிகிளிசின் காலம் என அழைக்கின்றனர். புகழ்பெற்ற கிரேக்க வரலாற்று அறிஞர்களான ஹெரோடோட்டசும்.
- ✦ அவர் பின் வந்த தூசிடைடிசும் இக்காலத்தில் வாழ்ந்தவர்களாவர். மேலும் சிந்தணையாளர் சாக்ரடீஸ், இவரின் சீடர் பிளாட்டோ ஆகியோர் “உண்மை” என்பது மனித அனுபவங்களுக்கு அப்பார்பட்ட பகுதியை சார்ந்ததாகும்.
- ✦ அதை மாபெரும் தத்துவ ஞானிகளால் மட்டுமே உயர்ந்துணர முடியுமென்று வாதிட்டனர்.
- ✦ பிளாட்டோவிடம் கல்வி கற்று வந்த அரிஸ்டாட்டில் இயற்பியல் உலகம் பற்றி அறிவிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார்.
- ✦ டெமோகிரைடஸ், எபிகியூரஸ் ஆகிய இருவரும் உலகம் பற்றிய பொருள் முதல்வாதக் கண்ணோட்டதை வளர்த்தனர்.

**சிறப்பு மிக்க கொடைகள் :**

- ✦ ஏதென்ஸ் நகர குன்றின் மீது கட்டப்பட்ட அக்ரோபொலிஸ் கோட்டை. ஒலிம்பியா ஜீயஸ் கோவில் அலெக்ஸாண்டிரியா நகரம். கணிதம் தொடர்பான வடிவியல் தேற்றங்களை யூசினிட் முறைப்படுத்தியது.


- ✦ பூமியின் விட்டத்தை துல்லியமாக கணக்கிட்ட ஏரோட்டோஸ்தன்ஸ், முக்கோணவியலை கண்டுபிடித்த ஹிப்பார்கஸ், நட்சத்திரங்கள் எவ்வாறு நகர்கின்றன என்பது குறித்து ஒரு மாதிரி அமைப்பை உருவாக்கிய டாலமி, போன்றவர்கள் தோன்றியதெல்லாம்
- ✦ இவர்கள் பேரரசுக்கு கிடைத்த கொடைகளாகும். மேலும் ஒலிம்பிக் விளையாட்டு போட்டி உலகிற்கு கிடைத்த பெரிய கொடையாகும்.

**2. செவ்வியல் காலத்தில் இந்தியாவின் நிலை குறித்து எழுதுக.**


- ✦ குஷாணர்கள் காலம் ரோமானியப் பேரரசின் இறுதி காலகட்டமான ஜூலியஸ் சீசரின் ஆட்சி காலத்தின் சமகாலமாகும். ஜூலியஸ் சீசரின் காலத்துக்குப் பின் ஆட்சிக்கு வந்த அகஸ்டஸ் சீசர் அவைக்கு குஷாணர்கள் ஒரு தூதுக்குழுவை அனுப்பியதாகக் கூறப்படுகிறது.
- ✦ செவ்வியல் காலத்தின் சமகாலமான சங்ககாலத்தில் (கி.மு.(பொ.ஆ.மு)-3ம் நூற்றாண்டு முதல் கி.பி.(பொ.ஆ)-3ம் நூற்றாண்டில் பதினெண்மேல்கணக்கு என்றழைக்கப்படும் சங்க இலக்கியங்களான பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் தொகுக்கப்பட்டன.
- ✦ சங்க இலக்கியம் இந்தியாவின் முதல் சமயச் சார்பற்ற இலக்கியம் என போற்றப்படுகிறது.
- ✦ செவ்வியல் காலத்தின் இறுதிக் காலத்துடன் (நான்கு மற்றும் ஐந்தாம் நூற்றாண்டுகள்) பொருந்திய களப்பிரர் காலத்தில் பாபிலோனியா, எகிப்து, கிரேக்கம் மற்றும் ரோம் ஆகியவற்றோடு மலபார் கடற்கரை வழி நடத்த வணிகம் மேலும் செழிப்படைந்தது. தேக்கு, மிளகு, மணிகள் மற்றும் தந்தம் போன்றவை ஏற்றுமதியாயின.

**மாணவர் செயல்பாடு**

**1. ஐரோப்பிய வரைபடத்தில் மேலே மற்றும் கீழை ரோமானிய பேரரசுகளின் எல்லைகளைக் குறிக்கவும்.**



2. ஆசிரியரின் உதவியோடு மாணவர்கள் கூகுள் இணையத்தில் கிரேக்கம், ரோம் மற்றும் சீனாவின் சிறப்புமிக்க கட்டடக்கலை அழகினைப் பார்க்கவும்.


Temple of Athena


Temple of Parthenon


Colosseum, Rome


Sistine chapel, Vatican


Great Wall of China


Buddhist temple in China

## கூடுதல் வினாக்கள்

### I. கோடிட்ட இடத்தை நிரப்புக :

1. ரோம் அரசுக்கு அதிக வருவாயை அள்ளிக் கொடுத்த வியாபாரம் ________ .

**விடை: அடிமை வியாபாரம்**

2. ரோமில் கி.மு. முதலாம் நூற்றாண்டில் இருந்த அடிமைகளின் எண்ணிக்கை ________ .

**விடை: 2 மில்லியன்**

3. கான்சல்கள் மற்றும் செனட்டர்கள் ________ நலன்களைப் பாதுகாத்தனர்.

**விடை : நிலப்பிரபுக்களின்**

4. செவ்வியல் காலத்தின் இறுதி காலத்தில் இந்தியாவில் __________ கடற்கரை வழியாக வணிகம் நடைபெற்றது.
**விடை : மலபார்**

5. பைசாண்டிய பேரரசு இறுதியில் __________ ஆண்டு __________ துருக்கியரிடம் வீழ்ந்தது.
**விடை: கி.பி. 1453ம், உதுமானிய**

## II. சரியான விடையை தேர்வு செய்க :

**1. ரோமானிய பேரரசர்களை கிறித்தவர்கள் மரியாதை செய்யாததால் அவர் எந்த துன்புறத்தலுக்கு உள்ளாயினர்?**

அ) சிறையில் பல ஆண்டு அடைக்கப்பட்டனர்.
ஆ) சிங்கத்தின் முன் வீசப்பட்டனர்.
இ) மக்கள் முன்னிலையில் சித்திரவதை செய்யப்பட்டனர்.
ஈ) உடனடியாக கொல்லப்பட்டனர். **[விடை : ஆ]**

**2. சின் வம்சத்தின் வீழ்ச்சிக்கு காரணம்**

அ) உள்நாட்டு போர்
ஆ) பிறநாட்டினரின் படையெடுப்பு
இ) விவசாயிகளின் போரட்டம்
ஈ) திறமை வாய்ந்த மன்னர்கள் இல்லாதது
**[விடை: இ]**

**3. குதிரையில் பயணிப்போர் பாதங்களை வைத்துக் கொள்வதின் பெயர் என்ன?**

அ) சேணம் ஆ) அங்கவடி இ) காப்புக் கவசம் ஈ) சிகுரட்கள் **[விடை: ஆ]**

**4. செனிக்கா எழுதிய தத்துவ நூலின் பெயர்?**

அ) இயற்கை வரலாறு ஆ) ஏனேய்ட் இ) பியூனிக் ஈ) ஓட்ஸ் **[விடை: ஈ]**

**5. மெடிக்ஸ் என அழைக்கப்பட்டவர் யார்?**

அ) அடிமைகள்
ஆ) பாரசீகர்
இ) வணிகர்கள்
ஈ) விவசாயிகள் **[விடை: அ]**

## III. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| 1. | யூசினிட் | - | வடிவியல் |
| 2. | டாலமி | - | நட்சத்திரங்களின் நகர்வு |
| 3. | பிளினி | - | அறிவியல் கலை களஞ்சியம் |
| 4. | வெர்ஜில் | - | ஏனேய்ட் |
| 5. | அரிஸ்டாட்டில் | - | இயற்பியல் |

## IV. சிலவரிகளில் விடையளி :

**1. சாக்ரடீஸ் மீதுயுள்ள குற்றச்சாட்டு யாது? அவரின் இறப்பு பற்றி எழுதுக.**

சாக்ரடீஸ் முன்வைத்த வழிமுறைகளை அரசு ஏற்கவில்லை, அரசால் அங்கீகரிக்கப்பட்ட கடவுளைசாக்ரடீஸ்விரும்பவில்லை. இதனால்சாக்ரடீஸ்அரசுக்குஎதிராகசெயல்படுவதாகவும்,

இளைஞர்களை தவறான பாதைக்கு அழைத்து சென்றார் எனவும் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு குற்றவாளி என தீர்மானித்து விஷம் பருகச் செய்து மரணம் அடைந்தார்.

2. **ரோம் பேரரசு எவ்வாறு பிரிக்கப்பட்டிருந்தது? டெலாஸ் தீவு பற்றி கூறுக.**
ரோம் பேரரசு மேலை ரோம் பேரரசு, கீழை ரோம் பேரரசு என இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அடிமைகளை விற்பனை செய்யும் சந்தையாக டெலாஸ் தீவு இருந்தது.

3. **வன்முறை குணம் கொண்டவர்கள் என ரோமானியர்களால் கருதப்பட்டவர் யார்?**
முற்றிலும் வேறுபட்ட நாட்டைச் சார்ந்தவர்களை பண்பாட்டில் பின் தங்கியவர்கள் எனவே அவர்கள் வன்முறை குணம் கொண்டவர்கள் என கருதினர்.

4. **பைசாண்டிய நாகரிகம் என்றால் என்ன?**
ரோமானியர்கள் தங்கள் நாகரிகத்தை கான்ஸ்டாண்டிநோபிளை தலைநகராகக் கொண்ட கிழக்கு பகுதியில் தொடர்ந்தனர். இது பைசாண்டிய நாகரிகம் என அழைக்கப்படுகிறது.

5. **அகஸ்டஸின் ஆட்சியில் ரோமானியர்கள் உலகுக்கு அளித்த பங்களிப்பு யாது?**
அகஸ்டஸின் ஆட்சியில் அறிவியல், தொழில் நுட்பம், கட்டடக் கலை, சிற்பக்கலை ஆகியவை வளம் பெற்றது. இது ரோமானியர்கள் உலகுக்கு அளித்த பங்களிப்பாகும்.

வரலாறு

9

பாடம் 6

# இடைக்காலம்

## பயிற்சிகள்

### I. சரியான விடையை தேர்ந்தெடு :

1. ________ ஜப்பானின் பழமையான மதம் ஆகும்.
அ) ஷின்டோ ஆ) கன்பியூசியானிசம்
இ) தாவோயிசம் ஈ) அனிமிசம் [விடை: அ]

2. ________ என்பதன் பொருள் பெரும் பெயர் என்பதாகும்.
அ) டய்ம்யாஸ் ஆ) சோகன்
இ) பியுஜிவாரா ஈ) தொகுகவா [விடை: அ]

3. ஸ்பெயினைக் கைபற்றிய அரேபிய தளபதி ________ ஆவார்.
அ) தாரிக் அ) அலாரிக்
இ) சலாடின் ஈ) முகமது என்னும் பெற்றியாளர் [விடை: அ]

4. ஹருன் - அல் ரஷித் என்பவர் ________ன் திறமையான அரசர்.
அ) அப்பாசித்து வம்சம் அ) உமையது வம்சம்
இ) சசானிய வம்சம் ஈ) மக்கோலிய வம்சம் [விடை: அ]

5. நிலப்பிரபுத்துவம் ________ மையமாகக் கொண்டது.
அ) அண்டியிருத்தலை அ) அடிமைத்தனத்தை
இ) வேளாண் கொத்தடிமையை ஈ) நிலத்தை [விடை: அ]

### II. கோடிட்ட இடத்தை நிரப்புக :

1. ________ என்பவர்கள் ஜப்பானின் பூர்வ குடிகள் ஆவர். விடை: அய்னஸ்
2. ________ என்பது ஜப்பானின் முன்னாள் பெயர் ஆகும். விடை: யமட்டோ
3. ________ என்பது மெதினாவின் முந்தையப் பெயர் ஆகும். விடை: மதினாட் - உன் - நபி
4. வடக்குப் பகுதியில் இருந்த சீனர்களுக்கு ________ என்ற பண்பாட்டில் பின் தங்கியவர்கள் அச்சுறுத்தலைக் கொடுத்தனர். விடை: மங்கோலியர்கள்
5. உதுமானியர் மேலாண்மையை பால்கன் பகுதியில் நிறுவியவர் ________ ஆவார். விடை: இரண்டாம் முகமது

## III. சரியான கூற்றினை தேர்வு செய்க :

1. i) செங்கிஸ்கான் ஒரு மத சகிப்புத் தன்மை இல்லாதவர்.
   ii) மங்கோலியர் ஜெருசலேமை அழித்தனர்.
   iii) உதுமானியப் பேரரசை சிலுவைப் போர்கள் வலுவிழக்கச் செய்தன.
   iv) போப்பாண்டவர் கிரிகோரி நான்காம் ஹென்றியை மதவிலக்கம் என்னும் ஆயுதத்தைப் பயன்படுத்தி பதவி விலகச் செய்தார்.

   அ) (i) சரி　ஆ) (ii) சரி
   இ) (ii) மற்றும் (iii) சரியானவை　ஈ) (iv) சரி　**[விடை: ஈ]**

2. i) மங்குகான் என்பவர் சீனாவின் ஆளுநர்.
   ii) சீனாவில் இருந்த மங்கோலிய அரச சபை மார்க்கோபோலோவின் நன்மதிப்பைப் பெற்றது.
   iii) சிகப்புத் தலைப்பாகை என்ற அமைப்பின் தலைவராக இருந்தவர் ஹங்சாவோ.
   iv) மங்கோலியர்கள் சீனாவில் தங்களது ஆட்சியை யுவான் வம்சம் என்ற பெயரில் நிறுவினார்.

   அ) (i) சரி　ஆ) (iii) சரி
   இ) (ii) மற்றும் (iii) சரியானவை　ஈ) (iv) சரி　**[விடை: இ]**

3. i) போயங் மற்றும் சங் – ஆன் ஆகியவை சுங் வம்சத்தால் கட்டப்பட்டது.
   ii) விவசாயிகளின் எழுச்சி சாங் வம்சம் அழிய வழி கோலியது.
   iii) செல்ஜூக் துருக்கியர் என்பவர் தார்த்தாரியர் என்னும் பழங்குடியினர் ஆவர்.
   iv) மங்கோல்யர்கள், ஜப்பானில் தங்களது ஆட்சியை யுவான் வம்சம் என்ற பெயரில் நிறுவினர்.

   அ) (i) சரி　ஆ) (ii) சரி　இ) (iii) சரி　ஈ) (iv) சரி　**[விடை: ஆ]**

4. **கூற்று** : பௌத்தமதம் இந்தியாவிலிருந்து சீனாவிற்கு சென்றது.
   **காரணம்** : சீனாவில் தொடக்க காலத்தில் குடியேறிய இந்தியர்கள் பௌத்த மதத்தை பின்பற்றியவர்கள்.

   அ) கூற்று சரி, காரணம் தவறு.
   ஆ) கூற்றும் காரணமும் தவறு.
   இ) கூற்றும் காரணமும் சரியானவை.
   ஈ) கூற்று தவறு காரணம் கூற்றுக்கு தொடர்பற்றது.　**[விடை: அ]**

5. **கூற்று** : ஜெருசலேமை துருக்கியர் கைப்பற்றிக் கொண்டது சிலுவைப் போருக்கு காரணமானது.
   **காரணம்** : ஜெருசலேமிற்கு புனிதப் பயணம் மேற்கொள்ள ஐரோப்பிய கிறித்தவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

   அ) கூற்று சரி, காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல.
   அ) கூற்றும், காரணமும் சரி.
   இ) கூற்றும், காரணமும் தவறு.
   ஈ) கூற்று சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம்.　**[விடை : அ]**

## IV. பொருத்துக (விடையுடன்) :

| | | | |
|---|---|---|---|
| 1. | சிகப்பு தலைப் பாகைகள் | - | சூ யுவான் சங் |
| 2. | செல்ஜீக் துருக்கியர்கள் | - | மத்திய ஆசியா |
| 3. | முதல் சோகுனேட் | - | காமகுரா |
| 4. | பாக்தாத் | - | அரேபிய இரவுகள் நகரம் |
| 5. | கான்ஸ்டாண்டி நோபில் கைப்பற்றப் படல் | - | இரண்டாம் முகமது |

## V. சுருக்கமான விடையளி :

### 1. சீனப் பெருஞ்சுவர் :

- கி.மு 8 மற்றும் 7ஆம் நூற்றாண்டுகளின் இடைப்பட்ட காலப் பகுதியில் தங்களுக்குள்ளே போரிட்டுக் கொண்டிருந்த சீன அரசுகள், வடக்கேயிருந்து வரும் எதிரிகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு சுவர்களை எழுப்பிக் கொண்டன.
- சின் அரச வம்சத்தின் காலத்தில் தனித்தனியாக இருந்த பலசுவர்கள் இணைக்கப்பட்டன இதன் வினைவாக கிழக்கிலிருந்து மேற்காக சுமார் 5000 கிலோ மீட்டர் நீளமுடய பெருஞ்சுவர் உருவானது.
- இச்சுவர் உலக அதிசயங்களில் ஒன்றாக கருதப்படுகிறது. இச்சுவர் நாடோடி பழங்குடியினர் உள்ளே நுழையாதவாறு தடுத்தது. பின்னர் ஆட்சி புரிந்த பல அரச வம்சத்தினர் காலத்தில் இச்சுவர் விரிவு செய்யப்பட்டு வலுவூட்டப்பட்டது. தற்போது சீனப் பெருஞ்சுவரின் மொத்த நீளம் 6700 கிலோ மீட்டர் ஆகும்.

### 2. சிலுவைப் போர்களின் தாக்கம் :

- சிலுவைப் போர்கள் நிலப்பிரபுத்துவம் சார்ந்த உறவுகளுக்கு முடிவு கட்டியது. சிலுவைப் போரில் பங்கு பெறுவதற்காக கிழக்கே சென்று பல பிரபுக்கள் நீண்ட காலத்திற்கு அங்கயே தங்க நேர்ந்தது சிலர் திரும்பி வரவேயில்லை.
- இந்த சூழ்நிலையை பயன்படுத்தி பண்ணை அடிமைகள் பலர் நிலத்தோடு கட்டிப்போட்டிருந்த அடிமைக் கட்டுகளை உடைத்து வெளியேறினர். மத்திய தரைக்கடல் பகுதியில் வெனிஸ், ஜெனோவா பைசா ஆகிய நகரங்கள் முக்கிய வணிக மையங்களாக தோன்றின.
- கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையேயான வணிகத்தில் கான்ஸ்டாண்டி நோபில் நகரம் வகித்து வந்த இடைத்தரகர் பாத்திரம் முடிவுக்கு வந்தது. வலிமை வாய்ந்த நிலபிரப்புகள் அழிந்து போனது, முடியாட்சி வலுப்பெறுவதற்கு காரணமாயிற்று, போப்பாண்டவரும் அவருடய ஆட்சி முறையும் செல்வாக்கும் மரியாதையும் இழக்க நேர்ந்தது.

### 3. இடைக்காலத்தின் நிலப்பிரபுத்துவம் எவ்வாறு அமைக்கப்பட்டிருந்தது?

- கடவுளின் பிரதிநிதியாகக் கருதப்படும் அரசர் நிலப்பிரபுத்துவத்தின் தலைவராகக் கருதப் பட்டார். அவர்களுக்கு அடுத்த நிலையில் கோமகன்களாகக் கருதப்பட்ட டியூக்குகள் (Dukes), 'கவுண்ட்'டுகள் (Counts) மற்றும் 'யேல்'கள் (Earls) போன்றோர் இருந்தனர்.

- இந்த நிலப்பிரபுக்கள், நிலப்பிரபுத்துவ அடிப்படையில் அரசரிடம் இருந்து நிலம் பெற்றுக் கொண்டு அவருக்காக போரிட சம்மதித்த வகுப்பினர் ஆவர். அரசர் நிலங்களைப் பிரித்து இவர்களுக்குக் கொடுத்தார். இவர்கள் தாங்கள் பெற்ற நிலங்களை பிப் (Fief) துண்டுகளாகப் பிரித்தனர். தங்களுக்குக் கீழிருந்த வைஸ் கவுண்ட் என்பவர்களுக்கு விநியோகம் செய்தனர். இவ்வரிசையில் இறுதி இம் பெற்றவர்கள் நைட் (Knight) எனப்படும்.
- சிறப்புப்பணி வீரர்கள். இவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட நிலத்தை வேறு எவருக்கும் பிரித்துத்தர முடியாது. இவர்கள் அனைவருக்கும் கீழ் அடிமட்டத்தில் இருந்தவர்கள் வில்லொயன் அல்லது செர்ப் என்றறியப்பட்ட பண்ணை அடிமைகள் ஆவர்.

**4. இடைக்காலத்தில் சமய குருமார்கள் தங்கள் அதிகாரத்தை வலியுறுத்தப் பயன்படுத்திய இரண்டு கருவிகள் யாவை?**

- திருச்சபையிலிருந்து விலக்கி வைப்பது.
- மதவிலக்கு செய்வது.

## VI. கீழ்க்கண்ட தலைப்பில் உள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளி :

**1. ஜப்பானின் சோகுனேட்கள் :**

**அ) ஜப்பானில் பதவிக்காக சண்டையிட்டுக் கொண்ட டய்ம்யாஸ் குடும்பங்கள் இரண்டைக் குறிப்பிடுக.**
தாரா, மின மோட்டா.

**அ) இப்போரில் வெற்றிப் பெற்றவர் யார்?**
யோரிடோமோ.

**இ) பேரரசர் வெற்றி பெற்றவருக்கு கொடுத்த பட்டம் என்ன?**
செ-ய்-தாய்-சோகன் (பண்பாடற்றவர்களை அடக்கிய மாபெரும் தளபதி).

**ஈ) முதல் சோகுனேட்டின் தலைநகர் எங்கே நிறுவப்பட்டது?**
காமகுரா.

**2. அப்பாசித்துக்களின் ஆட்சி :**

**அ) அப்பாசித்துகள் என்போர் யார்?**
நபிகள் நாயகத்தின் மாமன் அப்பாஸ் என்பவரின் வழி வந்தவர்.

**அ) அப்பாசித்து காலிஃபா சூட்டிக் கொண்ட பட்டம் என்ன?**
நம்பிக்கையாளர்களின் தளபதி.

**இ) அவர்களின் புதிய தலைநகரம் எங்குள்ளது?**
பாக்தாத்.

**ஈ) யாருடைய ஆட்சியில் அப்பாசித்து பேரரசு புகழின் உச்சத்தை எட்டியது?**
ஹருன் - அல் - ரசீத்.

## VII. விரிவான விடையளி :

**1. சோகுனேட்களின் கீழ் ஜப்பானின் எழுச்சி பற்றி விரிவாகக் கூறுக.**


- ✦ சோகுனேட்கள் ஆட்சியின் போது ஜப்பானின் பேரரசர் யோரிடோமோ தனது ராணுவத் தலைமையகத்தை காமகுராவில் நிறுவினர். இதனால் நிலபிரபுத்துவ ராணுவத் தன்மை கொண்ட அரசு சாமுராய் எனப்பட்ட இராணுவ வீரர்களால் நிர்வகிக்கப்பட்டது.
- ✦ ஆசிய வரலாற்றின் போக்கை மாற்றியமைத்த மற்றும் ஐரோப்பாவை பயமுறுத்திய மங்கோலியரை சோகுனேட்களின் தலைமையில் ஜப்பான் வெற்றிக் கொண்டது.
- ✦ சோகுனேட்டுகளின் மற்றொரு பிரிவைச் சார்ந்த அஷிக்காகா. சோகுனேட்டுகள் 235 ஆண்டுகள் ஆட்சி செய்தனர். இவர்களின் ஆட்சியின் போது அரசியல் குழப்பங்களும் அதிகாரப் போட்டிகளும் நிறைந்ததாய் இருந்தது இறுதியில் போர்புநாக; டய்ம்யாஸ் அல்லது ஹிடயோஷி தொகுகவா இய்யாசு ஆகியோர்களால் உள்நாட்டு போர்களிலிருந்து ஜப்பானை மீட்டு 16 நூற்றாண்டில் ஒருங்கிணைத்தனர். இவ்வாறு ஜப்பான் சோகுனேட்கள் காலத்தில் எழுச்சி அடைந்தது.

**2. மங்கோலியர்கள் என்பவர் யார்? அவர்கள் சீனாவை எவ்வாறு ஆட்சி செய்தனர்?**

- ✦ மங்கோலியர்கள் நாடோடிகள் ஆவர். இவர்கள் ஆசிய ரஷ்யாவின் ஸ்டெப்பிஸ் மேய்ச்சல் நிலப்பகுதிகளிலிருந்து ஐரோப்பாவிற்குள் வந்தவர்கள்.
- ✦ அவர்கள் கால்நடை மேய்ப்பவர்கள், போர்த்திறன் கொண்டவர்கள். இவர்களுடைய மதம் சாமனிசம் ஆகும். ரஷ்யாவை 300 ஆண்டு காலம் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்கள்.
- ✦ பாரசீகத்தையும் ஒட்டு மொத்த மத்திய ஆசியாவையும் கை பற்றிய மங்கோலியர்கள் சீனாவை கைபற்றினர். சீனாவின் ஆளுநராக கும்ளேதான் இருந்தார்.
- ✦ சீனாவின் தொழில் நுட்ப முன்னேற்றங்களை அவர் இதர வளர்ச்சி குன்றிய மேற்கு சமூ கங்களிடையே பரப்பினார்.
- ✦ இதனால் பல நாடுகளில் பீங்கான், செராமிக் ஓடுகள், செய்யும் தொழில் நுட்பங்களை கற்றன. இவர்களுடைய ஆட்சி மார்கோபோலோ போன்ற வெளிநாட்டு அறிஞர்களிடம் நன்மதிப்பை பெற்று விளங்கியது.
- ✦ இருப்பினும் விவசாயிகள் இவர்கள் ஆட்சியில் வறுமையில் வாடினர். இதனால் சில மதம் சார்ந்த அமைப்புகளும் ரகசிய அமைப்புகளும் புரட்சியில் இறங்கின.
- ✦ இதனால் சிகப்பு தலைபாகைகள் என்ற அமைப்பு உருவாகியது. இந்த அமைப்பினரால் மங்கோலியர் ஆட்சி சீனாவில் முடிவுற்றது.

**மாணவர் செயல்பாடு**

1. ஐரோப்பிய வரைபடத்தில் உதுமானிய பேரரசு புகழின் உச்சத்தில் இருந்தபோது அதன் எல்லையை குறிக்கச் செய்யவும்.




2. சாரசனிக் கட்டடக் கலையின் மகோன்னத நிலையை கூகுள் ஆசிரியருடன் அறிந்து கொள்ள செய்தல்.









9

வரலாறு

# கூடுதல் வினாக்கள்

## I. கோடிட்ட இடத்தை நிரப்புக :

1. ஐரோப்பாவைக் காட்டிலும் சீனா சுமார் __________ ஆண்டுகளுக்கு முன்னே அச்சடிக்கப்பட்ட புத்தகங்களைக் கொண்டிருந்தது. **விடை: 500 ஆண்டுகள்**

2. தாங் அரச வம்சம் ________ மற்றும் _________ தலைநகர்களை உருவாக்கினர். **விடை: போயாங், சாங்-ஆன்**

3. நபிகள் மெக்காவை விட்டு இடம் பெயர்ந்த நிகழ்வை அராபிய மொழியில் _________ என அழைக்கின்றனர். **விடை: ஹிஜிரா**

4. மங்கோலியர்களின் மிக சிறந்த ராணுவ ஆற்றல் மிக்க தலைவன் யார் __________. விடை: செங்கிஸ்கான்

5. புனித நகரமான ஜெருசலேமை __________ துருக்கியர்கள் கைபற்றிக் கொண்டது ________ போர்களுக்கு காரணமானது. **விடை: செல்ஜீக், சிலுவை**

## II. சரியான விடையை தேர்வு செய்க :

**1. நிலப்பிரபுத்துவத்தின் கடவுளின் பிரதிநிதியாக கருதப்பட்டவர் யார்?**

அ) பிஷப்புகள் ஆ) கார்டினல்கள்
இ) அரசர் ஈ) அபாட்டுகள் **[விடை: இ]**

**2. தங்களுக்கு வழங்கப்பட்ட நிலத்தை வேறு எவருக்கும் பிரித்து தரமுடியாத வீரர்கள் யார்?**

அ) யேல்கள் ஆ) நைட்கள்
இ) கவுண்ட்டுகள் ஈ) அடிமைகள் **[விடை: ஆ]**

**3. சிலுவை போரினால் மத்திய தரைக்கடல் பகுதியில் உருவான நகரங்கள் எத்தனை?**

அ) 4 ஆ) 2
இ) 3 ஈ) 1 **[விடை: இ]**

**4. அப்பாசித்து பேரரசு யாருடய படையெடுப்பால் முடிவுக்கு வந்தது.**

அ) மங்கோலியர்கள் ஆ) உதுமானியர்கள்
இ) துருக்கியர்கள் ஈ) அராபியர்களால் **[விடை: அ]**

**5. ரோமானிய பேரரசின் கீழ் பெரும் துயரங்களை அனுபவித்த மக்கள் யார்?**

அ) எகிப்திய மக்கள் ஆ) பாரசீகர்கள்
இ) யூதர்கள் ஈ) பினமோட்டா குடும்பத்தினர் **[விடை: அ]**

## III. பொருத்துக (விடையுடன்) :

| | | | |
|---|---|---|---|
| 1. | அப்பாசித்துக்கள் | - | நம்பிக்கையாளர்களின் தளபதி |
| 2. | சாரா செனஸ் | - | அராபியர்கள் |
| 3. | ஈராக் | - | பாக்தாத் |
| 4. | ஜப்பான் | - | யமட்டோ |
| 5. | பெரிய குடும்பம் | - | சோகா |

## IV. குறுகிய விடையளி :

**1. உமையது ஆட்சியின் கட்டடக்கலை பற்றி கூறுக.**

- உமையது என்பவர்கள் நபிகள் நாயகத்தின் குடும்பத்தின் ஒரு உறவு வழியைச் சார்ந்தவர்கள், இவர்கள் ஒரு புதிய பாணியிலான கட்டடக்கலையை வளர்த்தனர். அதற்கு சாரசனிக் கட்டடக் கலை என்று பெயர்.
- இந்தக் கட்டடக்கலையில் வளைவுகள் அமைந்த தூண்கள், கவிகை மாடங்கள், மினார் எனப்படும் கோபுரங்கள் கொண்டவையாகும்.
- இவர்களின் கட்டடக்கலை இந்திய கட்டடக்கலை பாணிகளோடும் கலந்தது. இவர்களது தலைநகர் டமாஸ்கஸ் ஆகும்.

**2. தாங் அரச வம்சத்தின் பொது பணியில் உருவான தலைநகரங்கள் எவை?**

போயாங், சாங் - ஆன்.

**3. இடைக்காலத்தின் இந்தியாவில் ஸ்கந்தகுப்தரால் முறியடிக்கப்பட்ட எதிரிகள் யார்?**

ஹுன் இனத்தவர்களும், கடுமையான போர்குணம் கொண்ட மத்திய ஆசிய மக்கள்.

**4. பீப் என்றால் என்ன?**

பீப் என்பது ஒருவருக்கு அவரைவிட மேல்நிலையில் இருக்கும் கோமகனால் வழங்கப்படும் நிலம். நிலத்தைப் பெற்றவர் நிலம் கொடுத்தவரக்கு கைமாறாக சில சேவைகளைச் செய்ய வேண்டும் அது அவருடய கடமையாகும்.

**5. சீனாவின் தொழில் வளர்ச்சி பற்றி கூறுக.**

- சீனாவில் வணிகமும் தொழில்களும் செழித்து வளர்ந்தன. எஃகு மற்றும் இரும்பு, தொழிற்சாலைகள் செழித்து வளர்ந்தன. அவைகள் கட்டுக்கோப்பாக நடத்தப்பட்டன.
- 1078ல் சீனா உற்பத்தி செய்த இரும்பு 114000, டன்னை தாண்டியது. செராமிக் ஓடுகள் மற்றும் பீங்கான் பொருட்கள் செய்வதிலும் தனித்திறன் பெற்று விளங்கியது.
- வெடிமருந்து பயன்பாட்டிலும், அச்சடிக்கப்பட்ட புத்தகங்களையும் பல நாடுகளுக்கு அறிமுகம் செய்தது.
- ஐரோப்பாவைக் காட்டிலும் 500 ஆண்டுகளுக்கு முன்பே பல துறைகளில் சீனா முன்னேறி இருந்தது.

**6. பாக்தாத் நகர் பற்றி கூறுக.**

- அப்பாசித்துக்கள் ஆட்சியில் ஈராக் நகரில் பாக்தாத் தலைநகர் ஆக்கப்பட்டது. பாக்தாத் நகர் அரேபிய இரவுகளின் நகரம் என அறியப்பட்ட நகரமாகும்.
- இது அரண்மனைகள், பொதுக்கட்டடங்கள், பள்ளிகள், கல்லூரிகள், பெரிய கடைகள், பூங்காக்கள் மற்றும் தோட்டங்களைக் கொண்ட விரிந்து பரந்த நகரமாகும்.
- உலகத்தின் பல பகுதிகளிலிருந்தும் பார்வையாளர்கள், குறிப்பாக படித்த அறிஞர்கள், மாணவர்கள், கலைஞர்கள் பாக்ததாத்திற்கு வந்தார்கள்.

**7. திருச்சபை விலக்கம் என்றால் என்ன?**

- ஒரு மனிதன் கிறித்தவனாக இருப்பதால் என்ன உரிமைகளுக்குத் தகுதியானவரோ அவ்வுரிமைகள் அவருக்கு மறுக்கப்படுவதாகும்.
- அவர் திருச்சபைக்குள் புனிதச் சடங்குகளைச் செய்ய முடியாது. இறந்த பின்னர் அவருடைய உடலைத் திருச்சபைக்குச் சொந்தமான கல்லறைத் தோட்டத்தில் புதைக்க முடியாது.



## V. விரிவான விடையளி :

**1. இடைக்காலத்தில் சீனாவில் உருவான தாங் சுங் பேரரசுகளை பற்றி கூறுக.**

- சூயி வம்சத்தின் வீழ்ச்சிக்கு பின் தாங் வம்சம் உருவானது. தாங் வம்சம் உருவாக காரணமாக இருந்த லியுவான் என்பவர் யங்-யு என்பவரை பேரரசர் ஆக்கினார். ஆனால் யாங்-யு கொல்லப்பட்டதால் லியுவான் பேரரசராக பதவியேற்றுக் கொண்டார்.
- இவரது ஆட்சியில் சீன பெருஞ்சுவர் பல நூறு கிலோ மீட்டர் தொலைவுக்கு கட்டப்பட்டது. ராணுவ நடவடிக்கையால் இவர் சீனாவின் செல்வாக்கு கிழக்கே கொரியாவிலும், மேற்கே பாரசீகம் மற்றும் இந்தோ சீனா எல்லைவரையிலும் பரவின.
- தாங் அரச வம்சம் மிகப் பெரிய அளவிலான பொதுப்பணிகளை மேற்கொண்டது போயாங், சாங் – ஆன் என்னும் இரு தலைநகரங்கள் உருவாக்கப்பட்டன.
- நிலம் சிறுசிறு பகுதிகளாக பிரிக்கப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. உப்பு மற்றும் தேயிலை அரசின் முற்றுரிமையின் கீழ்ருந்ததால் அவை அரசுக்கு கூடுதல் வருவாயை நல்கின.
- எல்லைபுற ராணுவ தளபதி ராணுவப்புரட்சியில் ஈடுபட்டதால் பல ஆண்டுகள் பெருங்குழப்பம் ஏற்பட்டது. விவசாயிகள், பெருந்துயரங்களுக்கு உள்ளாயினர்.
- இதனால் நாட்டில் ஏற்பட்ட பெருங்கலகத்தால் இந்த அரசு ஐந்து பகையரசுகளாக பிரிந்தன. இதன் விளைவாக தாங் பேரரசு வீழ்ச்சியடைந்தது.

**சுங் பேரரசு :**

- தாங் பேரரசின் வீழ்ச்சிக்கு பிறகு அதிலிருந்து உருவான சுங் பேரரசு காலத்தில் வணிகமும், தொழில்களும் செழித்து வளர்ந்தன. இரும்பு மற்றும் எஃகு ஆலைகள் மிகவும் கட்டுக் கோப்பாக நடத்தப்பட்டன.

- இவர்கள் ஆட்சியில் அரசு அதிகாரிகளும். பணம் படைத்த வணிகர்களும் மிக வளமான வாழ்க்கையை வாழ்ந்தனர். விவசாயிகள் வறுமையில் அகப்பட்டு வாடினர்.
- வடக்கே இருந்து வந்த இரு வெளிநாட்டினர். படையெடுப்புகளால் சுங் வம்ச ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

**2. பாலைவனங்களில் வாழ்நத சாராசென்ஸின் ஆட்சியை பற்றி கூறுக.**

- சகாரா மற்றும் நஸின் என்னும் இரு சொற்களின் இணைப்பு சாராசென்ஸின் ஆகும். இதன் பொருள் பாலைவனத்தில் வாழ்பவர்கள் என்பது பொருள். இவர்களை அராபியர்கள் என்றும் அழைத்தனர்.
- இஸ்லாம் சகோதரத்துவம் என்னும் கருத்தை முன்வைத்தது. இஸ்லாமியர் அனைவரும் சரிசமமானவர்கள் என்றும் கூறியது.
- சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய இக்கருத்துகளால் தங்களுக்குள்ளே போர் செய்து கொண்டிருந்த அராபிய இனக் குழுக்களுக்கும், உலகின் பிற பகுதி வாழ்மக்களுக்கும் ஏற்புடையதாக இருந்தது.
- இக்கருத்துகளால் ஒருங்கிணைக்கப்பட்டு அராபியர்கள் ஒரு வலிமை வாய்ந்த சக்தியாக உருவாயினர். குறுகிய காலத்தில் அராபியர்கள் கீழை ரோமானியப் பேரரசையும் பாரசீக சாசனிட் அரசரையும் தோற்கடித்தனர்.
- யூதர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் புனித நகரமாக விளங்கிய ஜெருசலேம் அராபியர்களால் கைப்பற்றப்பட்டது. ஒட்டுமொத்த ஸ்பானியமும் பாரசீகமும் புதிய அராபியப் பேரரசின் கீழ்வந்தன.
- இஸ்லாமிய கருத்துக்கள் மக்களிடம் பெரும் ஈர்ப்பை ஏற்படுத்தி வரவேற்பைப் பெற்றன. இதனால் அராபியர்கள் எளிதாகப் பல பகுதிகளைக் கைப்பற்றினர்.
- அராபிய தளபதி தார்க் தலைமையிலான படை மொராக்கோவையும், ஆப்பிரிக்காவையும் கைப்பற்றி பல நூற்றாண்டுகள் வாழ்ந்தனர்.
- அராபியர்கள் அறிவியல் பூர்வமான கேள்வி ஞானம் உடையவர்கள், மருத்துவம், கணிதம் போன்ற துறைகள் தொடர்பான பலவற்றை இந்தியாவிலிருந்து கற்றுக் கொண்டனர்.
- இந்தியாவிலிருந்த தட்சசீலம் பல்கலைக் கழகத்தில் அராபியர் பலர் மருத்துவத்துறை சார்ந்தவைகளை கற்றறிந்தனர். அராபிய மருத்துவர்கள் அறுவை சிகிச்சை நிபுணர்களாக புகழ்பெற்று விளங்கினர்.
- ஏராளமான சமஸ்கிருத அறிவியல் புத்தகங்களை அராபிய மொழியில் மொழி பெயர்த்தனர்.
- இவர்கள் காலத்து தலைநகரான பாக்தாத் அரேபிய இரவுகளின் நகரம் என அறியப்பட்ட நகரமாகும்.
- புகழின் உச்சியில் இருந்த இந்த பேரரசு இஸ்லாமியர்களாக மாறிய துருக்கியர்கள் பாக்தாத்தை கைபற்றினர்.

வரலாறு

# பாடம் 7 இடைக்கால இந்தியாவில் அரசும் சமூகமும்

## பயிற்சிகள்

### I. சரியான விடையை தேர்ந்தெடு.

**1. விரிவடைந்து வரும் அலாவுதின் கில்ஜியின் இரண்டாவது வலிமை வாய்ந்த இடம் ________**

அ) தௌலதாபாத் ஆ) டெல்லி

இ) மதுரை ஈ) பிடார் **[விடை: அ]**

**2. தக்காண சுல்தானியங்கள் ________ ஆல் கைப்பற்றப்பட்டன.**

அ) அலாவுதீன் கில்ஜி ஆ) அலாவுதீன் பாமன்ஷ

இ) ஔரங்கசீப் ஈ) மாலிக்காபூர் **[விடை: இ]**

**3. ________ பேரரசு நிறுவப்பட்டது தென்னிந்தியாவின் நிர்வாக நிறுவனக் கட்டமைப்புகளை மாற்றியது.**

அ) பாமினி ஆ) விஜயநகர்

இ) மொகலாயர் ஈ) நாயக்கர் **[விடை: ஆ]**

**4. கிருஷ்ண தேவராயர் ________ ன் சமகாலத்தவர்.**

அ) பாபர் ஆ) ஹீமாயுன்

இ) அக்பர் ஈ) ஷெர்ஷா **[விடை: அ]**

### II. கோடிட்ட இடத்தை நிரப்புக :

1. இந்தியாவின் மேற்குக் கடற்கரைக்கு வந்த ஐரோப்பியர் ________. **விடை: போர்சுக்கீசியர்கள்**
2. கி.பி (பொ.ஆ) 1565 ஆம் ஆண்டு தக்காண சுல்தான்களின் கூட்டுப் படைகள் விஜய நகரை ________ போரில் தோற்கடித்தது. **விடை: தலைக்கோட்டை**
3. விஜய நகரம் ஓர் ________ அரசாக உருவானது. **விடை: ராணுவ தன்மை**
4. நகரமயமாதலின் போக்கு ________ காலத்தில் அதிகரித்தது. **விடை: விஜய நகர அரசர்கள்**
5. ________ காலம் தமிழக வரலாற்றின் உன்னத ஒளி பொருந்தியக் காலம். **விடை: சோழர்கள்**

### III. சரியான கூற்றினை தேர்வு செய்க :

1. அ) விஜய நகர அரசு நிறுவப்பட்டது, தென்னிந்திய வரலாற்றில் மிக முக்கிய நிகழ்வாகும்.

ஆ) சாளுவ அரச வம்சம் நீண்ட காலம் ஆட்சி செய்தது.

இ) விஜய நகர அரசர்கள் பாமினி சுல்தானியத்துடன் சுமுகமான உறவுகளைக் கொண்டிருந்தனர்.

ஈ) ரஜபுத்திர அரசுகள் பாரசீகத்திலிருந்தும் அராபியாவிலிருந்தும் குடிபெயர்பவர்களை ஈர்த்தனர். **[விடை: அ]**

2. அ) செஞ்சியில் நாயக்க அரசு உருவானது.

ஆ) தெலுங்கு நாயக்கர்கள் பணியமர்த்தப்பட்டதன் விளைவாக தெலுங்கு பேசும் மக்கள் மதுரையிலிருந்து குடிபெயர்ந்தனர்.

இ) ஜஹாங்கீரின் காலத்திலிருந்தே மொகலாயப் பேரரசு சரியத் துவங்கியது.

ஈ) ஐரோப்பியர்கள் அடிமைகளைத் தேடி இந்தியாவிற்கு வந்தனர். **[விடை: அ]**

3. அ) புராணக்கதைகளைக் கொண்ட கற்பனையான வம்சாவளிகள் மெக்கன்சியால் சேகரிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டன.

ஆ) அவுரி என்பது இந்தியாவில் மிக முக்கியமான பானப்பயிராகும்

இ) மகமுத் கவான் அலாவுதின் கில்ஜியின் அமைச்சர் ஆவார்

ஈ) போர்ச்சுகீசியர்கள் தங்கள் முதல் கோட்டையை கோவாவில் கட்டினர் **[விடை: அ]**

4. **கூற்று** : கிழக்கே சீனா முதல் மேற்கே ஆப்பிரிக்கா வரை நீண்டிருந்த கடல் வணிகத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக இந்தியா இருந்தது.

**காரணம்** : இந்தியாவின் நிலவியல் அமைப்பு இந்தியப் பெருங்கடலின் மையத்தில் அமைந்துள்ளது.

அ) கூற்று சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.

ஆ) கூற்று தவறு, காரணம் சரி.

இ) கூற்றும் காரணமும் தவறானவை.

ஈ) கூற்று சரி, காரணம் கூற்றை விளக்கவில்லை. **[விடை: அ]**

5. i) பேரழகும் கலைத்திறனும் மிக்க தங்கச் சிலைகளைச் சோழர்கள் வடித்தனர்.

ii) சோழர்களின் கட்டடக்கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டு. சிவனின் மறுவடிவான நடராஜரின் பிரபஞ்ச நடனம்.

அ) (i) சரி (ii) தவறு　　ஆ) (i), (ii) ஆகிய இரண்டும் சரி

இ) (i), (ii) ஆகிய இரண்டும் தவறு　　ஈ) (i) தவறு (ii) சரி **[விடை: ஈ]**

## IV. பொருத்துக :

| | | |
|---|---|---|
| 1. போர்ச்சுகீசியர்கள் | - | கோவா |
| 2. தான் சேன் | - | அக்பரின் அரச சபை |
| 3. பட்டு வளர்ப்பு | - | வங்காளம் |
| 4. அங்கோர் வாட் | - | கம்போடியா |
| 5. மாவட்டம் | - | கோட்டம் |

www.nammakalvi.in





## V. கீழ்காண்பனவற்றிற்கு சுருக்கமான விடையளி :

**1. மாலிக்காபூரின் இராணுவ படையெடுப்புகளை பற்றி எழுதுக.**

- மாலிக்காபூர் அலாவுதீன் கில்ஜியின் அடிமையும் படைத் தளபதியும் ஆவார். இவர் தலைமையில் தென்னிந்திய படையெடுப்புயொன்று மேற்கொள்ளப்பட்டது.
- மேலும் இந்தியாமீது படை யெடுத்து வந்த இலட்சக் கணக்கான மங்கோலியர்களை டெல்லியில் வைத்து தாக்கி சிதறி ஓடச் செய்தார்.

**2. விஜய நகர அரசை உருவாக்கியது யார்? அவ்வரசை ஆண்ட வம்சாவளிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.**

- விஜய நகர பேரரசை உருவாக்கியவர். ஹரிஹரர் மற்றும் புக்கர் ஆகிய இரு சகோதரர்கள்.
- அவ்வரசை ஆண்ட வம்சாவளிகள் சங்கம வம்ச அரசர்கள், சாளுவ வம்ச அரசர்கள், துளுவ வம்ச அரசர்கள்.

**3. பருத்தி நெசவில் இந்தியர் பெற்றிருந்த இயற்கையான சாதகங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.**

- பெரும்பாலும் இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலும் பருத்தி பயிரிடப்பட்டதால் அடிப்படையான மூலப் பொருள்கள் எளிதாகக் கிடைத்தது.
- தாவரச் சாயங்களைப் பயன்படுத்தி பருத்தி இழைகளின் மேல் நிரந்தரமாக வர்ணம் ஏற்றும் தொழில் நுட்பம் இந்தியர்களுக்கு ஆரம்பகாலங்களிலே தெரிந்திருந்தது.

**4. நகரமயமாதலுக்கு உதவிய காரணிகள் யாவை?**

- பெரிய நகரங்கள், பொருள் உற்பத்தி, சந்தை, நிதி மற்றும் வங்கிச் சேவைகள் ஆகியவற்றின் மையங்களாகத் திகழ்ந்தன.
- அவைகள் விரிவான அளவில் வலைப்பின்னலை போல் அமைக்கப் பட்டிருந்த போக்குவரத்துச் சாலைகள் சந்திக்கின்ற இடங்களில் அமைந்திருந்தன.
- சிறு நகரங்கள் உள்ளூர் சந்தை மையங்களாக செயல்பட்டு கிராமங்களை இணைத்தன மேலும் புனித தலங்களும் நகரமயமாதலுக்கு காரணிகளாயின.

**5. பட்டு வளர்ப்பு என்றால் என்ன?**

- 14, 15 ம் நூற்றாண்டில் பட்டு உற்பத்தி செய்யும் முறை அறிமுகமானது. மல்பெரி பட்டுப் பூச்சிகளைக் வளர்த்து பட்டு உற்பத்தி செய்யப்பட்டது.
- ஏழாம் நூற்றாண்டில் உலகிலேயே அதிக அளவிலான பட்டு உற்பத்தி செய்யும் பகுதியாக வங்காளம் திகழ்ந்தது. இவைகளுக்கு மேலாக ஏனைய வகை பட்டுகளும் (தாசர் வகை) உற்பத்தி செய்யப்பட்டன.

## VI. ஒவ்வொரு தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அனைத்துக் கேள்விகளுக்கும் விடையளிக்கவும்:

1. **ஐரோப்பியரின் வருகை :**

**அ) இந்தியாவிலிருந்து நடைபெற்ற நறுமணப் பொருட்கள் வணிகத்தை கட்டுப்படுத்தியது யார்?**

முஸ்லிம்கள்

**ஆ) அனைத்து பகுதியிலுமான கடல் வணிகத்தை போர்ச்சுக்கீசியர்களால் கட்டுப்படுத்த முடிந்தது எவ்வாறு?**

கடற்படையின் வலிமையால்.

**இ) இந்தியாவில் ஐரோப்பியரின் வணிக நடவடிக்கைகள் எவ்வாறு மேற்கொள்ளப்பட்டன?**

கிழக்கிந்திய கம்பெனிகள் மூலம்.

**ஈ) இந்தியாவில் டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர், பிரஞ்சுக்காரர், டேனியர் ஆகியோரின் இடங்கள் எவை?**

- ✦ டச்சுக்காரர்கள் - புலிகாட் (பழவேற்காடு) மற்றும் நாகப்பட்டிணம்
- ✦ ஆங்கிலேயர் - மெட்ராஸ் (சென்னை)
- ✦ பிரஞ்சுக்காரர் - பாண்டிச்சேரி
- ✦ டேனியர்கள் - தரங்கம்பாடி

## VII. கீழ்க்காண்பனவற்றிற்கு விரிவான விடையளி :

1. **கி.பி (பொ. ஆ) 1526 முதல் 1707 வரையிலான அரசியல் மாற்றங்களை விவாதி.**

- ✦ கி.பி. (பொ. ஆ) 1526 ஆம் ஆண்டு பானிபட் போர்க்களத்தில் இப்ராகிம் லோடியை வெற்றி கொண்ட பின்னர் பாபர் மொகலாயப் பேரரசை நிறுவினார்.
- ✦ கி.பி (பொ. ஆ) 1565 ல் தலைக் கோட்டைப் போரில் தக்காண சுல்தான்களின் கூட்டுப் படையினர் விஜய நகரப் பேரரசை தோற்கடித்தனர்.
- ✦ ராஜஸ்தானத்து சமயம் சார்ந்த அரசுகளோடு நல்லுறவை பேணியதின் மூலம் அக்பர் தனது பேரரசை வலிமைப்படுத்தினார்.
- ✦ விஜய நகரப் பேரரசுக்கு விசுவாசமான மூன்று முக்கிய நாயக்க அரசுகள் உருவாயின
- ✦ சோழர்கள் காலத்தில் நிர்வாக இயந்திரமானது மறுசீரமைக்கப்பட்டது. பல நிர்வாகப் பிரிவுகளை உருவாக்கியதன் மூலம் வருவாய்துறை நிர்வாகத்தில் புதுமைகளை புகுத்தியது. வேளாண்மை மற்றும் வணிகத்துறையில் பல புதிய வரிகள் அறிமுகம் செய்யப்பட்டன.
- ✦ கேரள கடற்கரையில் குடியேறிய அராபிய முஸ்லீம் வணிகர்கள் உள்ளூர் பெண்களை திருமணம் செய்தனர் இதனால் ஒரு கலப்பு பண்பாடு உருவானது. இந்த பண்பாடு வடக்கேயும் உருவானது.
- ✦ விஜய நகர பேரரசுக்கு "நாயக்" என்ற இராணுவ அதிகாரிகள் பணியமர்த்தப்பட்டனர். இவர்களுக்கு அடுத்த நிலையில் பாளையகாரர்கள் இருந்தனர்.

- டெல்லி மற்றும் தக்காணத்திலிருந்து முஸ்லீம் அரசுகள் அராபியாவிலிருந்தும், பாரசீகத்திலிருந்தும் குடிபெயர்பவர்களை இந்தியாவில் குடியேர கவர்ந்திருந்தன.
- போர்ச்சிகீசியரைத் தொடர்ந்து. இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகியவை இந்தியாவிற்குள் நுழைந்தன.
- வணிக நிறுவனங்கள் உருவாயின. இந்த நிறுவனங்கள் மொகலாய அரசுகளுடன் வர்த்தகம் செய்தன. இதன் விளைவாக பிற்காலத்தில் பல அரசியல் மாற்றங்கள் உருவாக வழி செய்தன.

**2. இடைக்கால இந்தியாவில் ஏற்பட்ட வணிக வளர்ச்சிகளை விளக்குக.**

- இடைக்கால இந்தியாவில் வணிகம் மூன்று வகையிலான சந்தைகள் மூலம் ஒரே நேரத்தில் ஏறுமுக வரிசையில் பரி மாற்றச் சுற்றில் செயல்பட்டன.
- பொருள்களை சந்தைப் படுத்துவதற்கு இந்தியா விரிவான சந்தையை பெற்றுருந்தது.
- கடைகளோடும் கடைவீதிகளோடும் நகரங்கள் எப்போதும் முக்கிய வணிக மையங்களாகச் செயல்பட்டன.
- நகரங்கள் நாட்டின் ஏனைய பகுதிகளோடு பல சாலைகளால் இணைக்கப்பட்டிருந்தன.
- நாட்டின் கிழக்கு மற்றும் மேற்கு கடற்கரைப்பகுதியில் வணிகத்திற்கு சிறு கப்பல்களும் படகுகளும் பயன்படுத்தப்பட்டன.
- பஞ்சாரா என்ற நடோடி சமுகத்தினர் பொருள்களை சுமந்துச் சென்று விற்றனர்.
- நாட்டின் முக்கிய துறைமுகங்களாக சூரத், மசூலிப்பட்டிணம், கோழிக்கோடு ஆகியவை கடல்சார் வணிக முனையங்களாகவும், பன்னாட்டு வணிக முனையங்களாகவும் செயல்பட்டன.
- மலாக்கா, கோழிக்கோடு துறைமுகங்கள் இடைநிலை முனையங்களாக செயல்பட்டன.
- குஜராத்தில் சூரத், கோல்கொண்டா, ஆந்திராவில் மசூலிபட்டிணம், வங்காளத்தில் சிட்டகாங், சோழமண்டல கடற்கரையில் புலிக்காட் (பழவேற்காடு) நாகப்பட்டிணம், முக்கிய துறைமுகங்களாக செயல்பட்டன.
- மஸ்லின், சின்ட் துணி, மிளகு, விலைமதிப்புமிக்க நவரத்தின கற்கள், சந்றே விலை குறைந்த நவரத்தின கற்கள் மற்றும் விலை உயர்ந்த வைரம், அதிலும் இந்தியாவில் மட்டும் கிடைக்கும் வைரம், இரும்பு எஃகு, பருத்தி துணிகள், ஏற்றுமதி செய்யப்பட்டன.
- சீனாவிலிருந்தும் ஏனய கீழ்திசை நாடுகளிலிருந்தும் பட்டு, சீன செராமிக் ஓடுகள், தங்கம், நறுமணப் பொருட்கள், நறுமண மரங்கள், கற்பூரம், மருந்துவகைகள், சர்க்கரை, தங்கம், தந்தம் அரக்கு, பிசின் ஆகியவை இறக்குமதி செய்யப்பட்டன.
- அடிமைகளும் இறக்குமதி செய்யபட்டனர், இந்தியா முழுவதும் நடைபெற்ற வணிகத்தை மேலாண்மை செய்யவும், முறைப்படுத்தவும், ஏராளமான வணிகர்களும், வியாபாரிகளும் இருந்தனர். வங்கியாளர்களும் பணம் மாற்றுவோரும் கூட இருந்தனர்.


**3. ''தமிழக வரலாற்றில் சோழர்களின் காலம் ஒரு உன்னதக் காலம்'' விளக்கவும்.**

- சோழர்கள் காலம் தமிழ்நாட்டு வரலாற்றில் செழிப்பு மிக்க காலமாகும். இக்காலத்தில் வணிகமும், பொருளாதாரமும் விரிவடைந்தன.
- நகரமயமாதலும் இவற்றுடன் இணைந்து கொண்டது. சோழர்கள் காலத்தில் நிர்வாகம் மறுசீரமைக்கப்பட்டது.
- உள்ளாட்சி நிர்வாகத்தின் அடிப்படை கிராமம் ஆகும். அதற்கு அடுத்தவை ஊர் (கிராமங்கள்) களின் தொகுப்பான நாடு மற்றும் கோட்டம் (மாவட்டம்) என்பதாகும்.
- பிராமணர் களுக்கு மானியமாகக் வழங்கப்பட்ட வரிவிலக்கு, அளிக்கப்பட்ட கிராமங்கள் பிரம்மதேயம் என்றுழைக்கப்பட்டன. சந்தை கூடுமிடம், சிறு நகரங்களும், நகரம் என்றழைக்கப்பட்டன.
- ஊர், நாடு, பிரம்மதேயம், நகரம் ஆகியவை நிலங்களையும், நீர்நிலைகளையும் கோயில்களையும் பராமரித்து மேலாண்மை செய்வது இவர்களின் வேலையாகும்.
- உள்ளூர் பிரச்சனைகளை தீர்த்து வைப்பது அரசுக்கு செலுத்தபட வேண்டிய வரிகளை வசூல் செய்வது ஆகியவை இம்மன்றங்களின் பொறுப்புகளாகும்.
- வருவாய் துறை நிர்வாகத்தில் பல புதுமைகள் புகுத்தப்பட்டன.
- வணிகத்துறையிலும் வேளாண்மை துறையிலும் புதிய வரிகள் அறிமுகம் செய்யப்பட்டன.
- புதிய கோயில்கள் கட்டப்பட்டன. பழைய கோயில்கள் வழிப்பாட்டிற்கான இடங்களாக மட்டுமல்லாமல் பொருளாதார பண்புகளைக் கொண்ட நிறுவனங்களாக மாறின.
- மேலும் அவை பொருட்களைக் கொள்முதல் செய்பனவாகவும், மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் நிறுவனங்களாகவும் மாறின.
- சோழர்காலத்தில் பொருளாதாரம் செழிப்பாய் இருந்தது. இதனாலே தமிழக வரலாற்றில் சோழர்காலம் ஒரு உன்னதகாலம் என்று கூறப்படுகிறது.

**மாணவர் செயல்பாடு**

**VIII. கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் இடைக்கால இந்தியாவின் முக்கிய இடங்களைக் குறிக்கவும்.**

14, 15 ஆம் நூற்றாண்டுகளின் இந்தியாவின் முக்கிய இடங்கள்



2. **சோழர்கால முக்கிய கட்டடங்கள் பற்றிய படங்கள் சேகரித்து எழுதுக.**


பிரகதீஸ்வரர் ஆலயம், தஞ்சாவூர்.


ஐராவதேஸ்வரர் ஆலயம், தாராசுரம்.


சோழிசுவரர் ஆலயம், அரியலூர்.


கம்பகரேஸ்வராா் ஆலயம், திருபுவனம்.


விஜயாலய சோழிஸ்வரர் ஆலயம், புதுக்கோட்டை.


திருபூலா மங்கை ஆலயம், தஞ்சாவூர்.

## IX. ஒப்படைப்பு :

1. **கம்போடியாவிலுள்ள அங்கோர் வாட் கோவில் படங்களைச் சேகரிக்கவும்.**






2. **நகரமயமாதலின் சாதகங்களையும் பாதகங்களையும் குறித்து வகுப்பில் விவாதத்திற்கு ஏற்பாடு செய்யவும்.**

மாணவர்கள் சுய செயல்பாடு.

# கூடுதல் வினாக்கள்

## I. சரியான விடையை தேர்வு செய்க :

1. **முஸ்லிம்கள் ஆட்சி 12ம் நூற்றாண்டில் டெல்லியில் யாரால் நிறுவப்பட்டது?**

அ) அலாவுதீன் கில்ஜி　　ஆ) முகமது கோரி
இ) சுல்தானியர்கள்　　ஈ) ஔரங்கசீப்　　[விடை: ஆ]

**2. வெற்றியின் நகரம் எந்த நதிக்கரையில் உருவாக்கப்பட்டது?**

அ) கங்கை ஆ) யமுனை இ) துங்கபத்ரா ஈ) நர்மதை **[விடை: இ]**

**3. பானிபட் போர் யார் யாருக்கு நடைபெற்றது?**

அ) ஜடாவர்ம சுந்தரபாண்டியனுக்கும் பாபர்க்கும்

ஆ) அலாவுதீன் கில்ஜிக்கும் பாபர்க்கும்

இ) இப்ராகிம் லோடிக்கும் பாபர்க்கும்

ஈ) பாமினி அரசுக்கும் விஜய நகர பேரரசுக்கும் **[விடை: இ]**

**4. டேனியர்கள் நிலை கொண்ட இடம் எது?**

அ) புலிகாட் ஆ) பாண்டிச்சேரி

இ) கோழிகோடு ஈ) தரங்கம்பாடி **[விடை: ஈ]**

**5. விஜய நகரப்பேரரசு தமிழ்நாட்டில் உள்ள மையங்களில் பணியமர்த்திய இராணுவ அதிகாரிகளின் பெயர் என்ன?**

அ) இபின் ஆ) நாயக்

இ) அல்பரூனி ஈ) பாளையகாரர் **[விடை: ஆ]**

## II. கோடிட்ட இடத்தை நிரப்புக :

1. சமய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு சமூகப்பிரிவுகள் ________ என குறிப்பிடப் படுகிறது. **விடை: வர்ணம்**
2. தொழில் நுட்பமும் உற்பத்தி முறை குறித்த அறிவும் ________ மரபாக ஒரு சந்ததியிடமிருந்து அடுத்த சந்ததியினருக்கு கற்பிக்கப்பட்டது. **விடை: வாய்மொழி**
3. தமிழகப் பகுதியைச் சார்ந்த ________ மற்றும் ________ சாதிகள் குறித்து நம்மிடம் விரிவான செய்திகள் உள்ளன. **விடை: வலங்கை, இடங்கை**
4. குஜராத் மற்றும் மார்வார் பகுதிகளில் உள்ள வணகச் சமூகங்களிடையே ________ மதம் செழித்தோங்கியது. **விடை: சமணம்**
5. சமய பரப்பு பணியில் தூத்துக்குடி பகுதியில் வாழ்ந்த பரதவ சமூக மக்களை கிறித்தவ சமூகத்திற்கு மாறுவதற்கு காரணமாக இருந்தவர் ________ மற்றும் ________ ஆவர்கள். **விடை: புனித பிரான்சிஸ் சேவியர் மற்றும் ராபட்டி நொபிலி**

## III. பொருத்துக (விடையுடன்) :

| | | | |
|---|---|---|---|
| 1. | இந்துஸ்தானி இசை | - | தான்சேன் |
| 2. | கர்நாடக இசை | - | வேங்கடமகி |
| 3. | சிவப்பு வர்ணம் | - | சாய் |
| 4. | அவுரி | - | சாய பயிர் |
| 5. | தாவரங்கள் | - | சாயங்கள் |

## IV. சரியான கூற்றைக் கண்டுபிடிக்கவும் :

1. அ) முதலாம் இராஜராஜன் காலத்தில் தொடங்கிய சோழப் பேரரசின் விரிவாக்கம் பாண்டிய பல்லவ அரசுகளை மறையச் செய்தது.
   ஆ) மேற்காசியாவைச் சேர்ந்த முஸ்லீம் படையெடுப்பாளர்கள் பிஜப்பூர் மற்றும் கோல் கொண்டாவிலும் சுல்தானியங்களை நிறுவி ஆட்சி புரிந்தனர்.
   இ) முகமது பின் துக்ளக்யின் படைத் தளபதி மாலிக்கபூர் தென்னிந்திய படையெடுப்பை மேற்கொண்டார்.
   ஈ) முகமது கோரியால் டெல்லியில் நிறுவப்பட்ட முஸ்லீம்கள் ஆட்சி நூறு ஆண்டுகளில் தென்னிந்தியாவின் சில பகுதி வரை பரவியது. **[விடை: அ]**

2. அ) முதலாம் ராஜராஜன் தனது கப்பற்படையை ஸ்ரீலங்காவிற்கு எதிராக அனுப்பினார்.
   ஆ) வடக்கே பேலூரையும். பின்னர் ஹளபேடுவையும் தலைநகராகக் கொண்டு ஹொய்சால அரசு அமைந்திருந்தது.
   இ) தேவகிரியில் காகத்தியர்கள் ஆட்சி செய்தனர்.
   ஈ) வாராங்கல்லிருந்து யாதவர்கள் ஆட்சி செய்தனர். **[விடை: ஆ]**

3. அ) வட இந்தியாவில் குளங்கள், ஆறுகளிலிருந்து நீர் இறைக்க பாரசீகச் சக்கரம் பயன் படுத்தப்பட்டது.
   ஆ) இடைக்காலத்தில் இந்திய விவசாயிகள் குறைந்த எண்ணிக்கையிலான பயிர் வகைகளைப் பற்றிய அறிவைப் பெற்றிருந்தனர்.
   இ) பப்பாளி, அன்னாசி, கொய்யா, முந்திரிப் பருப்பு போன்ற பழவகைகளும், தோட்டப் பயிர்களும் மேலை நாடுகளிலிருந்து குறிப்பாக அமெரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு வந்தவையாகும்.
   ஈ) வணிகப்பயிர்களாக, அவரை, எண்ணெய், வித்துக்கள், அரிசி பயிரிடப்பட்டன. **[விடை : இ]**

## V. சிறுவினாக்களுக்கு விடையளிக்கவும் :

**1. தமிழ்நாட்டில் சோழ அரசர்கள் நீராதாரத்தை எவ்வாறு மேம்படுத்தினர்?**
சோழ அரசர்கள் காவேரி நதியின் கிளை ஆறுகளை இணைத்து வலைப்பின்னலைப் போன்ற கால்வாய்களை அமைத்து குளம், ஏரிகளை வெட்டி நீராதாரத்தை மேம்படுத்தினர்.

**2. பாரசீகச் சக்கரத்தின் பயன்பாட்டைக் கூறுக.**
வட இந்தியாவில் கிணறுகளிலிருந்து நீர் இறைக்க பாரசீகச் சக்கரம் பயன்படுத்தப்பட்டது.

**3. விஜயநகர பேரரசு காலத்தில் உருவான புதிய வகை தமிழ் இலக்கியம் எது?**
பிரபந்தம்.

## VI. ஒவ்வொரு தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளி :

### 1. துணி உற்பத்தி :

**அ) இந்தியர்கள் துணிகளுக்கு சாயம் செய்யும் முறையை விவரி.**

பருத்தி துணிகளின் மேல் நிரந்தரமாக வர்ணம் ஏற்றும் தொழில் நுட்பம் இந்தியர்களுக்கு தெரிந்திருந்தது. துணிகளை பதனம் செய்யாவிடில் சாயங்கள் அவற்றின் மேல் ஒட்டாது. அதற்காக முதலில் துணிகளின் மேல் வேதிப் பொருள்களைப் பயன்படுத்தி மேற்பூச்சு பூசும் தொழில் நுட்பத்தை இந்தியர்கள் அறிந்திருந்தனர்.

**ஆ) பட்டு துணிகள் உற்பத்தி செய்யப்பட்ட இடங்களைக் கூறுக.**

வங்காளத்திலும் குஜராத்திலும் பட்டு துணிகள் உற்பத்தி செய்யப்பட்டன.

**இ) இடைக்கால இந்திய துணி உற்பத்தியின் நிபுணத்துவம் பற்றிக் கூறு.**

துணி உற்பத்தியில் நூல் நூற்றல், நெய்தல், சாயமேற்றுதல், அச்சிடுதல் என பல நிலைகளையும், ஒவ்வொரு நிலைக்கும் நிபுணத்துவம் கொண்ட கைவிஞனர்கள் கொண்டதாய் இருந்தது.

### 2. இடைக்காலத்தில் சோழர்காலப் பண்பாடு :

**அ) சோழர்கால இலக்கியம் பற்றியும், சமய தத்துவ ஆய்வு நூல்களைப் பற்றியும் கூறு.**

சோழர் காலம் இலக்கியத்திற்கு ஒரு சகாப்தமாகும். செவ்வியல் புலவரான கம்பர் தமிழில் இராமாயணத்தை எழுதி அதை முறைப்படி ஸ்ரீரங்கம் கோவிலில் அரங்கேற்றம் செய்தார். சேக்கிழாரின் பெரிய புராணம் சிதம்பரம் கோயிலில் அரங்கேற்றம் செய்யப்பட்டது. மேலும் கலிங்கத்துப்பரணியும், மூவருலாவும். சமய தத்துவ நூலான சங்கர - பாஷ்யம் - ஸ்ரீபாஷ்யம் ஆகியவை எழுதப்பட்ட சிறந்த படைப்புகளாகும்.

**ஆ) சோழர்கால கட்டடக்கலை, சிற்பக்கலை பற்றி கூறு.**

- ✦ தஞ்சாவூர் பெரிய கோவிலிலும் கங்கை கொண்ட சோழபுரத்திலும், தாராசுரத்திலும், கட்டடக்கலை பற்றி நாம் அறியலாம்.
- ✦ கோவில் சுவர்களிலும், தூண்களிலும் கல் சிற்பங்கள் செதுக்கப்பட்டன. பேரழகும் கலை நுட்பமும் பொருந்திய செப்புச் சிலைகள் மெழுகு அச்சு முறையில் வார்க்கப்பட்டன. பிரபஞ்ச நடனமாடும் நடராஜர் (சிவன்) சிலை மிகவும் புகழ் பெற்றதாகும்.

**இ) மொகலாயர்களின் கலை வளர்ச்சி பற்றி கூறுக.**

மொகலாய மன்னர்கள் கலை வளர்ச்சிக்கு பெரிதும் ஆதரவளிக்கும் புரவலர்களாய் திகழ்ந்தனர். ஷாஜகானாபாத், பதேபூர்சிக்ரி ஆகிய முழுமையான நகரங்களையும். தோட்டங்களையும் மசூதி களையும், கோட்டைகளையும் கட்டி எழுப்பி அவற்றுடன் எண்ணற்ற நினைவுச் சின்னங்களையும் விட்டுச் சென்றனர்.

## VII. விரிவான விடையளி :

**1. சீக்கிய மதம் பற்றியும் 18ம் நூற்றாண்டில் பிற மதங்கள் இருந்ததையும் விவரி.**

- சீக்கிய மதம் பதினைந்து மற்றும் பதினாறாம் நூற்றாண்டுகளில் வட இந்தியாவில் வாழ்ந்த குருநானக் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது.
- பேரரசர் ஔரங்கசீப் மேற்கொண்ட கடுமையான அடக்குமுறையையும் மீறி சீக்கிய மதம் வலுவாக வளர்ச்சியடைந்தது.
- ஆகவே பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியா முழுவதும் பல மதங்கள் ஒரே நேரத்தில் இருந்துள்ளன.
- யூதர்களும், ஜொராஸ்டியர்களும் (பார்சிகள்) குடிபெயர்ந்தபோது அந்நிய மதங்களும் இந்தியாவிற்குள் வந்தன.
- பார்சிகள் குஜராத்திலும், யூதர்கள் கேரளத்திலும் குடியேறினர். போர்ச்சுகீசியர்கள் கேரளாவிற்கு வந்த பின்னர் கிறித்துவ மதம் வேர்விட்டது. இந்த மதம் பதினெட்டாம் நூற்றாண்டு கால தொடக்கத்தில் பல பகுதிகளில் பரவியிருந்தது.
- மேலும் சமய நீதிமன்றங்களின் அடக்குமுறையின் கீழ் வற்புறுத்தப்பட்டதாலும், ஏசுசபையைச் சார்ந்த சமய பரப்பாளர்களாலும் பாண்டிய நாட்டின் கடற்கரைப் பகுதிகளிலும் பரவியது.

**2. வேளாண் சாராத பொருள், வேளாண் பண்டங்கள், கைவினைப் பொருள்கள் பற்றி கூறு.**

- இந்தியப் பொருளாதாரம் பிரதான வேளாண்மையைச் சார்ந்ததாக இருந்தது.
- வேளாண் சாராத பொருள் உற்பத்தி என்பது, பக்குவப்படுத்தப்பட்ட வேளாண் பண்டங்களையும், கைவினைப் பொருள் உற்பத்தியையும் குறிப்பதாகும்.
- சர்க்கரை, எண்ணெய், துணிகள் ஆகியன பதப்படுத்தப்பட்ட வேளாண் பண்டங்கள் என்ற வகையின் கீழ் வருபவையாகும்.
- உலோகப் பொருட்கள், நவரத்தின கற்கள், பொன் ஆபரணங்கள், கப்பல் கட்டுமானம், அலங்கார மரப்பொருட்கள், தோல்பொருட்கள் ஆகியன கைவினை உற்பத்தி பொருள்கள் ஆகும்.

வரலாறு

# பாடம் 8 நவீன யுகத்தின் தொடக்கம்

## பயிற்சிகள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு :

1. **கீழ்க்கண்டவர்களில் யார் மனித நேயத்தின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்?**
   அ) லியானார்டோ டாவின்சி ஆ) ப்ரான்சிஸ்கோ பெட்ராா்க்
   இ) ஏராஸ்மஸ் ஈ) தாமஸ் மூர் [விடை: ஆ]

2. **'ஸ்கூல் ஆஃப் ஏதென்ஸ்' என்ற ஓவியத்தை வரைந்தவர் ________.**
   அ) ரஃபேல் சான்சியோ ஆ) மைக்கேல் ஆஞ்சலோ
   இ) அல்புருட் டியுரர் ஈ) லியானார்டோ டாவின்சி [விடை: அ]

3. **வில்லியம் ஹார்வி ________ கண்டுபிடித்தார்.**
   அ) சூரியனே பிரபஞ்சத்தின் மையம் ஆ) பூமியே பிரபஞ்சத்தின் மையம்
   இ) புவியீர்ப்பு விசை ஈ) இரத்தத்தின் சுழற்சி [விடை: ஈ]

4. **"தொண்ணூற்றைந்து கொள்கைகள்"களை எழுதியவர் யார்?**
   அ) மார்ட்டின் லூதர் ஆ) ஸ்விங்லி
   இ) ஜான் கால்வின் ஈ) தாமஸ்மூர் [விடை: அ]

5. **'கிறிஸ்தவ மதத்தின் நிறுவனங்கள்' என்ற நூலை எழுதியவர் ________.**
   அ) மார்ட்டின் லூதர் ஆ) ஸ்விங்லி
   இ) ஜான் கால்வின் ஈ) செர்வாண்டிஸ் [விடை: இ]

6. **பூமத்திய ரேகையை கடந்த முதல் மாலுமி யார்?**
   அ) மாலுமி ஹென்றி ஆ) லோபோ கோன்சால்வ்ஸ்
   இ) பார்த்தலோமியோ டயஸ் ஈ) கொலம்பஸ் [விடை: அ]

7. **பசிபிக் பெருங்கடல் எனப் பெயரிட்டவர் ________.**
   அ) கொலம்பஸ் ஆ) அமெரிகோ வெஸ்புகி
   இ) ஃபெர்டினான்ட் மெகெல்லன் ஈ) வாஸ்கோடகாமா [விடை: இ]

8. **அமெரிக்க கண்டம் ________ என்பவரின் பெயரால் பெயரிடப்பட்டுள்ளது.**
அ) அமெரிகோ வெஸ்புகி ஆ) கொலம்பஸ்
இ) வாஸ்கோடகாமா ஈ) ஹெர்நாண்டோ கார்டஸ் **[விடை: அ ]**

9. **கிழக்கு இந்தியாவில் போர்ச்சுகீசியர்களின் வசமிருந்த பகுதிகளுக்குத் தலைமையகமாக ________ இருந்தது.**
அ) மணிலா ஆ) பம்பாய் இ) பாண்டிச்சேரி ஈ) கோவா **[விடை: ஈ]**

10. **கீழ்க்கண்ட தாவரங்களுள் எது அமெரிக்காவிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது?**
அ) கரும்பு ஆ) சர்க்கரை வள்ளிக்கிழங்கு
இ) அரிசி ஈ) கோதுமை **[விடை: ஆ]**

## II. கோடிட்ட இடத்தை நிரப்புக :

1. கி.பி. 1453ல் கான்ஸ்டாண்டிநோபிளை ________ கைப்பற்றினர்.
**விடை: உதுமானிய துருக்கியர்**
2. ________ என்பவர் மனிதநேயவாதிகளிடையே ஒரு இளவரசர் என்று அறியப்படுகிறார்.
**விடை : ஏராஸ்மஸ்**
3. ________சிஸ்டைன்திருச்சபைமேற்கூரைகளில்வரையப்பட்டதன்னுடையஓவியங்களுக்காக புகழ்பெற்றவராவார். **விடை: மைக்கேல் ஆஞ்சலோ**
4. கத்தோலிக்க திருச்சபை நிறுவனத்துக்கு உள்ளேயே மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தம் ________ ஆகும். **விடை : எதிர்மத சீர்திருத்தம்**
5. வணிகப்புரட்சியின் தலையாய அம்சங்கள் ________, ________ மற்றும் ________ ஆகும்.
**விடை : மறுமலர்ச்சி, மதச்சீர்திருத்தம், கடல் ஆய்வுப் பயணங்கள்**

## III.. சரியான கூற்றினைக் கண்டுபிடி :

1. அ) மார்ட்டின் லூதர் கத்தோலிக்க திருச்சபையால் பாகுபாட்டுடன் நடத்தப்பட்டதால் அவர் அதனுடனான உறவைத் துண்டித்துக் கொண்டார்.
ஆ) ஜெனிவாவில் இருந்து ஜான் கால்வினின் அரசாங்கம் தாராளமயமானதாகவும், வேடிக்கை நிரம்பியதாகவும் இருந்தது.
இ) எட்டாம் ஹென்றி கத்தோலிக்க திருச்சபையுடன் ஆழமான இறையியல் வேறுபாடுகளைக் கொண்டிருந்தார்.
ஈ) தேவாலயத்துக் கூட்டு வழிபாட்டின் முக்கியத்துவத்தையும் விழாக்களின் முக்கியத்துவத்தை யும் ட்ரென்ட் கவுன்சில் மீண்டும் வலியுறுத்தி அழுத்தம் தந்தது.
**[விடை: ஈ]**

2. அ) புதிய தரை மற்றும் கடல் வழி கண்டுபிடிப்புகளால் பொருளாதார மையங்கள் இத்தாலிய நகர அரசுகளிலிருந்து ஸ்பெயின் மற்றும் போர்ச்சுகலுக்கு மாற்றப்பட்டன.

ஆ) குதிரைகள் அமெரிக்காவை பிறப்பிடமாகக் கொண்டவை.

இ) நவீன யுகத்தின் தொடக்க காலத்தில், பொருளாதார நடவடிக்கைகளில் அரசு தலையிட வில்லை.

ஈ) போர்ச்சுகீசியர்கள் அரேபியர்களுடன் இணைந்து இந்தியாவில் வாணிக நடவடிக்கைளை மேற்கொண்டனர். **[விடை: அ]**

## IV. பொருத்துக (விடையுடன்) :

| | | |
|---|---|---|
| 1. நிலபிரபுத்துவம் | - | சமூக பொருளாதார அமைப்பின் படிநிலை |
| 2. மனிதாபிமானம் | - | மனித கௌரவம் |
| 3. நீதி விசாரணை | - | மதத்திற்குப் புறம்பானவர் மீது விசாரணை |
| 4. மொர்க்கண்டலிசம் | - | ஏகபோக வர்த்தகம் |
| 5. கொலம்பிய பரிமாற்றம் | - | ஐரோப்பாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையேயான வர்த்தகப் பரிமாற்றம் |

## V. கீழ்க்கண்ட வினாக்களுக்கு சுருக்கமான விடையளி :

**1. அச்சு இயந்திரத்தின் கண்டுபிடிப்பு எவ்வாறு மறுமலர்ச்சி, மத சீர்திருத்தம் மற்றும் புவியியல் சார்ந்த கண்டுபிடிப்புகளின் மீது தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதை விவரி.**

- ✦ நவீனமயமாதலை வேகப்படுத்தியது. ஒரு கையெழுத்துப் பிரதியின் பல மறு பிரதிகள் உற்பத்தியை அச்சு இயந்திரம் சாத்தியமாக்கியது.
- ✦ மேலும் அறிவைப் பரந்து விரிந்ததாக ஆக்கியதோடு விமர்சன ரீதியான சிந்தனைகளை முன்னெடுத்துச் சென்றது.
- ✦ மனிதநேயவாதிகள் இடைக்கால சிந்தனைகளை விமர்சன கண்ணோட்டத்துடன் பார்த்து அவற்றை தங்கள் எழுத்துகளில் நையாண்டி செய்தனர்.
- ✦ இவைகள் அச்சடிக்கப்பட்டு புத்தகங்களாக வெளியாயின. இதனால் மறுமலர்ச்சியிலும் மார்டின் லூதர் எழுதிய தொண்ணூற்றைந்து கொள்கைகள் அச்சிடப்பட்டு பரவலாக வெளியிடப்பட்டது.
- ✦ இது மதசீர்திருத்தத்திலும் கடற்பயண பள்ளியில் கடற்பயண போக்குவரத்திற்கான அச்சிடப்பட்ட பிரதிகள் கடற்பயணம் செய்ய பலரை பெரும் ஆர்வத்திற்குள்ளாக்கின.

**2. மறுமலச்சியின் விளைவுகள் பற்றி ஒரு சிறு குறிப்பு வரைக.**

- ✦ வட்டார மொழியில் எழுதுவது அறிமுகமானதால் அறிவார்ந்த அடித்தளத்தை வழங்கியது.
- ✦ திருச்சபை ஊழல் விமர்சிக்கப்பட்டது.
- ✦ மறுமலர்ச்சியினால் தூண்டிவிடப்பட்ட புத்தார்வம், புதிய நிலவழி மற்றும் கடல்வழி பாதைகளை கண்டுபிடிப்பதிலும், உலக வரைபடத்தை மாற்றியமைப்பதிலும் முக்கிய பங்கு வகித்தது.
- ✦ அறிவியலில் புதிய கண்டுபிடிப்புகளுக்கு இட்டுச் சென்றதுடன் உடற்கூறியலுக்கும், வானவியல் ஆராய்ச்சிக்கும் அழைத்துச் சென்றது.

**3. கத்தோலிக்க திருச்சபை மீது மார்ட்டின் லூதர் கொண்டிருந்த மாற்றுக் கருத்துகளை விவரி.**

- சடங்குகளும், பாவமன்னிப்பு நடைமுறைகளும் ஆன்ம விடுதலைக்கு இட்டுச் செல்லும் என்ற நம்பிக்கையை அவர் நிராகரித்தார். முழுமையான நம்பிக்கையினால் மட்டுமே ஒருவர் ஆன்ம விடுதலையை அடைமுடியுமென அவர் வாதிட்டார்.
- மக்களுடைய தெய்வீகமான பற்றுதியினால் மட்டுமே கடவுளின் கருணை மனிதர்களுக்கு அருளப்படும் அல்லாமல் அவர்களுடைய செயல்களினால் அல்ல. மேலும் பைபிள் அனைத்து மக்களாலும் படிக்கப்பட்டு விவாதிக்கப்படக் கூடியதே அல்லாமல் திருசபையினால் மட்டுமே வாசித்து விளக்கமளிக்கக் கூடிய ஒன்றல்ல.
- கடவுளுக்கும், ஒரு தனிநபருக்குமிடையே திருச்சிபை ஒரு இணைப்பு பாலம் என்பதையும் அவர் நிராகரித்தார்.

**4. மத எதிர் சீர்திருத்தம் பற்றி ஒரு குறிப்பு வரைக.**

- பிராட்டஸ்டன்ட் சீர்திருத்த இயக்கம் கத்தோலிக்க திருச்சபைக்கு ஓர் அச்சுறுத்தலாக விளங்கியது. அந்த சவாலை எதிர்கொண்டு சந்திப்பதற்காக போப் மூன்றாம் பால் மற்றும் அவரையடுத்துப் பொறுப்புக்கு வந்தவர்கள் திருச்சபையின் எண்ணற்ற பல தீவிரமான சீர்திருத்தங்களை அறிவித்தார்கள்.
- ஊழல்களைக் கடுமையான முறையில் கையாண்டதுடன் பதவிகளின் விற்பனையையும் தடை செய்தனர்.
- கூட்டு வழிபாட்டின் முக்கியத்துவத்தையும் விழாக்களின் முக்கியத்துவத்தையும் ட்ரென்ட் கவுன்சில் மீண்டும் வலியுறுத்தியது.
- புனித மறை நூல்களை திருச்சபை மட்டுமே படித்து விளக்கமளிக்க முடியுமென்றும் அது அறிவித்தது.
- திருச்சபைக்கு எதிரான முயற்சிகளை கையாளுவதற்கு மத நீதிமன்றம் புத்துயிர் அளித்தது.
- இயேசு சபைக்கு அதிகாரப் பூர்வமான அனுமதியையும் அது வழங்கியது.
- கத்தோலிக்க திருச்சபைக்குள்ளேயே மேற்கொள்ளப்பட்ட இந்த சீர்திருத்தம் மத எதிர் சீர்திருத்தமாகும்.

**5. 'கொலம்பியப் பரிமாற்றம்' என்றால் என்ன?**

அமெரிக்க நாடுகளுக்கும் ஐரோப்பாவுக்குமிடையே அல்லது புதிய உலகத்திற்கும் பழைய உலகத்திற்குமிடையே தாவரங்கள், விலங்குகள், தொழில் நுட்பம், பண்பாடு மற்றும் விநோதமான நோய்கள் ஆகியவற்றின் இடபெயர்வுக்கு ஐரோப்பிய காலனியாதிக்க சக்திகள் அமெரிக்காவை வெற்றி கொண்டதே காரணமாகும். இது கொலம்பியப் பரிமாற்றம் என்று அறியப்படுகிறது.

www.nammakalvi.in





## VI. கீழ்க்கண்ட தலைப்பில் உள்ள அனைத்து கேள்விகளுக்கும் விடையளிக்கவும் :

### 1. மறுமலர்ச்சி :

**அ) இத்தாலிய நகர அரசுகளில் முதன்முதலில் மறுமலர்ச்சி தோன்றுவதற்கான காரணங்களைக் கூறுக.**

இத்தாலிய நகர அரசுகள் பதினான்காம் நூற்றாண்டிலிருந்து பண்பாட்டு நடவடிக்கைகளின் மையங்களாக விளங்கின.

**ஆ) மனித நேயர்கள் சிலரையும், அவர்களது படைப்புகளையும் குறிப்பிடுக.**

| மனித நேயர்கள் | (நூல்) படைப்புகள் |
|---|---|
| தாத்தே | டிவைன் காமெடி |
| மாக்கியவெல்லி | இளவரசன் |
| எராஸ்மஸ் | மடமையின் புகழ்ச்சி |
| சர்தாமஸ் மூர் | உட்டோப்பியா |
| செர்வான்டிஸ் | டான் க்விக் ஸோட் |
| மார்ட்டின் லூதர் | தொண்ணூற்றைந்து கொள்கைகள் |

மனிதநேயத்தின் தந்தை பெட்ரார்க் ஆவார்.

**இ) மறுமலர்ச்சி காலக் கலைக்கும் இடைக்காலக் கலைக்கும் உள்ள வேறுபாடுகளை வரிசைப்படுத்துக.**

| மறுமலர்ச்சி கால கலை | இடைக்கால கலை |
|---|---|
| ஓவியங்களும், சிற்பங்களும் எதார்த்த பண்புடனும், இயல்பு சார்ந்த இயற்கையான தன்மையுடனும் அமைந்தவை. | ஓவியங்களும், சிற்பங்களும் அமைப்பிலிருந்து மேம்படுத்தப்பட்டவை. |

**ஈ) மனிதநேயம் பற்றி விளக்குக.**

மனிதநேயத்தைத் தன்னுடைய படைப்புகளில் முதலில் ஏற்று உள்வாங்கிக் கொண்டு அது தொடர்பான சிந்தனைகளை வெளிப்படுத்தியவர் "பெட்ரார்க்" இவர் மனித நேயத்தின் தந்தை என அழைக்கப்படுகிறார்.

### 2. மத சீர்திருத்தம் :

**அ) மார்ட்டின் லூதர் தேவாலயத்தை ஏன் எதிர்த்தார்?**

- திருச்சபையினரின் ஆடம்பர வாழ்க்கை.
- திருச்சபைப் பதவிகளை ஏலத்திற்கு விடுதல்.
- பாவமன்னிப்புச் சீட்டு விற்பனை ஆகியவற்றை எதிர்த்தார்.

**ஆ) 'நம்பிக்கையினால் நியாயப்படுத்துதல்' என்ற கொள்கை குறித்து எழுதுக.**

நம்பிக்கையினால் மட்டுமே ஒருவர் ஆன்ம விடுதலையை அடைய முடியுமென மார்ட்டின் லூதர் வாதிட்டார். "நம்பிக்கையினால் நியாயப்படுத்துதல்" என்ற கொள்கை வடிவை அவர் முன்வைத்தார்.

**இ) எட்டாம் ஹென்றி ஆங்கிலிக்கன் திருச்சபையை ஏன் நிறுவினார்?**

இங்கிலாந்தின் அரசர் எட்டாம் ஹென்றி தன் தனிப்பட்ட சொந்தக் காரணங்களுக்காக மதச் சீர்திருத்தம் கொண்டுவந்து ஆங்கிலிக்கன் திருச்சபையை நிறுவினார்.

**ஈ) இக்னேஷியஸ் லயோலாவின் பங்களிப்பு குறித்து எழுதுக.**

புனித இக்னேஷியஸ் லயோலா, இவர் கிறித்தவ மதத்தை பரப்புவதற்காக இயேசு சபையை நிறுவினார்.

## 3. புவியியல் சார் கண்டுபிடிப்புகள்.

**அ) மாலுமி ஹென்றி என்பவர் யார்?**

மாலுமி ஹென்றி என்பவர் போர்ச்சுகலைச் சார்ந்த கடலோடி இளவரசர். நீண்ட நெடுந்தூர கடற்பயணங்களுக்கான அடித்தளத்தை இவர் உருவாக்கினார். மாலுமிகளுக்குப் பயிற்சியளிப்பதற்காக ஒரு கடற்பயணப் பள்ளியை நிறுவியிருந்தார்.

**ஆ) புவியியல் சார் கண்டுபிடிப்புகளுக்கான காரணங்களை வரிசைப்படுத்து.**

- ✦ நெடுந்தொலைவுக் கடற்பயணத்திற்கான ஆர்வத் துடிப்பு.
- ✦ இதுவரை பயணப்பட்டிராத கடல் பகுதிகளில் தேடுதல் நிகழ்த்தும் சாகச உத்வேகம்.
- ✦ மார்க்கோபோலோ, இபின்பதூதா ஆகியோரின் பயணக் குறிப்புகள்.
- ✦ இறைப்பணியாளர்களின் மதம் பரப்பும் எண்ணம்.

**இ) அமெரிக்காவில் உள்ளூர் மக்களின் அழித்தொழிப்புக்கு இட்டுச் சென்றது எது?**

ஆபத்து மிக்க நோய்களான சின்னம்மை, அம்மை, தட்டம்மை, மலேரியா, விஷக்காய்ச்சல் ஆகியவை.

**ஈ) முக்கோண வர்த்தகம் என்றால் என்ன?**

அட்லாண்டிக் நெடுகிலும் நடைபெற்ற வர்த்தகம் ஒரு முக்கோண வர்த்தகம் ஆகும்.

## VII. கீழ்க்கண்ட வினாக்களுக்கு விரிவாக விடையளி :

**1. மறுமலர்ச்சி, மதசீர்திருத்தம் மற்றும் புவியியல் சார் கண்டுபிடிப்புகள் எவ்வாறு நவீனயுகத்தின் வருகையைப் பறை சாற்றின - விவாதி.**

- ✦ மறுமலர்ச்சிக் காலத்தில் மனிதநேயம் தனி உரிமைக் கோட்பாடு, பகுத்தறிவு தேசியம் போன்ற புதிய சிந்தனைகள் உதயமாயிற்று.
- ✦ இந்த சிந்தனைகளின் விளைவாக புதிய இயந்திரங்கள் மற்றும் அறிவியல் சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

- இவைகளால் சிந்தனையாளர்கள் தங்கள் கருத்துக்களை தெளிவாக அச்சு பிரதியின் உதவியுடன் வெளியிட்டனர்.
- இது அரசியலிலும் திருச்சபையிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதுடன் கலையிலும், இலக்கியத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தியது.
- இந்த தாக்கம் விமர்சனத்தையும் நையாண்டியையும் முன்னெடுத்துச் சென்றது.
- இதனால் செவ்வியலாளர்கள் அறிவியலுக்கு அடித்தளம் அமைத்தனர்.
- ஊழல்கள் நிறைந்திருந்த திருச்சபைகள் இளவரசர்களை போல ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து வந்த திருச்சபை ஊழியர்கள் பற்றி கத்தோலிக்க நம்பிக்கையின் நெறிபிறழாத விசுவாசத்துடனும் ஆழ்ந்த அர்ப்பணிப்புடனும் வாழ்ந்த மார்ட்டின் லூதர் போன்ற பேராசிரியர்கள் புரட்சிகளை அடையாளப்படுத்தினர்.
- மேலும் கடவுளுக்கும் தனிமனிதருக்கும் இடையே திருச்சபை இணைப்பு பாலம் என்பதை நிராகரித்தார்.
- இதனால் திருச்சபையில் பல சீர்திருத்தங்கள் உதயமாயிற்று மேலும் பலர் திருச்சபை மற்றும் மதச் சீர்திருத்தங்கள் உருவாக வழிவகுத்தனர்.
- புவிசார் கண்டுபிடிப்புகள் காலனிய ஆதிக்கத்தை உருவாக்கியதுடன் வேளாண்மை, சுரங்கத் தொழில்களை உருவாக்கியது.
- புதிய கடல்வழித் தடங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. வணிகம் பொருளாதார செழுமைக்கு இட்டுச் சென்றது.
- இவ்வாறு நவீனயுகத்தின் வருகையை மறுமலர்ச்சி, மதசீர்திருத்தம், புவிசார் கண்டுபிடிப்புகள் நவீன யுகத்தின் வருகையை பறைச்சாற்றின
- கூடுதல் ஆய்வு தேடல் பயணங்கள் தொடரப்பட்டன.

**2. புவியியல்சார் கண்டுபிடிப்புகளின் விளைவுகள் குறித்து ஆராய்க.**


- உலகைப் பற்றிய ஐரோப்பிய புரிதலை புவியியல் சார்ந்த கண்டுபிடிப்புகள் மாற்றியமைத்தன.
- உலக வரைபடத்தின் மீள் வரைவுக்கு அது இட்டுச் சென்றது. புதிய நிலப்பரப்புகள், புதிய கடல்வழிப் பாதைகளின் கண்டுபிடிப்புகளின் விளைவாக ஐரோப்பாவின் பொருளாதார மையம் இத்தாலிய நகர அரசுகளிலிருந்து ஸ்பெயின் மற்றும் போர்ச்சுகல் ஆகிய இரு அரசுகளுக்கு இடம்பெயர்ந்தன.
- போர்ச்சுகல், ஸ்பெயின் ஆகிய இரு நாடுகளும் குடியேற்றங்களை நிறுவின. இது அவற்றை பொருளாதாரச் செழுமைக்கு இட்டுச் சென்றது.
- ஸ்பெனியர்களின் புதிய உலகக் கண்டுபிடிப்பு மெக்ஸிகோவையும் தென் அமெரிக்காவையும் பெற்றிக் கொள்வதற்கு இட்டுச் சென்றது.
- கொலம்பஸின் கடற்பயணம் ஸ்பானிய வெற்றியாளர்களையும் கூடுதலான ஆய்வுத் தேடலுக்கு கூட்டிச் சென்றது.

- புதிய இடங்களை கண்டு வெற்றிக் கொண்ட அவர்கள் மக்களை குரூரமான விதத்தில் கொன்றனர். எஞ்சியவர்களை அடிமைகளாக்கி அவர்களை பிற இடங்களில் விற்பனை செய்ததுடன், கடுமையான சூழ்நிலைகளில் சுரங்கங்களிலும் தோட்டங்களிலும் பணி செய்யுமாறு கட்டாயப் படுத்தினர்.
- காலனிமயமாக்குபவர்களால் ஏற்பட்ட மிக பயங்கர கொடுந் தொற்றுநோய்கள் பல உள்ளூர் மக்களை கொன்று குவித்தது.
- வேளாண்மை பொருள்களும், விலங்குகளும், பயிறு வகைகளும், குதிரை, ஆடுமாடுகள், செம்பறியாடுகள் மேலும் பல வன ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்பட்டன.
- கரும்புத் தோட்டங்கள் உருவாயின, அடிமை வர்த்தக மையங்கள் உருவாயின.
- நடைமுறை பொருளாதார அமைப்பு மெர்கண்டலிசம் உருவானது.
- கிழக்கிந்திய கம்பெனிகள் உருவாயின. வியாபார வர்த்தகத்தில் பல போட்டியாளர்களை வெற்றிக் கொண்டு ஏகபோகத்தை நடைமுறைப்படுத்தினர்.
- இவ்வாறாக புவியியல் சார் கண்டுபிடிப்புகள் உலகம் முழுவதும் விளைவுகளை ஏற்படுத்தின.

**மாணவர் செயல்பாடு**

**1. கொடுக்கப்பட்டுள்ள உலக வரைபடத்தில், கீழ்க்கண்டவர்களின் வழித்தடங்களைக் குறிப்பிடுக.**

பார்த்தலோமியோ டயஸ், வாஸ்கோடகாமா, கொலம்பஸ், மெகெல்லன்.



**2. ஐரோப்பிய மாலுமிகளின் படங்களை சேகரி.**



வாஸ்கோடகாமா


கிறிஸ்டோபர் கொலம்பஸ்


பார்டோலோமன் டயஸ்


அமெரிகோ வெஸ்புகியோ



கேப்டன் ஜேம்ஸ் கூக்



பார்டோலோமன் டயஸ் ஹென்றி


நேவிகேடர்

**3. திசைகாட்டும் கருவியின் மாதிரி ஒன்றைத் தயார் செய்.**




**4. இடைக்கால ஐரோப்பியர் உருவாக்கிய கப்பிலின் மாதிரியை தயார் செய்க.**

மாணவர் – சுய செயல்பாடு.

**ஒப்படைப்பு :**

1. **இத்தாலியின் தலைசிறந்த கலைப்படைப்புகளை சேகரித்து ஒரு படத்தொகுப்பைத் தயார் செய்க.**



மோனாலிசா



கடைசி விருந்து



தாவீதின் சிற்பகலை



சிசுடைன் சிற்றாலயம் (ரோம்)



மடோனா







2. **மார்ட்டின் லூதரின் வாழ்க்கை வரலாற்றை சுருக்கமாக வரைக.**

| | | |
|---|---|---|
| பிறப்பு | : | நவம்பர் 10, 1483 பெற்றோர் ஹான்ஸ் லூதர், மார்கரட் லூதர், பிறந்த இடம் எயிஸ்லபென், புனித ரோமப் பேரரசு. |
| பணி | : | துறவியாக, மதகுருவாக, இறையியலாளர் |
| சமயம் | : | கத்தோலிக்கத் திருச்சபை |
| சீர்திருத்தம் | : | விவிலியத்தை மொழி பெயர்த்தார், கிறித்தவ சமய சீர்திருந்த இயக்கம் மூலம் புரட்சி |
| இறப்பு | : | 18, பிப்ரவரி 1546. |

3. **அருகேயுள்ள அச்சகத்திற்கு சென்று தொடக்க கால அச்சு இயந்திரத்திற்கும், நவீனகால அச்சு இயந்திரத்திற்கும் உள்ள வேறுபாடுகளை அறிக.**

மாணவர் – சுய செயல்பாடு.

## கூடுதல் வினாக்கள்

### I. கோடிட்ட இடத்தை நிரப்புக :

1. __________ என அழைக்கப்பட்ட விலங்கு தோலின் மீது கையினால் எழுதப்பட்ட எழுத்துப் பிரதிகளே பயன்பாட்டில் இருந்தன. **விடை: வெல்லும்**
2. இத்தாலிய பல்கலைக்கழகங்களில் __________ படிப்புகள் மிகவும் புகழ்பெற்றதாய் விளங்கியது. **விடை: கலை - அறிவியல் சார்**
3. கிரேக்க மற்றும் இலத்தீன் செவ்விலக்கியம் __________ என்ற சிந்தனையை அறிமுகம் செய்தது. **விடை: மனிதநேயம்**
4. பதினான்காம் நூற்றாண்டில் தாலமியின் __________ நூலின் ஒரு பிரதி பைஸாண்டின் பேரரசிலிருந்து மேற்குலகுக்குத் கொண்டு வரப்பட்டது. **விடை: ஜியாகரபி**
5. மலபார் கள்ளிக்கோட்டியில் மிளகு மற்றும் பிற நறுமணப்பொருள்கள் குறைந்த விலையில் கிடைப்பதைக் கண்டு __________ திகைத்துப் போனார். **விடை: வாஸ்கோடகாமா**
6. அடிமைகளை அமெரிக்காவிற்கு விற்ற ஆப்ரிக்கா அதற்கு பதில் அமெரிக்காவிடமிருந்து __________ மற்றும் __________ பெற்றன. **விடை: சர்க்கரை மற்றும் கச்சாப்பொருட்கள்**

### II. சரியான விடையை தேர்வு செய்க :

**1. பசிபிக் பெருங்கடல் என பெயர் சூட்டியவர் யார்?**

அ) ஃபெர்டினாண்ட் மெகெல்லன் ஆ) சாமரின்
இ) பிலிப் ஈ) வாஸ்கோடகாமா **[விடை: அ]**

**2. யார் கண்டுபிடித்த பகுதிகளுக்கு போர்ச்சுகீசியர் உரிமை கொண்டாடினர்?**

அ) வாஸ்கோடகாமா ஆ) இஸபெல்லா
இ) கொலம்பஸ் ஈ) லோ போ கோன்ஸரல்வ்ஸ் **[விடை: இ]**

**3. கடவுளுக்கும் ஒரு தனிநபருக்குமிடையே திருச்சபை ஓர் இணைப்பு பாலம் என்பதை நிராகரித்தவர் யார்?**

அ) ஏராஸ்மசு ஆ) தாமஸ்
இ) தாலமி ஈ) மார்ட்டின் லூதர் **[விடை: ஈ]**

### III. சரியா? தவறா?

1. அகஸ்தினியன் என்ற திருச்சபை ஊழயர் ஒருவர் திருச்சபை பதவிகளை ஏலத்தில் எடுப்பதற்கும் பாவ மன்னிப்புச் சீட்டுகளை விற்பனை செய்வதற்கும் விட்டென்பர்க்கிற்கு வந்திருந்தார். **விடை: தவறு**
2. மத நீதிமன்றங்களிலே மிகவும் பழிக்கப்பட்ட நீதிமன்றம் போர்ச்சுக்கல் நீதிமன்றம். **விடை: தவறு**
3. மனிதநேயர்களான ஏராஸ்மஸ் மற்றும் சர்தாமஸ்மூர் ஆகியோர் திருச்சபையையும் அதன் ஊழல் மிக்க நடைமுறைகளையும் விமர்சித்து வந்தனர். **விடை: சரி**

## IV. பொருத்துக (விடையுடன்) :

| | | | |
|---|---|---|---|
| 1. | கால்வின் | - | கிறிஸ்துவமதத்தின் நிறுவனங்கள் |
| 2. | தாலமி | - | ஜியாகரபி |
| 3. | தாந்தே | - | டிவைன் காமெடி |
| 4. | ஏராஸ்மஸ் | - | மடமையின் புகழ்ச்சி |
| 5. | மார்ட்டின் லூதர் | - | தொண்ணூற்றி ஐந்து |

## V. சரியான கூற்றைக் கண்டுபிடிக்கவும் :

1. அ) அமெரிகோ வெஸ்புகி என்ற மாலுமி ஒரு முறை கடற்பயணம் மேற்கொண்டார்.
   ஆ) வாஸ்கோடகாமா போர்ச்சுகலிலிருந்து ஐந்து கப்பல்களுக்கு தலைமையேற்று கடற்பயணம் மேற்கொண்டார்.
   இ) குடியேற்றங்கள் அமைக்கப்பட்டவுடன் அடிமை வர்த்தகம் முடிவுற்றது.
   ஈ) கூட்டுப் பிரார்த்தனையில் பங்கேற்பதன் மூலம் மக்கள் தமது பாவச்சுமையை குறைத்துக் கொள்ள முடியும் என்று நம்பவைக்கப்பட்டிருந்தனர். **[விடை: ஈ]**

2. அ) லூதரின் பாதுகாவலராக ஃப்ரடெரிக் விளங்கினார்.
   ஆ) விவிலியத்தை லூதர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.
   இ) சடங்குகளும், பாவமன்னிப்பு நடைமுறைகளும் ஆன்ம விடுதலைக்கு இட்டுச் செல்லும் என்று லூதர் நம்பினார்.
   ஈ) விவசாயிகளும், இளவரசர்களும் லூதரின் இலட்சியத்தை எதிர்த்தனர். **[விடை: ஆ]**

3. **கூற்று** : கால்வின் தன்னுடைய கிறிஸ்துவ மதத்தின் நிறுவனங்கள் என்ற நூலில் தனது கண்ணோட்டங்களை முறைப்படுத்தி விதிகளாக வகுத்திருந்தார்.
   **காரணம்** : ஜெனிவாவில் அனைத்து விதமான விழாக்களும், களியாட்டங்களும் தடைசெய்யப் பட்டன.
   அ) கூற்றும் காரணமும் தவறு. ஆ) கூற்று சரி, காரணம் தவறு.
   இ) கூற்று தவறு, காரணம் சரி. ஈ) கூற்றும் காரணமும் சரி. **[விடை: ஈ]**

## VI. தலைப்பில் உள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளி :

### 1. இலக்கியத்தில் மனிதநேயம் :

**அ) மனிதநேயம் என்ற சிந்தனை எங்கிருந்து வெளிப்பட்டது?**
இலக்கியத்திலிருந்து.

**ஆ) மனிதநேயத்தின் தந்தை யார்?**
பெட்ராக்.

**இ) மனிதநேயவாதிகளின் இளவரசர் யார்?**
எராஸ்மஸ்.

2. **மறுமலர்ச்சியின் விளைவுகள் :**

**அ) மறுமலர்ச்சியின் விளைவுகள் எவ்வாறு இருந்தது? அதன் முக்கியத்துவம் யாது?**
மறுமலர்ச்சியின் விளைவுகள் ஏராளமானதாகவும், நீடித்த விளைவை ஏற்படுத்தக் கூடியதாகவும் இருந்தது.

**ஆ) தொடக்கத்தில் மறுமலர்ச்சியை உற்சாகப்படுத்தியது யார்?**
ஏராஸ்மசும், தாமஸ்மூரும்.

**இ) உடற்கூறியல் அறிவியல் கண்டுபிடிப்பு யார்?**
வில்லியம் ஹார்வியின்.

3. **புவியியல் சார்ந்த கண்டுபிடிப்புகள் :**

**அ) நறுமணப்பொருள்கள் விலை ஏறக் காரணம் யாது?**
கிழக்கு பகுதிகளுக்கும் மேற்கு பகுதிகளுக்கும் இடையே அமைந்திருந்த நிலவழிப் பாதையை உதுமானியத் துருக்கியர்கள் அடைத்து மூடியதால் நறுமண பொருள்களும் ஏனைய சரக்குகளும் விலை உயர்ந்தன.

**ஆ) கடற்பயணப்பள்ளியில் மாலுமிகள் எதைக் கற்றனர்?**
கடற்போக்குவரத்தை கையாள்வதற்கான சாதனங்களான கடலோடியின் திசைகாட்டும் கருவி, வான்நோக்கு கருவி போன்றவற்றைப் பயன்படுத்துவது குறித்து கற்றனர்.

**இ) நன்னம்பிக்கை முனை என அழைக்கப்பட்டது? ஏன்?**
கடல்வழியாக இந்தியாவைச் சென்றடைய முடியுமென்ற நம்பிக்கையை வழங்கியதால் அரசர் இரண்டாம் ஜான்-னால் அழைக்கப்பட்டது.

## VII. சுருக்கமான விடையளி :

1. **அடிமைகள் பற்றி கூறுக.**

✦ ஸ்பானிய மற்றும் ஐரோப்பியர்கள் கூடுதலான ஆய்வு தேடல் பயணங்களால் வெற்றி கொள்ளப்பட்ட பகுதி மக்களை அடிமைகளாக்கினர்.

✦ தோட்டங்களிலும், சுரங்கங்களிலும் மிகக்கடுமையான சூழலில் வேலை செய்ய கட்டாயப் படுத்தப்பட்டனர்.

✦ வணிகக் கப்பல்களில் மனிதத்தன்மையற்ற நிலைமைகளின் கீழ் காலனிய நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

✦ காம்பியா, செனகல் கோர், எல்மினா, காங்கோ ஆகிய நாடுகள் அடிமை வர்த்த மையங்களாக இருந்தன.

2. **நிலநடுக்கோட்டைத் தாண்ட மாலுமிகள் ஏன் அச்சப்பட்டனர்? முதலில் தாண்டி கடல்பயணம் செய்தவர் யார்?**

✦ நிலநடுக்கோட்டைத் தாண்ட முதலில் பயணம் செய்தவர் லோபோ கோன்ஸால்வ்ஸ்.

✦ கொதி நீர் ஊற்றுகள் பற்றியும், கடல் அரக்கர்கள் பற்றியும் அவர்கள் அறிந்து அச்சம் மிகுந்தவர்களாக இருந்தனர்.

3. **வாஸ்கோடகாமா பற்றி குறிப்பு எழுதுக.**

✦ வாஸ்கோடகாமா போர்ச்சுக்கல் நாட்டைச் சார்ந்தவர், கி.பி 1497ல் நான்கு கப்பல்களுக்கு தலைமைப் பொறுப்பேற்று கடற்பயணத்தைத் தொடங்கினார்.

✦ இந்தியாவிற்கு கடல்வழி கண்டுபிடிப்பதே அவர் நோக்கமாகும். நன்னம்பிக்கை முனையைச் சென்றடைந்த பிறகு அராபிய கடற்பயண நெறியாளர் ஒருவருடன் இந்தியாவின் மலபார் கடற்கரையில் அமைந்த கள்ளிக்கோட்டையை வந்தடைந்தார்.

✦ கள்ளிக்கோட்டையில் குறைந்த விலையில் மிளகு மற்றும் பிற நறுமணப் பொருள்கள் கிடைப்பதைக் கண்டு திகைத்தார்.

✦ இந்தப் பொருள்கள் விலையுயர்ந்த மதிப்பு வாய்ந்த பொருளாக போர்ச்சுக்கல்லில் இருந்தது. எனவே அதிக அளவில் நறுமணப் பொருள்களை போர்ச்சுக்கல்லுக்கு கொண்டு சென்ற அவர் அவற்றை விற்று பெரும் லாபம் சம்பாதித்தார்.

## VIII. விரிவான விடையளி :

1. **கிழக்கிந்திய கம்பெனிகள் உருவான விதம் குறித்தும் கிழக்கிந்திய கம்பெனிகள் குறித்தும் கூறுக.**

✦ புவியியல் சார்ந்த கண்டுபிடிப்புகளின் விளைவாக பதினேழாம் நூற்றாண்டு பல்வேறு கிழக்கிந்திய நிறுவனங்களின் உருவாக்கத்தைக் கண்டது.

✦ அட்லாண்டிக் நெடுகிலும் நடைபெற்ற வர்த்தகம் ஒரு முக்கோண வர்த்தகமாக மாறியது.

✦ இந்தியாவிற்கு ஒரு கடல்வழியைக் கண்டுபிடித்த பின்னர் போர்ச்சுகீசியர்கள், கிழக்கிந்திய நறுமணப்பொருள் வர்த்தகத்தில் அராபியர்கள் எகிப்தியர்கள், வெனிசியர்கள் ஆகியோரின் போட்டிகளை படைபலத்தைக் கொண்டு முறியடித்துவிட்டு தங்களுடைய ஏகபோகத்தை நடைமுறைப்படுத்தினர்.

✦ ஸ்பானியர்கள் புதிய உலகத்திலிருந்த தமது காலனிகளில் தங்கம் மற்றும் வெள்ளி உலோகங்களின் சுரங்க பணி மற்றும் போக்குவரத்துகளில் ஏகபோக ஆதிக்கத்தை செலுத்தினர்.

✦ இதன் விளைவாக காலனியாதிக்கவாதிகள் ஆதாயத்திற்காக காலனி நாடுகளின் செல்வ வளங்களை சுரண்டினர்.

✦ இவ்வாறு சுரண்டப்பட்ட செல்வங்கள் அனைத்தையும் கிழக்கிந்திய கம்பெனிகள் தங்கள் நாடுகளில் கொண்டு குவித்து ஏகபோக வாழ்கையை வாழ காரணமாயிற்று.

✦ இந்தக் காலகட்டத்தில் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி, டச்சு கிழக்கிந்திய கம்பெனி மற்றும் ஃப்ரெஞ்சுக் கிழக்கிந்திய கம்பெனி போன்றவை அத்தகைய நிறுவனங்களாக இருந்தன.

www.nammakalvi.in



வரலாறு

# பாடம் 9 புரட்சிகளின் காலம்

## பயிற்சிகள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :

**1. அமெரிக்காவில் ஏற்படுத்தப்பட்ட முதல் ஆங்கிலேய காலனி எது?**

அ) நியூயார்க் ஆ) பிலடெல்பியா
இ) ஜேம்ஸ்டவுன் ஈ) ஆம்ஸ்டெர்டாம் [விடை: இ]

**2. பிரெஞ்சுப் புரட்சியின் முன்னோடியாக, வாஷிங்டனுடன் கூட்டுச் சேர்ந்து ஆங்கிலேயருக்கு எதிராகப் போராடியவர்**

அ) டான்டன் ஆ) லஃ பாயெட்
இ) நெப்போலியன் ஈ) ஆபிரகாம் லிங்கன் [விடை: ஆ]

**3. லஃபாயட், தாமஸ் ஜெபர்சன், மிரபு ஆகியோரால் எழுதப்பட்டது பிரகடனம் எது?**

அ) சுதந்திர பிரகடனம்
ஆ) பில்னிட்ஸ் பிரகடனம்
இ) மனிதன் மற்றும் குடிமகன் உரிமைகள் பற்றிய பிரகடனம்
ஈ) மனித உரிமை சாசனம் [விடை: இ]

**4. எங்கு ஆங்கிலேயரின் தோல்வி பிரான்சிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான நட்புக்கு வழிவகுத்தது?**

அ) ட்ரென்டன் ஆ) சாரடோகா
இ) பென்சில் வேனியா ஈ) நியூயார்க் [விடை: ஆ]

**5. பிரான்சில் அரச சர்வாதிகாரத்தின் சின்னமாக இருந்தது எது?**

அ) வெர்சே மாளிகை ஆ) பாஸ்டில் சிறைச்சாலை
இ) பாரிஸ் கம்யூன் ஈ) ஸ்டேட்ஸ் ஜெனரல் [விடை: ஆ]

**6. ஆஸ்திரியா மற்றும் பிரஷ்யாவின் படைகள், பிரெஞ்சுப் புரட்சியாளர் படைகளால் எந்தப் போர்க்களத்தில் தோற்கடிக்கப்பட்டன?**

அ) வெர்ணா ஆ) வெர்சே
இ) பில்னிட்ஸ் ஈ) வால்மி [விடை: ஈ]

**7. 'காமன்சென்ஸ்' நூலை எழுதியவர் யார்?**

அ) வால்டேர் ஆ) ரூசோ

இ) மாண்டெஸ்கியூ ஈ) டாண்டன் [விடை: அ]

**8. பதினாறாம் லூயியின் கீழ்க் குறைந்தபட்ச அதிகாரங்களைக் கொண்ட முடியாட்சியைத் தக்கவைத்துக்கொள்ள விரும்பிய மிதவாத தாராளவாதிகள் யார்?**

அ) ஜெரோண்டியர் ஆ) ஜேக்கோபியர்

இ) குடியேறிகள் ஈ) அரச விசுவாசிகள் [விடை: அ]

**9. எந்த ஆண்டில் பாரிஸ் உடன்படிக்கையின்படி அமெரிக்க சுதந்திரப் போர் முடிவுக்கு வந்தது?**

அ) 1776 ஆ) 1779 இ) 1781 ஈ) 1783 [விடை: ஈ]

**10. தாமஸ் பெயின் எழுதிய புகழ்வாய்ந்த நூல் என்ன?**

அ) இயல்பறிவு ஆ) மனித உரிமைகள்

இ) உரிமைகள் மசோதா ஈ) அடிமைத்தனத்தை ஒழித்தல் [விடை: அ]

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. இரண்டாம் கண்டங்கள் மாநாட்டால் அஞ்சல்துறை தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டவர் ________. **விடை: பெஞ்சமின் பிராங்கிளின்**
2. பங்கர் குன்று போர் நடைபெற்ற ஆண்டு ________. **விடை: 1775 ஜூன் 17**
3. ________ சட்டம் கடனைத் தங்கமாகவும் வெள்ளியாகவும் திரும்பச் செலுத்த வற்புறுத்தியது. **விடை: செலவாணிச் சட்டம்.**
4. பிரான்சின் தேசியச் சட்டமன்றத்தின் தலைவர் ________ ஆவார். **விடை: மிரபு**
5. சுதந்திரத்திற்கும் பகுத்தறிவிற்கும் பெரும்விழா நடத்திய ________ கில்லட்டினால் கொல்லப்பட்டார். **விடை: ஹெர்பர்ட்**
6. பதினாறாம் லூயி பிரான்சை விட்டு தப்பியோட முயன்ற போது ________ நகரில் அவர் தனது குடும்பத்துடன் கைது செய்யப்பட்டார். **விடை: வெர்னே**

## III. சரியான கூற்றினைக் கண்டுபிடி :

1. i. கடலாய்வுப் பயணங்களை மேற்கொண்டதில் போர்த்துகீசியர் முன்னோடியாவர்.
   ii. பென் என்ற குவேக்கரால் புதிய பிளைமவுத் பெயரிடப்பட்டது.
   iii. குவேக்கர்கள் போருக்கு ஆதரவாக இருந்தமைக்கு நற்பெயர் பெற்றனர்.
   iv. ஆங்கிலேயர்கள் நியூஆம்ஸ்டர்டாமை நியூயார்க் என பெயர் மாற்றம் செய்தனர்.

   அ) i. மற்றும் ii சரியானவை ஆ) iii சரி

   இ) i சரி ஈ) i மற்றும் iv சரியானவை [விடை: ஈ]

2. i. அமெரிக்க விடுதலைப் போர் இங்கிலாந்துடன் செய்யப்பட்ட போராக மட்டுமல்லாது உள்நாட்டுப் போராகவும் அமைந்தது.
   ii. ஆங்கிலேயப் படைகள் யார்க்டவுனில் வெற்றிபெற்றன.

9 வரலாறு

iii. வளர்ந்துவரும் நடுத்தர வர்க்கத்தினரைப் பிரெஞ்சு பிரபுக்கள் ஆதரித்தனர்

iv. ஆங்கிலேய நாடாளுமன்றம் காகிதத்தின் மீதான வரி நீங்கலாக ஏனைய பொருட்களின் மீதான டவுன்ஷெண்ட் சட்டங்களை ரத்து செய்தது.

அ) i மற்றும் ii சரியானவை ஆ) iii. சரி

இ) iv சரி ஈ) i. மற்றும் iv. சரி [விடை: ஈ]

3. **கூற்று: ஆங்கிலேயப் பொருட்களைப் பாஸ்டன் வணிகர்கள் புறக்கணித்தனர்.**

**காரணம் : ஆங்கிலேய நிதி அமைச்சர், அமெரிக்க காலனிகளில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மீது புதிய வரி அறிமுகப்படுத்தினார்.**

அ) கூற்று சரி, காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

ஆ) கூற்று தவறு, காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

இ) கூற்று சரி காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.

ஈ) கூற்றும் காரணமும் தவறானவை. [விடை: இ]

4. **கூற்று : கட்டாய ராணுவ சேவைக்கு எதிராக வெண்டி என்னுமிடத்தில் விவசாயிகள் ஒரு பெரும்புரட்சி செய்தனர்**

**காரணம் : அரசரின் ஆதரவாளர்கள் விவசாயிகள் அவருக்குக்கெதிராக போரிட விரும்பவில்லை.**

அ) கூற்றும் காரணமும் தவறானவை. ஆ) கூற்றும் காரணமும் சரியானவை.

இ) கூற்று சரி, காரணம் தவறு. ஈ) கூற்று தவறு, காரணம் சரி. [விடை: இ]

## IV. பொருத்துக (விடையுடன்) :

| | | | |
|---|---|---|---|
| 1. | ஜான் வின்திராப் | – | மாசாசூசட்ஸ் குடியேற்றம் |
| 2. | டர்காட் | – | பிரான்சின் நிதி அமைச்சர் |
| 3. | சட்டத்தின் சாரம் | – | மான்டெஸ்கியூ |
| 4. | மேரி அண்டாய்னெட் | – | பதினாறாம் லூயி |
| 5. | ஏழாண்டுப் போர் | – | இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் |
| 6. | அமெரிக்கச் சுதந்திர தினம் | – | ஜூலை 4 |

## V. கீழ்க்காணும் வினாக்களுக்குச் சுருக்கமான விடையளி :

1. **பியூரிட்டானியர் என்போர் யார்? அவர்கள் இங்கிலாந்தை விட்டு ஏன் வெளியேறினர்?**

✦ இங்கிலாந்து திருச்சபையைச் சீர்திருத்த வேண்டும் என்னும் நோக்கத்தில் செயல்பட்டவர்கள் பியூரிட்டானியர் என அறியப்பட்டனர்.

✦ இவர்கள் மேற்கொண்ட முயற்சிகளை முதலாம் ஜேம்ஸ், முதலாம் சார்லஸ், ஆகிய ஸ்டூவர்ட் வம்ச அரசர்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

✦ இவ்வரசர்கள் மேற்கொண்ட அடக்கு முறை நடவடிக்கைகளால் பெருவாரியான பியூரிட்டானியர் இங்கிலாந்திலிருந்து புலம் பெயர்ந்து வேறு பகுதிகளில் குடியேறினர்.

2. **குவேக்கர் பற்றி நீவிர் அறிவதென்ன?**

- குவேக்கர்கள் இங்கிலாந்தில் ஜார்ஜ்பாக்ஸ் என்பவரால் நிறுவப்பட்ட நண்பர்கள் குழாம் என்னும் கிறிஸ்தவமதக் குழுவின் உறுப்பினர் ஆவர்.
- புனித ஆவிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்த இவர்கள் சடங்குச் சம்பிரதாயங்களையும், சமயக்குருமார் அமைப்பையும் எதிர்த்தனர்.
- இவர்கள் போருக்கு எதிராகவும் அமைதிக்கு ஆதரவாகவும் மேற்கொண்ட பணிகளுக்காக நற்பெயர் பெற்றவர்களாவர்.

**3. 'பாஸ்டன் தேநீர் விருந்தின்' முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.**

- 1767 –இல் இங்கிலாந்து நிதியமைச்சர் சார்லஸ் டவுன்ஷென்ட் அறக்குமதிப் பண்டங்களின் மீதான புதிய வரிகளை அறிமுகம் செய்தார்.
- இச்சட்டம் குடியேற்றங்கள் இறக்குமதி செய்யும் கண்ணாடி, காகிதம், வர்ணபூச்சு, தேயிலை ஆகியவற்றின் மீது வரி விதித்தனர்.
- இதனால் கோபமுற்ற மக்களில் சிலர் அமெரிக்க பூர்வக்குடிமக்களைப் போல் மாறுவேடம் பூண்டு 1773 டிசம்பரில், சரக்கு கப்பல்களின் மேலேறி அதிலிருந்து தேயிலையைக் கடலில் வீசினர். இந்நிகழ்வு பாஸ்டன் தேநீர் விருந்து என வர்ணிக்கப்பட்டது.

**4. செப்டம்பர் படுகொலை பற்றி ஒரு குறிப்பு வரைக.**

- அரசனின் ஆணைப்படி சுவிட்சர்லாந்து நாட்டுக் காவலர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பலர் கொல்லப்பட்டதால் ஆத்திரம் கொண்ட பொதுமக்கள் அரச ஆதரவாளர்களை மாரட் என்பவரின் தலைமையில் வேட்டையாடினர்.
- செப்டம்பர் மாதம் 2 ஆம்நாள் தொடங்கி மூன்று நாட்களில்மாற்றுக் கருத்துடைய எதிரிகள் என்ற சந்தேகத்தின் பேரில் 1,500 நபர்கள் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர்.
- விசாரணைக்குப் பின்னர் அவர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர். பிரான்ஸ் நாட்டு வரலாற்றில் இது 'செப்டம்பர் படுகொலை' என அழைக்கப்படுகிறது.

**5. பிரான்சின் மூன்று வர்க்கங்களின் அமைப்பு பற்றி எழுதுக.**

**முதல் வர்க்கம்:**

மதக் குருமார்கள் (சமயப் பணிகளுக்காக பணியமர்த்தப்பட்ட ஆண்களும், பெண்களும்).

**இரண்டாம் வர்க்கம்:**

பிரபுக்கள், மற்றும் வழக்கறிஞர்கள், பணம் படைத்த வர்த்தகர்கள், வணிகர்கள், வங்கியாளர்கள், செல்வராக இருந்த நிலவுடைமையாளர்கள் அடங்கிய பொதுமக்கள்.

**மூன்றாம் வர்க்கம்:**

பொது மக்களின் பிரதிநிதிகள். (இவர்கள் டெய்லே (நிலவரி) காபெல்லே (உப்புவரி) நிலவரி, மதகுருமார்களுக்கு விளைச்சலில் 1/10 பங்குவரி செலுத்தி வறுமையில் வாடினர்.)

**6. பிரெஞ்சு புரட்சியில் லஃபாயட்டின் பங்கினை எழுதுக.**

- லஃபாயட் பிரெஞ்சுப் புரட்சியின் போது பிரெஞ்சு தேசியப் பாதுகாவலர்கள் என்ற படைப் பிரிவுக்குத் தலைமையேற்றார்.

- ஜெபர்சனின் உதவியோடு இவர் 'மனிதன் மற்றும் குடிமகனின் உரிமைகள் பற்றிய பிரகடனம்' என்பதை எழுதினார்.
- இதைத் தேசியச் சட்டமன்றம் 1789 ஆகஸ்ட் 27 இல் ஏற்றது.

**7. பாஸ்டில் சிறைச்சாலை தகர்ப்பிற்கான பின்னணி என்ன?**

- பிரெஞ்சு நாடாளுமன்றத்தின் மூன்றாம் வர்க்கத்தை சார்ந்த பிரதிநிதிகள் பிரபுக்களுக்கும், அரசரின் ஆணைக்கு அடிபணிய மறுத்து டென்னிஸ் மைதானத்தில் கூடினர்.
- அரசருக்கு அடிபணிய மறுத்த மக்களை சுட்டுத்தள்ள அயல்நாட்டுப் படையினரை வருவிக்க ஆலோசனையில் ஈடுபட்டதால் கோபமுற்ற மக்கள் பாஸ்டன் சிறைச்சாலையை தகர்த்தனர்.

**8. பிரெஞ்சு புரட்சியின்போது விவசாயிகள் செலுத்த வேண்டிய வரிகள் யாவை?**

- டெய்லே (நிலவரி).
- காபெல்லே (உப்புவரி),
- பொதுப்பணிகளுக்கு 'கார்வி' எனப்படும் இலவச உழைப்பையும் வழங்கினர்.

## VI. ஒவ்வொரு தலைப்பின் கீழும் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளி:

**1. டவுன்ஷெண்ட் சட்டம் :**

**அ) இச்சட்டத்தை அறிமுகப்படுத்தியவர் யார்?**
சார்லஸ் டவுன்ஷென்ட்.

**ஆ) எந்த ஆண்டு இச்சட்டம் கொண்டு வரப்பட்டது?**
1767.

**இ) குடியேற்ற மக்கள் இச்சட்டத்தை ஏன் எதிர்த்தனர்?**
இறக்குமதி பண்டங்களின் மீது புதிய வரிகள் விதித்ததால் மக்கள் இச்சட்டத்தை எதிர்த்தனர்.

**ஈ) பாஸ்டன் வணிகர்கள் ஆங்கிலேய பொருட்களை ஏன் எதிர்த்தனர்?**
தேயிலையின் மீது விதிக்கப்பட்டிருந்த வரிகள் விலக்கப்படாமல் இருந்ததால்.

**2. பிரான்சின் சமூக நிலை :**

**அ) பிரான்ஸில் திருச்சபை வசூலித்த வரியின் பெயர் என்ன?**
டித்.

**ஆ) டான்டன் என்பவர் யார்?**
தேசிய பேரவையின் முக்கியத் தலைவர்.

**இ) பதினெட்டாம் நூற்றாண்டில் பிரான்ஸின் கலைக் களஞ்சியச் சிந்தனையாளர்கள் யாவர்?**
தீதரா, ஜீன் டிஆலம்பெர்ட்.

**ஈ) பொதுச் சாலைகளின் கட்டுமானத்திற்கான இலவச உழைப்பை வழங்கியவர் யார்?**
விவசாயிகள்.

## VII. விரிவான விடையளிக்கவும் :

**1. "பிரதிநிதித்துவம் இல்லாமல் வரிவிதிப்பு இல்லை" இக்கூற்று அமெரிக்க சுதந்திரப்போருக்கு எவ்வாறு வழிவகுத்தது என்பதை விளக்குக.**

- ஏழாண்டு போரில் இங்கிலாந்து பிரான்சை தோற்கடித்து கனடாவை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது.
- இதற்கு இங்கிலாந்து பெருமளவில் பணம் செலவு செய்ய நேர்ந்தது.
- செலவானத் தொகையில் ஒரு பகுதியை அமெரிக்க குடியேற்ற நாடுகள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என இங்கிலாந்து அமைச்சர்கள் சிலர் கருத்து தெரிவித்தனர்.
- இதனால் குடியேற்ற நாடுகளின் மீது ஒன்றன்பின் ஒன்றாக பல வரிகள் விதிக்கப்பட்டன.
- 1764ஆம் ஆண்டு சர்க்கரைச் சட்டம்
- 1764ஆம் ஆண்டு செலவாணிச் சட்டம்
- 1765ஆம் ஆண்டு முத்திரைத்தாள் சட்டம்
- 1766ஆம் ஆண்டு பிரகடனச் சட்டம்
- 1767ஆம் ஆண்டு டவுன்ஷென்ட் சட்டம்
- இச்சட்டங்களின் மூலம் விதிக்கப்பட்ட அனைத்து வரிகளையும் அமெரிக்க குடியேற்ற நாடுகள் எதிர்த்தன.
- தங்கள் விருப்பத்திற்கு மாறாக தங்கள் மீது வரிவிதிக்கும் ஆங்கிலேய நாடாளுமன்றத்தின் உரிமைக்கு எதிராக அவர்கள் அறைக்கூவல் விடத்தனர்.
- குடியேற்ற நாடுகளின் படைகளுக்கு ஜார்ஜ் வாஷிங்டன் தலைமையேற்றார்.
- "பிரதிநிதித்துவம் இல்லாமல் வரிவிதிப்பு இல்லை." என்பது அவர்களது புகழ்பெற்ற முழக்கமாக இருந்தது.

**2. 1789 ஆம் ஆண்டுப் புரட்சிக்குப் பிரஞ்சுத் தத்துவஞானிகளின் பங்களிப்பினை விளக்கவும்.**

**வால்டேர் :**

- வால்டேர் எழுத்தாற்றல் கொண்டவரும் செயல்பாட்டாளருமாவார்.
- தனது எழுத்துக்களில் திருச்சபையைக் கடுமையாக விமர்சித்தார்.
- கான்டீட், வால்டேரின் மிகவும் புகழ்பெற்ற நூலாகும்.
- பகுத்தறிவு மற்றும் அறிவியல் பற்றி எழுதியவர் வால்டேர். வால்டேர்மாண் டெஸ்கியூ, ரூசோ ஆகியோர் அன்று பிரான்ஸில் நிலவிய நிலைமைகளை விமர்சித்தனர்.

**ரூசோ :**

ரூசோ தன்னுடைய சமூக ஒப்பந்தம் என்னும் நூலில் பதிவு செய்துள்ள புகழ் பெற்ற கூற்று "மனிதன் சுதந்திரமாகப் பிறக்கிறான் ஆனால் எங்கும் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டுள்ளான்" என்பதாகும்.

**ரூமாண்டெஸ்கியூ :**

“பாரசீக மடல்கள்” “சட்டத்தின் சாரம்” என்னும் நூல்களை எழுதிய மாண்டெஸ்கியூ சுதந்திரத்திற்கு ஆதரவாக வாதாடினார்.

- அவர் அதிகாரப் பிரிவினை எனும் கோட்பாட்டை முன்வைத்தார்.

**கலைக் களஞ்சியம் :**

- பாரிசில் வெளியிடப்பட்ட கலைக் களஞ்சியம் தீதரா, ஜீன் – டி ஆலம்பெர்ட் ஆகிய சிந்தனையாளர்களால் வடிவமைக்கப்பட்டிருந்தது.
- இத்தத்துவவாதிகளும் சிந்தனையாளர்களும் மதச்சகிப்பின்மையைச் சாடினர்.
- ஒரு சிலரே அனுபவிக்கும் அரசியல் சமூகச் சலுகைகளை எதிர்த்தனர்.

**செயல்பாடு :**

**1. பதினாறாம் லூயியின் அரசாங்கத்தைப் போன்று எந்த ஓர் அரசாங்கமும் திவாலாகி விட்டால் அந்த நெருக்கடியைச் சமாளிக்க நீங்கள் என்ன நடவடிக்கைகள் மேற்கொள்வீர்கள்?**

- தேவையற்ற செலவுகளைக் குறைப்பேன்.
- கடனீட்டுப் பத்திரங்களை வெளியிட்டு பணம் பெறுவேன்.
- பொருளாதார நிபுணர்களுடன் சிக்கலைத் தீர்க்க ஆலோசிப்பேன்.
- வரிகளை உயர்த்துவேன். கூடுதல் வரிகளை வரி செலுத்துவோரிடம் வசூலிப்பேன்.
- வரிச் சலுகைகளை நிறுத்துவேன்.
- வட்டி விகிதத்தை குறைத்து பொருளாதாரத்தை சீர்செய்ய உதவுவேன்.

**2. அமெரிக்கச் சுதந்திரப் போர் மற்றும் இந்திய சுதந்திர இயக்கம் ஆகியவற்றை ஒப்பிடுக.**

- அமெரிக்க சுதந்திரப் போர் மற்றும் சுதந்திர இயக்கம் இரண்டின் முக்கிய நோக்கம் ஆங்கிலேயரை தங்கள் சொந்த மண்ணிலிருந்து விரட்டுவதேயாகும்.
- அமெரிக்க சுந்திரப் போருக்கு முக்கிய காரணம் அமெரிக்க குடியேற்றங்களில் புகுத்தப்பட்ட சக்கரைச் சட்டம், செலவாணிச் சட்டம், முத்திரைத்தாள் சட்டம் ஆகியவை முக்கிய காரணமாக அமைந்தது. நாடுகளை இணைத்தலும், அதிக வரிகளை மக்கள் மீது புகுத்தியதும் இந்திய சுதந்திர இயக்கம் தோன்ற முக்கிய காரணமாக அமைந்தது.
- அமெரிக்க சுதந்திரப் போரில் ஆங்கிலேயருக்கு எதிராக அமெரிக்கர்கள் ஆயுதங்களை பயன்படுத்தினர். இந்திய சுதந்திர இயக்கம் ஆங்கிலேயருக்கு எதிராக அமைதியான முறையில் போராடியது (சத்தியாகிரகம்).
- அமெரிக்கர்கள் ஆங்கிலேயர்களுக்கு எதிராக குறுகிய காலத்திற்குள் போராடி சுதந்திரத்தைப் பெற்றனர். ஆனால் இந்தியர்கள் சுமார் 50 ஆண்டுகளுக்கும் மேலாக போராடி சுதந்திரத்தைப் பெற்றனர்.

**ஒப்படைப்பு :**

1. **பாஸ்டில் சிறைச்சாலை நிகழ்வை பற்றி விவரி.**

- ஸ்டேட்ஸ் ஜெனரலிலிருந்து அரசரால் வெளியேற்றப்பட்ட சாமானியர்களின் பிரதிநிதிகள் டென்னிஸ் மைதானத்தில் ஒன்றுகூடி தங்கள் பிரச்சனைக்கு தீர்வு கிடைக்கும் வரை கலைந்து செல்வதில்லை என உறுதியேற்றதைத் தொடர்ந்து நெருக்கடி முற்றியது.
- அரசர் இவர்களைக் கலைக்கப் படைகளைப் பயன்படுத்த முயன்றார். அவருடைய வீரர்களே அவரது ஆணைகளுக்குப் பணிய மறுத்தனர்.
- இதனைத் தொடர்ந்து நாட்டு மக்களைச் சுட்டுத் தள்ளுவதற்காக அரசர் லூயி அயல்நாட்டுப் படைகளைத் தருவிப்பதற்கான சதி ஆலோசனைகளில் ஈடுபட்டார். இதனால் ஆத்திரமடைந்த மக்கள் 1789 ஜூலை 14இல் பாரிஸ் நகரில் கிளர்ச்சியில் இறங்கினர்.
- அவர்கள் பாஸ்டில் சிறையைத் தகர்த்து அங்கே சிறை வைக்கப்பட்டிருந்தவர்களை விடுதலை செய்தனர்.
- பாஸ்டில் சிறையின் வீழ்ச்சி புரட்சியில் முக்கியத் திருப்புமுனையாகும். இதன் நினைவாக ஜூலை 14ஆம் நாள் இன்றுவரை பிரான்சில் தேசிய தினமாகக் கொண்டாடப்படுகிறது.

2. **'லே மிசரபில்' என்ற விக்டர் ஹியூகோவின் வரலாற்று நாவலின் சாராம்சத்தை வாசிக்கவும்.**
மாணவர் சுய செயல்பாடு.

## கூடுதல் வினாக்கள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் :**

1. **நிலப்பரப்புக் காண்பதற்கான கடலாய்வுப் பயணங்களை மேற்கொண்டதில் முன்னோடிகள் யார்?**
அ) ஜெர்மானியர் ஆ) போர்த்துகீசியர்
இ) ஆங்கிலேயர் ஈ) டச்சுக்காரர் [விடை: ஆ]

2. **இங்கிலாந்துக்கும் பிரான்சுக்குமிடையே நடைபெற்ற போர் எத்தனை ஆண்டு?**
அ) ஐந்தாண்டுப்போர் ஆ) மூன்றாண்டுப்போர்
இ) ஏழாண்டுப்போர் ஈ) எட்டாண்டுப்போர் [விடை: இ]

3. **விவசாயிகள் அரசுக்கு செலுத்திய நிலவரியின் பெயர் என்ன?**
அ) டெய்லே ஆ) காபெல்லே இ) கார்வி ஈ) டித் [விடை: அ]

4. **விவசாயிகளிடமிருந்து நில மானிய வரிகளை வசூல் செய்தவர்கள் யார்?**
அ) மதகுருமார்கள் ஆ) அரசர்கள்
இ) பிரபுக்கள் ஈ) பூர்ஷ்வாக்கள் [விடை: இ]

**5. கீழ்காண்பவர்களில் மனிதன் மற்றும் குடிமகனின் உரிமைகள் பிரகடனம் என்னும் நூலை எழுதாதவர் யார்?**

அ) லஃபாயட் ஆ) தாமஸ் ஜெபர்சன்

இ) ரூசோ ஈ) மிரபு [விடை: இ]

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. டச்சுக்காரர் அமெரிக்காவில் ________ என்ற பெயரில் ஒரு நகரத்தை நிறுவினர்.
விடை: நியூ ஆம்ஸ்டர்டாம்

2. 1791 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ________ தனது முதல் அரசியலமைப்பை உருவாக்கியது.
விடை: தேசியச் சட்டமன்றம்

3. ________ சட்டம் அமெரிக்காவில் ஆங்கிலப் படைகளைத் தங்கவைப்பதால் ஏற்படும் செலவுகளைக் குடியேற்ற நாடுகள் ஏற்கும் படிச் செய்தது. **விடை: படைவீரர் தங்குமிடச் சட்டம்**

4. முதலாவது கண்டங்களின் மாநாடு நடைபெற்ற இடம் ________. **விடை: பிலடெல்பியா**

5. திருச்சபை பெரும் சொத்துக்களுக்கு உடைமையாளராய் இருந்தது ________.
விடை: மத குருமார்கள்

## III. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| 1. | சுதந்திரப் பிரகடனம் | – | ரூசோ தாமஸ் ஜெபர்சன் |
| 2. | பங்கர் குன்றுப் போர் | – | 1775 |
| 3. | பாரீஸ் | – | கலைக்களஞ்சியம் |
| 4. | ஜீன்ஜோக்ஸ் ரூசோ | – | சமூக ஒப்பந்தம் |
| 5. | மரபு வழிப்பட்ட பரம்பரை பிரபுக்கள் | – | வாளேந்திய பிரபுக்கள் |

## IV. கீழ்க்காணும் வினாக்களுக்குச் சுருக்கமான விடையளி :

**1. பிரெஞ்சு தேசிய சட்டமன்றம் எவற்றை ஒழித்துக்கட்டியது?**

தேசியச் சட்ட மன்றமானது பண்ணை அடிமை முறை, நிலப்பிரபுத்துவத் தனியுரிமைகள், வரி கட்டுவதிலிருந்து பிரபுக்களுக்கும் மதகுருமார்களுக்கும் அளிக்கப்பட்டிருந்த விலக்கு, அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த பட்டங்கள், நிலப்பிரபுத்துவ நீதி மன்றங்கள் ஆகியனவற்றை ஒழித்துக் கட்டியது.

**2. மனிதன் மற்றும் குடிமகனின் உரிமைகள் பிரகடனத்தின் சாராம்சம் என்ன?**

✦ மனிதர்கள் மனிதர்களாய் இருப்பதினாலேயே இயல்பாகவே சில உரிமைகளைப் பெற்றுள்ளனர் என்பதை உறுதிப்படுத்தும் இயற்கை விதியை இது அடிப்படையாகக் கொண்டது. அவ்வுரிமைகள் உலகம் தழுவியவை அனைத்து இடங்களிலும் அனைத்துக் காலங்களிலும் செல்லத்தக்கவை.

✦ அறிவொளிக் காலத்துத்தத்துவ ஞானிகளால் ஈர்க்கப்பட்டு எழுதப்பட்ட இப்பிரகடனம் பிரெஞ்சுப் புரட்சியினுடைய லட்சியங்கள் சாரத்தை விளக்குவதாய் அமைந்தது.

- உலகளாவிய அளவில் சுதந்திரமும், ஜனநாயகமும் தழைத்தோங்குவதில் பெரும்தாக்கத்தை இப்பிரகடனம் ஏற்படுத்தியது.

**3. ஜெரோண்டியரும் ஜேக்கோபியரும் பற்றி குறிப்பு வரைக.**

- தாராளவாதத் தன்மை கொண்ட மிதவாதிகள் குறைந்த பட்ச அதிகாரங்களைக் கொண்ட வரையறுக்கப்பட்ட முடியாட்சியை அமைக்க விரும்பினர்.
- இவர்கள் தங்களைக் ஜெரோண்டியர் கட்சியினர் என்றழைத்துக் கொண்டனர்.
- தீவிரவாதத் தன்மை கொண்ட குடியரசுவாதிகள் ஜெக்கோபியராவர்.

**4. பிரெஞ்சுப் புரட்சியின் தாக்கம் பற்றி சிறு குறிப்பு வரைக.**

- மக்களின் இறையாண்மையை உயர்த்திப் பிடித்தது.
- ஐரோப்பாவில் தாராளவாத அரசியலமைப்பைக் கொண்ட அரசுகள் உருவாவதற்கு இப்புரட்சி அடித்தளமிட்டது.
- சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் எனும் கோட்பாடு உலகம் முழுவதும் சுதந்திரத்தை நேசிப்போரின் தாரகமந்திரமானது.

பாடம் 10

# தொழிற்புரட்சி

## பயிற்சிகள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :

1. **நீராவி படகு போக்குவரத்து சேவையை நிறுவியவர் யார்?**
   அ) ஆர்க்ரைட் ஆ) சாமுவேல் கிராம்ப்டன்
   இ) ராபர்ட் ஃபுல்டன் ஈ) ஜேம்ஸ் வாட் [விடை: இ]

2. **மான்செஸ்டர் நகரம் ஏன் ஜவுளி உற்பத்திக்கு உகந்த இடமாகக் கருதப்பட்டது?**
   அ) நிலம் கிடைக்கப் பெற்றமை ஆ) மிகுந்த மனித வளம்
   இ) நல்ல வாழ்க்கைச் சூழல் ஈ) குளிர்ச்சியான தட்பவெட்ப நிலை [விடை: ஈ]

3. **தையல் இயந்திரத்தைக் கண்டு பிடித்தவர் யார்?**
   அ) எலியாஸ் ஹோவே ஆ) எலி விட்னி
   இ) சாமுவேல் கிராம்ப்டன் ஈ) ஹம்ப்ரி டேவி [விடை: அ]

4. **நீராவி இயந்திரத்தை பிரான்சில் அறிமுகம் செய்த குடும்பம் எது?**
   அ) டி வெண்டெல் ஆ) டி ஹிண்டல்
   இ) டி ஆர்மன் ஈ) டி ரினால்ட் [விடை: அ]

5. **சிலேட்டரை அமெரிக்கத் தொழில் புரட்சியின் தந்தை என அழைத்தவர் யார்?**
   அ) எப் டி ரூஸ்வெல்ட் ஆ) ஆண்ட்ரூ ஜேக்சன்
   இ) வின்ஸ்டன் சர்ச்சில் ஈ) உட்ரோ வில்சன் [விடை: ஆ]

6. **கீழ்க்காண்பனவற்றில் எது ஹோ மார்க்கெட் நிகழ்ச்சியின் நினைவுநாளாகக் கடைபிடிக்கப்படுகிறது?**
   அ) சுதந்திர தினம் ஆ) உழவர் தினம்
   இ) உழைப்பாளர் தினம் ஈ) தியாகிகளின் தினம் [விடை: இ]

7. **எங்கு ஜோல் வெரெய்ன் சுங்க ஒன்றியம் உருவாக்கப்பட்டது?**
   அ) இங்கிலாந்து ஆ) ஜெர்மனி
   இ) பிரான்ஸ் ஈ) அமெரிக்கா [விடை: ஆ]

8. **பிரான்சில் முதல் மோட்டார் வாகனங்களை உற்பத்தி செய்தவர் யார்?**
அ) லூயி ரெனால்ட் ஆ) ஆர்மாண்ட் பீயுஜ்காட்
இ) தாமஸ் ஆல்வா எடிசன் ஈ) மெக் ஆடம் [விடை: அ]

9. **எக்கண்டுபிடிப்பு பருத்தியிலிருந்து கொட்டைகளைப் பிரித்தது?**
அ) உருட்டாலைகள் ஆ) பஞ்சுக் கடைசல் இயந்திரம்
இ) ஸ்பின்னிங் மியூல் ஈ) இயந்திர நூற்புக் கருவி [விடை: ஆ]

10. **கீழ்காண்பனவற்றில் எது இரும்பை உருக்குவதற்காக முற்காலத்தில் பயன்படுத்தப்பட்டது**
அ) கற்கரி ஆ) கரி இ) விறகு ஈ) காகிதம் [விடை: ஆ]

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. ________ இங்கிலாந்தில் ஆடவர்க்கு வாக்குரிமை கோரியது. **விடை: சாசன இயக்கம்**
2. ________ உலகம் முழுவதும் சாலைகள் அமைக்கப்படும் முறையை மாற்றியமைத்தது. **விடை: மெக் ஆடமைஸ்டு சாலை முறை**
3. விரைவாகவும் குறைந்த செலவிலும் எஃகை உற்பத்தி செய்யும் முறையை ________ கண்டுபிடித்தார். **விடை: ஹென்றிபெஸ்ஸிமர்**
4. விஞ்ஞான சோசலிஸத்தை முன்வைத்தவர் ________ ஆவார். **விடை: கார்ல்மார்க்ஸ்**
5. ஜெர்மனியில் முதல் இருப்புப் பாதை ________ ஆண்டில் இயக்கப்பட்டது. **விடை: 1835**

## III. சரியான கூற்றினைக் கண்டுபிடி :

1. i. இங்கிலாந்துச் சுரங்க முதலாளிகள் சுரங்கங்களுக்குள் நீர்க்கசிவு ஏற்படும் பிரச்சனையை எதிர்கொண்டனர்.
ii. இவ்வேளையில் மனித உழைப்பை ஈடுபடுத்துவது குறைவான செலவுடையதாக இருக்கும்
iii. சுரங்கங்களிலிருந்து நீரை வெளியேற்றும் நீராவி இயந்திரத்தை நியூட்டன் கண்டுபிடித்தார்.
iv. சுரங்கங்களிலிருந்து நிலக்கரியைப் பெறவேண்டுமானால் நீரை வெளியேற்றியாக வேண்டும்.
அ) i. சரி. ஆ) ii. மற்றும் iiii. சரியானவை.
இ) i. மற்றும் iv. சரியானவை. ஈ) iiii. சரி. [விடை: இ]

2. i. தங்கள் உரிமைகளைப் பெறுவதற்காகத் தொழிலாளர்கள் தொழிற் சங்கங்களை உருவாக்கிக் கொண்டனர்.
ii. ஜெர்மனியின் அரசியல் முறை தொழிற்புரட்சிக்குக் குறிப்பிடத்தக்க முக்கியச் சவாலாக அமைந்திருந்தது.
iii. முதலாளிகளை பாதுகாப்பதற்காகக் கார்ல் மார்க்ஸ் சோசலிஸத்தை முன்வைத்தார்.
iv. ஜெர்மனியில் இயற்கை வளங்கள் ஏதுமில்லை.
அ) ii. சரி. ஆ) ii. மற்றும் iii. சரியானவை.
இ) i. மற்றும் iv. சரியானவை. ஈ) iii. சரி. [விடை: அ]

3. கூற்று : விடுமுறைப் பெறுவதற்குத் தொழிலாளர் உரிமை பெற்றிருந்தனர்.
காரணம் : பணியாளர்களை பாதுகாக்க சட்டங்கள் இருந்தன.
அ) கூற்று சரி காரணம் தவறு.
ஆ) கூற்று காரணம் இரண்டுமே தவறு.
இ) கூற்று காரணம் இரண்டுமே சரி.
ஈ) கூற்று சரி காரணம் கூற்றுக்குச் சரியான விளக்கமல்ல. [விடை: ஆ]

4. கூற்று: சிலேட்டர் அமெரிக்கத் தொழிற்புரட்சியின் தந்தை என அழைக்கப்படுகிறார்.
காரணம் : அவருடைய நூற்பாலையின் நகலாகப் பல நூற்பாலைகள் உருவாயின அவருடைய தொழில் நுட்பம் பிரபலமானது.
அ) கூற்று சரி காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம்.
ஆ) கூற்று தவறு காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம்.
இ) கூற்று காரணம் இரண்டுமே தவறு.
ஈ) கூற்று காரணம் இரண்டுமே சரி. [விடை: அ]

## IV. பொருத்துக (விடையுடன்) :

| | | | |
|---|---|---|---|
| 1. | பென்ஸ் | – | ஜெர்மனி |
| 2. | பாதுகாப்பு விளக்கு | – | ஹம்பரி டேவி |
| 3. | நான்கு சக்கர வாகனம் | – | லூயி ரெனால்ட் |
| 4. | மாபெரும் ரயில்வே | – | அமெரிக்கா |
| 5. | நிலக்கரி வயல் | – | லங்காஷையர் ஊழியர் போராட்டம் |

## V. கீழ்க்காணும் வினாக்களுக்குச் சுருக்கமான விடையளி :

**1. தொழிற்புரட்சியின் போது இங்கிலாந்தில் தொழிலாளர் வாழ்விடங்களின் நிலை எவ்வாறு இருந்தன?**

✦ தொழிலாளர்கள் மிகவும் சிறிய, அழுக்கடைந்த, சுகாதாரமற்ற, வீடுகளில் வாழ்ந்தனர்.
✦ தொழிலாளர்கள் விரும்பினாலும் கூடத் தமது சுற்றுப் புறத்தைச் சுத்தப்படுத்தவோ மாற்றவோ அவர்களுக்கு நேரம் இருக்கவில்லை.
✦ இதனால் டைஃபாய்டு, காலரா, பெரியம்மை போன்ற நோய்கள் பரவின.

**2. இங்கிலாந்தில் நகரமயமாதலுக்கான காரணங்களைக் கூறு.**

✦ தொழிற் புரட்சியின் வருகையைத் தொடர்ந்து உலகின் தொழிற்பட்டறையாக இங்கிலாந்து மாறியது.
✦ வேளாண்மை உற்பத்தியில் பொதுவான வீழ்ச்சி காணப்பட்டது.
✦ மக்கள் கிராமங்களிலிருந்து தொழில் நகரங்களை நோக்கி இடம்பெயர்ந்தனர்.
✦ இடம்பெயர்வு அதிகரிக்க, அதிகரிக்க சிறிய நகரம் பெரும் நகரங்களாயின.

**3. ஹே மார்க்கெட் படுகொலை பற்றிக் குறிப்பு வரைக.**

- சிகாகோவின் ஹோ மார்க்கெட் சதுக்கத்தில் 1886 மே மாதம் 4 ஆம் தேதி ஒரு தொழிலாளர் ஆர்ப்பாட்டம் நடந்தது.
- நாளொன்றுக்கு எட்டு மணி நேர வேலை கோரிக்கையை முன் வைத்து அமைதியாகத் தொடங்கிய இக்கூட்டத்தில் காவல்துறை பல சுற்றுகள் துப்பாக்கிச் சூடு நடத்திப் பலரைச் சுட்டுக் கொன்றது.
- இந்தத் தியாகிகளுக்கு மரியாதை செலுத்தும் விதமாக மே 1ஆம் நாள் இன்றளவும் சர்வதேச தொழிலாளர் தினமாகக் கடைபிடிக்கப்படுகிறது.

**4. லூயி ரெனால்ட் பற்றி நீங்கள் அறிந்தது என்ன?**

- லூயி ரெனால்ட் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்.
- இவர் 1898 இல் நான்கு சக்கர வாகனத்தை உருவாக்கினார்.
- சொசைட்டே ரெனால்ட் ஃபெரெர்ஸ் என்ற தனது நிறுவனத்தின் மூலம் அதிக எண்ணிக்கையில் வாகனங்களைத் தயாரித்தார்.

**5. தொழிற்புரட்சியின் இரு முக்கிய விளைவுகளைக் கோடிட்டுக் காட்டுக.**

- வணிக விரிவாக்கம்.
- உணவு உற்பத்தி அதிகரிப்பு.
- ஆலைத் தொழிலாளர்கள் என்னும் ஒரு புதிய வர்க்கம் உருவாகியது.
- போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு வளர்ச்சியடைந்தது.

## VI. ஒவ்வொரு தலைப்பின் கீழும் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளி

**1. தொழிலாளர் இயக்கம் :**

**அ) சீர்திருத்த மசோதா எப்போது கொண்டு வரப்பட்டது?**
1832.

**ஆ) அச்சட்டம் யாருக்கு வாக்குரிமை அளித்தது?**
நடுத்தர வர்க்கத்தினருக்கு.

**இ) ஏன் இவ்வியக்கம் சாசன இயக்கம் என அழைக்கப்பட்டது?**
உழைக்கும் வர்க்கத்தினர் லட்சக்கணக்கில் கூடி தங்கள் கோரிக்கையை சாசனமாக உருவாக்கி மக்கள் அவையில் சமர்ப்பித்தனர்.

**ஈ) சாசனவாதிகளின் கோரிக்கைகள் யாவை?**

- இருபத்தியோரு வயதான அனைவருக்கும் வாக்குரிமை.
- ரகசிய வாக்கெடுப்பு மூலம் நாடாளு மன்றத் தேர்தல்.
- நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான தகுதியில் சொத்துரிமையை நீக்குதல்.
- ஆண்டுதோறும் நாடாளுமன்றத்திற்குத் தேர்தல்.
- சமமான பிரதிநிதித்துவம்.

**2. போக்குவரத்து மற்றும் தகவல் தொழில்நுட்பம் :**

**அ) இங்கிலாந்தில் முதன்முதலாகத் திறக்கப்பட்ட இருப்புப்பாதை எது?**
ஸ்டாக்டன், டார்லிங்டன் ஆகிய நகரங்களுக்கு இடையே திறக்கப்பட்டது (1825).

**ஆ) உற்பத்திப் பண்டங்கள் எவ்வாறு சந்தைக்கு எடுத்துச்செல்லப்பட்டன?**
உற்பத்திப் பொருட்கள் புதிய கால்வாய்கள், சாலைகள், இருப்புப் பாதைகள் மூலம் எடுத்துச் செல்லப்பட்டன.

**இ) நீராவி இயந்திர ரயிலைக் கண்டுபிடித்தவர் யார்?**
ராபர்ட் ஃபுல்டன்.

**ஈ) நியூயார்க்கிலிருந்து ஆல்பனி வரை சென்ற நீராவிப் படகின் பெயரினை எழுது?**
கிளர்மோண்ட்.

## VII. விரிவான விடையளிக்கவும் :

**1. அமெரிக்காவில் இரண்டாவது தொழிற்புரட்சி நடைபெற்றதற்கான காரணங்களை வரிசைப்படுத்துக.**

- ✦ உடலுழைப்பிலிருந்து தொழில்நுட்பம் மற்றும் இயந்திரம் சார்ந்த உற்பத்திக்கு மாறியது அமெரிக்கத் தொழிற்புரட்சியின் தொடக்கமாகும்.
- ✦ 19ஆம் நூற்றாண்டில் அமெரிக்கா புதிய தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள் உருவாக்குவதில் முனைந்தது.
- ✦ ராபர்ட் ஃபுல்டன் நீராவிப் படகுப் போக்குவரத்தினைத் தொடங்கினார். சாமுவேல் மோர்ஸ் தந்தி, எலியாஸ் ஹோவே தையல் இயந்திரம், தாமஸ் ஆல்வா எடிசன் மின்விளக்கு, அலெக்சாண்டர் கிரஹாம் பெல் தொலைபேசி ஆகிய கண்டிபிடிப்புகள் முழு உலகையும் அடையாளம் காண முடியாத அளவிற்கு மாற்றின.
- ✦ அமெரிக்காவின் பெரிய அளவிலான முதல் கனரக எஃகு உற்பத்தி ஆண்ட்ரூ கார்னேகி என்பவரால் தொடங்கப்பட்டது.
- ✦ 1869 இல் கண்டங்களை இணைக்கும் முதல் ரயில்பாதை அமைக்கப்பட்டது.
- ✦ இது மக்கள் போக்குவரத்து, சரக்குப் போக்குவரத்து, மூலப் பொருட்களை எடுத்து வருதல் ஆகியனவற்றுக்குப் பயன்பட்டது.
- ✦ இதன் விளைவாக அமெரிக்காவில் எதிர்பாராத வண்ணம் நகரமயமாக்கமும், எல்லை விரிவடைதல்களும் நடந்தன.
- ✦ ஒரு கிராமப்புற சமூகமாகத் திகழ்ந்த அமெரிக்கா, நகர்ப்புறச் சமூகமாக மாறுவதைத் தொழிற்புரட்சி விரைவுபடுத்தியது.

2. **இங்கிலாந்தின் தொழிற்புரட்சியினால் இந்தியாவில் ஏற்பட்ட விளைவுகள் யாவை?**

- வங்கத்தைச் சேர்ந்த நெசவாளர்கள் கிழக்கிந்தியக் கம்பெனி அதிகாரிகள் மற்றும் அவர்களின் ஏஜெண்டு கரங்களில் சிக்கிப் பெரும் துன்பத்துக்கு ஆளாயினர். அவர்கள் முதலில், உற்பத்திப் பொருட்களை ஓரிடம் விட்டு வேறிடம் எடுத்துச் செல்லப் போக்குவரத்துத் தீர்வை செலுத்த வேண்டும் என்று இந்தியா நெசவாளர்கள் மீது கடும் சுமையைத் திணித்தனர்.
- இங்கிலாந்தின் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் வணிகப் பயிர்களை மட்டும் சாகுபடி செய்ய வற்புறுத்தினர்.
- இங்கிலாந்தின் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட பருத்தி ஆடைகளை இந்தியச் சந்தைகளில் குவித்து இந்திய பொருட்களின் மதிப்பை அழித்தனர்.
- கைத்தறியில் நெய்யப்பட்ட பருத்தி ஆடைகளுக்கான சந்தை இழப்பால் இந்தியா பண்டைய உற்பத்தித் துறையில் வகித்து வந்திருந்த இடத்தை இழந்து மூலப்பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடாக மட்டுமே மாறியது.
- பிரிட்டன் துணி ஆலைகளில் உற்பத்தியான துணிகள் இந்திய சந்தைகளில் குறைவான விலைக்கு விற்கப்பட்டமையால் இந்திய நெசவாளர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து உணவுக்கும் வழியற்றவர்களாயினர்.

## செயல்பாடு

1. **தொழிற்புரட்சியின் சாதக, பாதக அம்சங்கள் குறித்து ஒரு பேச்சுப் போட்டி நடத்துக.**

**சாதகங்கள் :**

- பொருட்களின் உற்பத்தியை அளவிலும், தரத்திலும் அதிகப்படுத்தியது.
- புதிய கருவிகள் மற்றும் இயந்திரங்கள் உற்பத்தியால் விவசாயத்தில் புரட்சி ஏற்பட்டது.
- போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பிலும் முன்னேற்றம் கண்டது.
- பன்னாட்டு வணிகம் வளர்ச்சி பெற்றது.

**பாதகங்கள் :**

- பழமையான வாழ்க்கைமுறை தொலைந்து போனது.
- கிராமப்புறம் வேலைவாய்ப்பை இழந்தது.
- முதலாளித்துவம் ஏற்பட வழிவகுத்தது.
- சுற்றுச்சூழல் மாசடைய காரணமாக அமைந்தது.


2. **துணி இழைகள், வடிவமைப்புகள் ஆகியவை இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் இடங்கள் பற்றிப் பட்டியல் தயார் செய்யவும்.**

மாணவர் சுய செயல்பாடு.


**ஒப்படைப்பு :**

1. **தொழிற்புரட்சியின் போது கண்டுபிடிக்கப்பட்டவை பற்றிய படங்களைச் சேகரிக்கவும்.**


ஸ்பின்னிங் மியூட்


விசைத்தறி


பருத்தி ஜின்


நீராவி என்ஜின்


பாதுகாப்பு விளக்கு


நீராவி இரயில்

2. **பயன்படுத்தப்பட்ட கழிவு பிளாஸ்டிக்கைப் பயன்படுத்தி நவீன பிளாஸ்டிக் சாலைகள் அமைக்கப் படுவது குறித்து ஒரு கட்டுரைவரைக.**

மாணவர் சுய செயல்பாடு.

## கூடுதல் வினாக்கள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் :**

1. **நீராவி மூலம் நூற்பது தொழிலாளியின் உற்பத்தித் திறனை எவ்வளவு அலகுகள் அளவுக்கு அதிகரிக்கிறது?**

அ) 1000 ஆ) 1500 இ) 500 ஈ) 1100 [விடை: இ]

2. **ஜேம்ஸ் ஹார்கிரீவ்ஸ் இயந்திர நூற்புக் கருவியைக் கண்டுபிடித்த ஆண்டு**

அ) 1767 ஆ) 1768 இ) 1764 ஈ) 1763 [விடை: அ]

3. **இருப்புப்பாதைகள் எந்த நூற்றாண்டில் கிரேக்கத்தில் கோரினத்தில் அமைக்கப்பட்டன?**

அ) கி.மு.7 ஆ) கி.மு.5 இ) கி.மு.4 ஈ) கி.மு.6 [விடை: ஈ]

4. **ஜெர்மனியில் தொழிற்புரட்சி உருவாவதற்கு எது பெரிதும் உதவிகரமாய் அமைந்தது?**

அ) சுரங்கங்கள் ஆ) எஃகு

இ) தொழிற்சாலைகள் ஈ) இருப்புப்பாதைகள் [விடை: ஈ]

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. அல்சாஸ் மாகாணத்தின் ________ இயந்திரம் செய்வதற்கான அச்சுகளால் புகழ் பெற்றது
   **விடை: முல்ஹவுஸ் நகரம்**
2. இந்தியாவில் தொழிலாளர் தினம் ______ ஆல் கொண்டாடப்பட்டது. **விடை: சிங்காரவேலரால்**
3. ராபர்ட் ஃபுல்டன் என்பவர் ________ நதியில் நீராவிப் படகுப் போக்குவரத்தினைத் தொடங்கினார்.
   **விடை: ஹட்சன்**
4. இங்கிலாந்தில் குவிக்கப்பட்ட இந்திய துணிகளுக்கும் பட்டு ஆடைகளுக்கும் இங்கிலாந்தில் தடை விதிக்கப்பட்ட நூற்றாண்டு ________. **விடை: 18**
5. இந்தியாவில் முதன் முதலில் தொழிலாளர்தினம் கொண்டாடப்பட்ட ஆண்டு ________.
   **விடை: 1923 மே 1**

## III. கீழ்க்காணும் வினாக்களுக்குச் சுருக்கமான விடையளி :

**1. சாசன இயக்கம் பற்றி கூறுக.**

- விரக்தியுற்ற உழைக்கும் வர்க்கம் லட்சக்கணக்கில் ஒரிடத்தில் கூடி தங்கள் கோரிக்கைகள் அடங்கிய ஒரு சாசனத்தை உருவாக்கி பல லட்சம் சக தொழிலாளர்களின் கையொப்பம் பெற்றது.
- இந்தசாசனம் இங்கிலாந்து நாடாளுமன்றத்தின் கீழவையான மக்கள் அவையில் தாக்கல் செய்யப்பட்டது.
- அதில் கூறப்பட்டுள்ள கோரிக்கைகளைத் தொழிலாளர் இயக்கம் வலியுறுத்தியதால் அது சாசன இயக்கம் என அழைக்கப்பட்டனர்.

**2. சுரங்கங்கள் அறிக்கை என்றால் என்ன?**

- 1842 இல் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கை சுரங்கங்கள் அறிக்கை எனப்பட்டது.
- அதில் ஐந்து வயதிற்குக் குறைந்த சிறார்கள் மறைமுகமாக வேலைக்கு அமர்த்தப்பட்டு ரகசியமாக வேலை வாங்கப்பட்டதாகவும் இவ்வாறு நாளொன்றுக்கு 12 மணி நேரம் உழைக்க 2 பென்னி மட்டுமே கூலியாகத் தரப்பட்டதாகவும், வயதில் மூத்த பெண் சிறார்கள் நிலக்கரி கூடைகள் சுமந்ததாகவும் அதனால் உடல்வளர்ச்சி குறைபாடுகள் ஏற்பட்டதாகவும் அந்த அறிக்கைக் கூறியிருந்தது.

**3. ஜெர்மனியின் வடக்கடலில் இருந்த பாதுகாப்பான துறைமுகங்கள் எவை?**

பிரெமன், ஹாம்பர்க் ஆகிய இரு பெரிய துறைமுகங்கள் வடக் கடலில் இருந்த பாதுகாப்பான துறைமுகங்கள் ஆகும்.

**4. கார்டெல் என்றால் என்ன?**

போட்டிகளைக் கட்டுப்படுத்தவும் விலை உயர்வைத் தக்கவைக்கவும் உற்பத்தியாளர்கள் அல்லது விநியோகிப்பாளர்கள் ஏற்படுத்திக் கொள்ளும் கூட்டமைப்பே கார்டெல் ஆகும்.

வரலாறு

# பாடம் 11 ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில் காலனியாதிக்கம்

## பயிற்சிகள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :

1. பிரான்ஸில் லைட் எந்தத் தீவு பற்றி ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்?

அ) நறுமணத் தீவுகள் ஆ) ஜாவா தீவு

இ) பினாங்குத் தீவு ஈ) மலாக்கா [விடை: இ]

2. 1896 இல் எத்தனை நாடுகள் ஒருங்கிணைக்கப்பட்டு மலாய் ஐக்கிய நாடுகள் உருவாக்கப்பட்டது.

அ) நான்கு ஆ) ஐந்து இ) மூன்று ஈ) ஆறு விடை: அ

3. இந்தோ சீனாவில் பிரான்சின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருந்த பகுதி எது?

அ) ஆனம் ஆ) டோங்கிங்

இ) கம்போடியா ஈ) கொச்சின் சீனா [விடை: ஈ]

4. எந்தப் பகுதியில் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டதானது பெருமளவிலான ஆங்கிலேய சுரங்கத் தொழில் செய்வோர் ஜோகன்னஸ்பர்க்கிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் குடியேற வழி வகுத்தது?

அ) டிரான்ஸ்வால் ஆ) ஆரஞ்சு சுதந்திர நாடு

இ) கேப் காலனி ஈ) ரொடீஷியா [விடை: அ]

5. இந்தியாவுடன் வணிக உறவை நிறுவிக் கொண்ட முதல் ஐரோப்பிய நாட்டினர் யாவர்?

அ) போர்த்துகீசியர் ஆ) பிரெஞ்சுக்காரர்

இ) டேனிஷார் ஈ) டச்சுக்காரர் [விடை: அ]

6. எத்தியோப்பியா இத்தாலியை எந்தப் போரில் தோற்கடித்தது?

அ) அடோவா ஆ) டஹோமி

இ) டோங்கிங் ஈ) டிரான்ஸ்வால் [விடை: அ]

7. ஒப்பந்தக் கூலி முறையானது எந்த வகையான ஒப்பந்தம்?

அ) ஒப்பந்தத் தொழிலாளர் முறை ஆ) அடிமைத்தனம்

இ) கடனுக்கான அடிமை ஒப்பந்தம் ஈ) கொத்தடிமை [விடை: இ]

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. ________ மாநாடு ஆப்பிரிக்காவை ஐரோப்பிய நாடுகளின் செல்வாக்கு மண்டலங்களாகப் பிரித்துக்கொள்வது எனத் தீர்மானித்தது. **விடை: பெர்லின் குடியேற்ற நாட்டு**
2. வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய பகுதிகளின் ஜமீன்தார்களோடு மேற்கொள்ளப்பட்ட தீர்வு ________ என்றழைக்கப்படுகிறது. **விடை: நிரந்தர நிலவரித் திட்டம்**
3. ஆங்கிலேயரின் வருவாய்க்கு முக்கிய ஆதாரமாகத் திகழ்ந்தது ________ ஆகும். விடை: நிலவரி
4. தமிழ் மொழி பேசப்பட்ட பகுதிகளில் ________ வட்டிக்கு கடன் கொடுக்கும் தொழிலில் இருந்தனர். விடை: நாட்டுக்கோட்டை செட்டியார்

## III. சரியான கூற்றினைக் கண்டுபிடி :

1. i. 19 ஆம் நூற்றாண்டின் கடைசிக் காலாண்டுப் பகுதிவரை சகாராவுக்குத் தெற்கேயிருந்த ஆப்ரிக்கா வெளியுலகுக்கு தெரியாமல் இருந்தது.
   ii. 1864ஆம் ஆண்டில் கோல்டு கோஸ்டில் அமைந்துள்ள கடற்கரைப் பகுதி நாடுகள் இங்கிலாந்தின் காலனிகளாயின.
   iii. 500 ஆண்டு காலத்திற்கும் மேலாக ஸ்பெயின் பிலிப்பைன்ஸை ஆட்சி செய்தது.
   iv. ஒடிசா பஞ்சம் 1876-78 இல் நடைபெற்றது.
   அ) i. சரி ஆ) ii. சரி இ) ii. மற்றும் iii. சரி ஈ) iv. சரி **[விடை: அ]**
2. i. 1640 இல் பிரெஞ்சுக்காரர்கள் ஜாவாவையும் சுமத்ராவையும் கைப்பற்றினர்.
   ii. மலாக்காவைக் கைப்பற்றியதின் மூலம் ஆங்கிலக் குடியேற்றங்களைக் கைப்பற்றும் பணியை டச்சுக்காரர் தொடங்கினர்.
   iii. காங்கோ ஆற்றின் வடிநிலத் தீரத்தோடு தொடர்புடைய அனைத்துப் பிரச்சனைகளையும் பேசித் தீர்ப்பதற்காகவே பெர்லின் மாநாடு கூடியது.
   iv. சுல்தான் ஜான்ஜிபாரின் பகுதிகள் பிரான்சு மற்றும் ஜெர்மனியின் செல்வாக்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டன.
   அ) i. சரி ஆ) ii. மற்றும் iii. சரி இ) iii. சரி ஈ) iv. சரி **[விடை: இ]**
3. **கூற்று : சென்னை மகாணத்தில் 18761878 ஆண்டுகளில் நிலவிய பஞ்சத்திற்கு முன்னர் பெரும் வறட்சி நிலவியது.**
   **காரணம் : காலனியரசு உணவுதானிய வணிகத்தில் தலையிடாக் கொள்கையைப் பின்பற்றியது.**
   அ) கூற்று சரி காரணம் தவறு.
   ஆ) கூற்று காரணம் இரண்டுமே தவறு.
   இ) கூற்று சரி காரணம் கூற்றுக்குச் சரியான விளக்கமல்ல.
   ஈ) கூற்று சரி காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம். **[விடை: ஈ]**

4. கூற்று : பெர்லின் மாநாடு இரண்டாம் லியோபோல்டை சுதந்திர காங்கோ நாட்டில் ஆட்சிசெய்ய அனுமதி வழங்கியது.

காரணம் : பெல்ஜியம் அரசர் இரண்டாம் லியோபோல்டு காங்கோவின் மீது அக்கறை கொண்டிருந்தார்.

அ) கூற்றும் காரணமும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.

ஆ) கூற்றும் காரணமும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.

இ) கூற்று சரி, காரணம் தவறு.

ஈ) கூற்று தவறு, காரணம் சரி. [விடை: இ]

## IV. பொருத்துக (விடையுடன்) :

| | | | |
|---|---|---|---|
| 1. | லியோபோல்டு | – | பெல்ஜியம் |
| 2. | மெனிலிக் | – | எத்தியோப்பியா |
| 3. | சிசல் ரோடெஸ் | – | கேப் காலனி |
| 4. | வங்காளப் பஞ்சம் | – | 1770 |
| 5. | போ தெய் | – | வியட்நாம் |

## V. சுருக்கமாய் விடையளிக்கவும் :

1. **காலனியாதிக்கம், ஏகாதிபத்தியம் இரண்டையும் வேறுபடுத்திக் காட்டவும்.**

| காலனியாதிக்கம் | ஏகாதிபத்தியம் |
|---|---|
| காலனி என்னும் சொல் கலோனஸ் என்னும் லத்தீன் வேர்ச் சொல்லிலிருந்து பிறந்ததாகும். இதன் பொருள் விவசாயி என்பதாகும். | ஏகாதிபத்தியம் என்னும் சொல் இம்பீரியம் என்னும் லத்தீன் சொல்லிலிருந்து பிறந்தது. இதன் பொருள் ஆதிக்கம் என்பதாகும். |
| ஒரு புதிய இடத்தில் குடியேறுவது, குடியேறியவர்கள் அங்கேயே நிரந்தரமாகத் தங்கிவாழ்வர். | ஒரு நாடு குடியேறுதல் மூலமாகவோ இறையாண்மை செலுத்துதல் மூலமாகவோ மறைமுகமாகக் கட்டுப்படுத்தும் வழிகளிலோ வேறொரு நாட்டின் மீது அதிகாரம் செலுத்துவதைக் குறிக்கும். |

2. **ஜூலு பூர்வகுடிகள் பற்றிச் சிறு குறிப்பு வரைக.**

- ✦ ஜூலு பூர்வக்குடிகள் தங்களின் போர்த்திறனுக்காகப் பெயர் பெற்றவர்கள். புகழ் பெற்ற போராளிகளான சாக்கா ஜூலுவால் போன்றவர்களால் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டவர்கள்.
- ✦ தென்கிழக்கு ஆப்பிரிக்காவில் ஜூலு மக்களுக்கென ஒரு பெரிய நாட்டை உருவாக்குவதில் சாக்காஜூலு முக்கியப் பங்காற்றினார்.
- ✦ ஜூலு பகுதிகளைக் கைப்பற்றிய ஆங்கிலப் படைகள் அப்பகுதிகளைப் பதிமூன்று தலைமை யுரிமைப் பகுதிகளாகப் பிரித்தனர். ஜூலுக்கள் தங்கள் சுதந்திரத்தை மீண்டும் பெறவேயில்லை.

3. **இந்தியப் பொருளாதாரம் காலனிமயமாக்கப்பட்டதின் மூன்று கட்டங்களைக் கூறுக.**

இந்தியாவைக் காலனி நாடாக்கிய செயல்பாட்டை மூன்று கட்டங்களாகப் பிரித்துப் பார்க்கலாம்.

முதற்கட்டம் : வணிகமுதலாளித்துவம்.
இரண்டாம்கட்டம் : தொழில்துறைமுதலாளித்துவம்.
மூன்றாம்கட்டம் : நிதிமூலதனமுதலாளித்துவம்.

4. **கர்னல் பென்னிகுயிக் – குறிப்பு வரைக.**

- பென்னிகுயிக் ஒரு ராணுவப் பொறியாளரும், குடிமைப் பணியாளரும், சென்னை மாகாணச் சட்டமன்ற உறுப்பினரும் ஆவார்.
- மேற்கு நோக்கி ஓடும் பெரியார் ஆற்றின் நீரை ஓர் அணையைக் கட்டி கிழக்கு நோக்கித் திருப்பினால் வைகை ஆற்றைச்சார்ந்திருக்கும் லட்சக் கணக்கான புன்செய் நிலங்களைப் பாசன வசதி கொண்டவையாக மாற்ற முடியும் என அவர் முடிவு செய்தார்.
- ஆங்கிலேய அரசிடமிருந்து போதுமான அளவுக்கு நிதியைப் பெற முடியாத நிலையில் பென்னி குயிக் இங்கிலாந்து சென்று தனது குடும்ப சொத்துக்களை விற்று, அப்பணத்தைக் கொண்டு அணையைக் கட்டிமுடித்தார்.

5. **தாயகக் கட்டணங்கள் பற்றி விளக்கவும்.**

தாயகக் கட்டணம் என்ற பெயரில் கிழக்கிந்தியக் கம்பெனியின் பங்குதாரர்களுக்குச் சேர வேண்டிய லாபத்தில் பங்கு, வாங்கிய கடனின் மீதான வட்டி, ஊதியத்திலிருந்து பெறப்பட்ட சேமிப்பு, அதிகாரிகளுக்கான ஓய்வூதியம், லண்டனில் உள்ள இந்திய அலுவலகத்திற்கான செலவுகள் இந்தியாவிற்கு வரும் அல்லது இந்தியாவிலிருந்து செல்லும் ஆங்கிலப் படைகளுக்கான போக்குவரத்துச் செலவு எனும் பெயரால் கம்பெனி பெருமளவுப் பணத்தை ஆண்டுதோறும் இங்கிலாந்திற்கு அனுப்பி வைத்தது.

## VI. ஒவ்வொரு தலைப்பின் கீழும் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் :

1. **இந்தியாவில் காலனி ஆதிக்கம் :**

அ) **கிழக்கிந்தியக் கம்பெனி எப்போது நிலவரி வசூலிக்கும் உரிமையைப் பெற்றது?**
1765.

ஆ) ஆங்கிலேயர் எப்போது கூர்க்களை வென்றனர்?
816.

இ) இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சியில் அடிமைமுறை எப்பொழுது ஒழிக்கப்பட்டது?
1843.

ஈ) கீழை உலகின் லங்காஷையர் என்னும் பெயரைப் பெற்றிருந்த நாடு எது?
இந்தியா.

2. தென்னாப்பிரிக்கா :

அ) தென்னாப்பிரிக்காவில் ஆங்கிலேயருக்குச் சொந்தமான நாடுகள் எவை?
நேட்டால், கேப்காலணி.

ஆ) டச்சுக்காரர் கைவசமிருந்த பகுதிகள் எவை?
டிரான்ஸ்வால், சுதந்திர ஆரஞ்சுநாடு.

இ) கேப் காலனியின் பிரதம அமைச்சர் யார்?
சிசில் ரோட்ஸ்.

ஈ) போயர் போர்கள் எத்தனை ஆண்டுகள் நடைபெற்றன?
3 ஆண்டுகள் (1899–1902).

## VII. விரிவான விடையளிக்கவும் :

1. இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியின் பொருளாதாரத் தாக்கத்தை விவாதிக்கவும்.

**வேளாண்மைச்சூழல் :**

- ரயத்துவாரி முறை என்பது தென்னிந்தியாவில் அறிமுகம் செய்யப்பட்ட நில வருவாய் வரி முறையாகும். விவசாயி நிலத்தின் உரிமையாளர் அவரே வரி செலுத்துவார். நிலவரியை ஒரு விவசாயிமுறையாகச் செலுத்தும் வரை நிலம் அவருக்குச் சொந்தமானதாக இருக்கும்.
- நிலவரி செலுத்தத் தவறினால் அவர் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவார். மேலும் அவருக்குச் சொந்தமான கால்நடைகளையும், ஏனைய உடைமைகளையும் அரசு பறிமுதல் செய்து கொள்ளலாம்.

**நிலவரி :**

- ஆங்கிலேயரின் வருவாய்க்கு முக்கிய ஆதாரமாக திகழ்ந்த நிலவரி பலவந்தமான முறைகளில் வசூல் செய்யப்பட்டது. பஞ்சகாலங்களில் கூட நிலவரி செலுத்துவதிலிருந்து விவசாயிகளுக்கு விலக்கு அளிக்கப்படவில்லை.
- நிலப்பிரபுக்களுக்கு குத்தகைத் தொகை வழங்கவும், நிலம் உட்பட்ட தங்களது சொத்துக்களை விவசாயிகள் அடமானம் வைக்கும் அல்லது விற்றுவிடும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

**நீர்ப்பாசனம் :**

- மக்களின் நலனில் அக்கறை கொண்ட ஆர்தர் காட்டன், பென்னிகுயிக் போன்ற ஆங்கிலேய அதிகாரிகளும் பொறியாளர்களும் மேற்கொண்ட முன்முயற்சியால் பாதுகாக்கப்பட்ட நீர்ப்பாசன கால்வாய்கள் சில இடங்களில் சாத்தியமாயின.
- எங்கெல்லாம் இவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டனவோ அங்கெல்லாம் ஆங்கிலேயர் அதிகமான தீர்வை வசூலித்தனர். ஏற்கெனவே கொடூரமான நிலவரி வசூலின் கீழ் இருந்த விவசாயிகள் மென்மேலும் அவதியுற நேர்ந்தது.

### பஞ்சங்கள் :

- காலனியரசின் சுதந்திர வணிகக் கொள்கையும் கடுமையான நிலவரி வசூல் முறையும் பஞ்சங்கள் தோன்றுவதற்கு வழியமைத்துக் கொடுத்தன. 1866 1867 இல் ஏற்பட்ட ஒடிசா பஞ்சம் அப்பகுதியின் வரலாற்றில் நடைபெற்ற கொடூரமான நிகழ்வாகும். இப்பஞ்சத்தில் அப்பகுதிவாழ் மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் இறந்தனர்.
- சென்னை மாகாணத்தில் 1876 1878 ஆம் ஆண்டுகளில் நிலவிய பஞ்சத்திற்கு முன்னதாக வறட்சி நிலவியது.

### ஒப்பந்தக் கூலி முறை :

ஒப்பந்தக் கூலி முறையானது பெற்ற கடனுக்காக உழைப்பை நல்கும் ஒரு ஒப்பந்த முறையாகும். இதன் மூலம் 35 லட்சம் இந்தியர்கள் பல ஆங்கிலேயக் குடியேற்றங்களுக்குப் பெரும் பண்ணைகளில் வேலை செய்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டனர்.

## 2. ஆப்பிரிக்காவில் காலனி ஆதிக்கம் ஏற்பட்டதை விவரி.

### தென் ஆப்ரிக்கா :

- தென்னாப்பிரிக்காவில் ஆங்கிலேயர் நேட்டால், கேப் காலனி ஆகிய பகுதிகளை பெற்றிருந்தனர். 1886 இல் டிரான்ஸ்வாலில் தங்கம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டவுடன் இங்கிலாந்தைச் சேர்ந்த சுரங்கத் தொழில் வல்லுநர்கள் ஜோகன்னஸ்பர்க்கிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பெரும் எண்ணிக்கையில் குடியேறத் தொடங்கினர்.
- ஜுலு பூர்வக்குடிகள் தங்களின் போர்த் திறனுக்காகப் பெயர் பெற்றவர்கள். புகழ் பெற்ற போராளிகளான சாக்கா ஜுலு பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டவர்கள். தென்கிழக்கு ஆப்பிரிக்காவில் ஜுலு மக்களுக்கென ஒரு பெரிய நாட்டை உருவாக்குவதில் சாக்கா ஜுலு முக்கியப் பங்காற்றினார். ஜுலு பகுதிகளைக் கைப்பற்றிய ஆங்கிலப் படைகள் அப்பகுதிகளைப் பதிமூன்று தலைமையுரிமைப் பகுதிகளாகப் பிரித்தனர்.

### ரொடிசியா :

- 1889 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட பிரிட்டிஷ் தென் ஆப்ரிக்க கம்பெனி எனும் நிறுவனம் பிச்சுனாலந்துப் பகுதி முழுவதையும் காலனியாக மாற்றியது.
- இக்குடியேற்றம் பின்னர் சிசில் ரோட்ஸ் பெயரால் ரொடீசியா என அழைக்கப்பட்டது.

### மேற்கு ஆப்ரிக்கா :

கோல்டு கோஸ்டில் அமைந்துள்ள கடற்கரைப் பகுதி அரசுகள் 1854 இல் ஆங்கிலேயரின் காலனியானது.

### பிரெஞ்சு மேற்கு ஆப்ரிக்கா :

பிரான்சுக்குச் சொந்தமாகிய கினியா, ஐவரி, கோஸ்ட், டகோமெய் ஆகியவை சகாராவுக்கு தெற்கேயிருந்த பகுதிகளோடு இணைக்கப்பட்டன.


**கிழக்கு ஆப்ரிக்கா :**

- ✦ 1886 இல் ஜான்ஜிபார் சுல்தானுக்குச் சொந்தமானப் பல பகுதிகள் இங்கிலாந்து, ஜெர்மனி ஆகியவற்றின் செல்வாக்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டன.
- ✦ கென்யா, உகாண்டா, ஜான்ஜிபார் ஆகியவற்றை ஆண்ட அரசன் பலவீனமானவன், திறமையற்றவன் என முத்திரை குத்தி உகாண்டாவின் மீது தனது மறைமுகமான ஆட்சியை இங்கிலாந்து நிறுவியது.

**செயல்பாடு**

**1. இந்தியாவில் ஆங்கிலேயக் காலனியாதிக்கதின் போது பஞ்சங்களால் பாதிக்கப்பட்ட பல பகுதிகள் பற்றிய புகைப்படங்களைச் சேகரித்துப் படத்தொகுப்பு ஒன்றைத்தயார் செய்யவும்.**

- ✦ வங்காள பெரும் பஞ்சம் 1970.
- u ஒரிசா பஞ்சம் 1869
- ✦ ராஜஸ்தான் பஞ்சம் 1869
- u பீகார் பஞ்சம் 1873–74
- ✦ தென்னிந்திய பஞ்சம் 1876–78
- u வங்காள பஞ்சம் 1943



*தென்னிந்திய பஞ்சம் 1876–78*



*ஆங்கிலேயர் ஆட்சியின் போது 1943 –இல் வங்காளத்தில் சராசரியாக 4 மில்லியன் இறந்தனர்.*

**2. இந்தியாவிற்கும் தென்கிழக்கு ஆசியாவிற்கும் இடையிலானகலாச்சார தொடர்புகள் பற்றி விவரிக்கவும்.**

**மாணவர்** சுய செயல்பாடு.

**ஒப்படைப்பு :**

**1. இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியின்நன்மைகள், தீமைகள் குறித்து வகுப்பறையில் ஒரு வாதத்தை நடத்த ஏற்பாடு செய்யவும்.**

**நன்மைகள் :**

- ✦ சமூக சீர்திருத்தங்கள் தோன்ற வழிவகுத்தது. உதாரணம்: சதி ஒழிப்பு, விதவைத் திருமணச் சட்டம்.
- ✦ ஆங்கிலம் அலுவலக மொழியாகவும், போதிக்கும் பாடமாகவும் மாறியதால் மேற்கத்திய நூல்களைக் நம் மக்கள் கற்று மேன்மையடைய வழிவகுத்தது.
- ✦ கால்வாய்கள், அணைகள் போன்றன இவர்கள் காலத்தில் கட்டப்பட்டு பாசனத்திற்கு வழிவகை செய்தது.
- ✦ நினைவுச் சின்னங்கள், பாரம்பரியச் சின்னங்களைப் போற்றிப் பாதுகாத்தது.

**தீமைகள் :**

- பிரித்தாளும் கொள்கையை பின்பற்றி கர்சன் பிரபு பிரிவினை வாதத்தைத் தூண்டினார்.
- அதிகப்படியான வரிகளை விதித்து, ஏழை மக்களை சுரண்டினர்.
- நமது நாட்டின் செல்வ வளங்களை அவர்கள் நாட்டிற்கு எடுத்துச் சென்றனர்.
- பெருவாரியான இந்திய மக்களின் உயிரிழப்பிற்கு காரணமாக இருந்தனர். உதாரணம்: ஜாலியன் வாலாபாக் படுகொலை, சிப்பாய்க் கலகம்.

**2. ஆங்கிலேய பர்மாவில் காலனி ஆதிக்கத்தின் தாக்கத்தை ஆராய்க.**

மாணவர் சுய செயல்பாடு.

## கூடுதல் வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் :

**1. 1886 முதல் 1937 வரை இந்தியாவின் ஒரு பகுதியாகவே இருந்த தேசம் எது?**

அ) பர்மா ஆ) ஜாவா
இ) சுமத்ரா ஈ) இந்தோ சீனா [விடை: அ]

**2. ஆங்கிலேய குடியேற்றங்களுக்குப் பெரும் பண்ணைகளில் வேலை செய்வதற்காக அனுப்பி வைக்கப்பட்ட இந்தியர்களின் எண்ணிக்கை யாது?**

அ) 15 லட்சம் ஆ) 20 லட்சம்
இ) 35 லட்சம் ஈ) 45 லட்சம் [விடை: இ]

**3. தங்களின் அரசருக்காக மலாக்காவின் மாபெரும் பன்னாட்டு வணிக வளாகத்தைக் கைப்பற்றியவர்கள் யார்?**

அ) போர்த்துகீசியர் ஆ) டச்சுக்காரர்
இ) ஆங்கிலேயர் ஈ) பிரெஞ்சுக்காரர் [விடை: அ)]

**4. ராயத்துவாரி முறை என்பது எங்கு அறிமுகம் செய்யப்பட்ட வித்தியாசமான நிலவருவாய் முறையாகும்?**

அ) தென்னிந்தியா ஆ) வடஇந்தியா
இ) தென்னாப்பிரிக்கா ஈ) வங்காளம் [விடை: அ]

**5. இந்திய தேசியவாத பொருளாதார நிபுணர்**

அ) அல்புகர்க் ஆ) ஆர்.சி.தத்
இ) காரன்வாலிஸ் ஈ) இராபர்ட்கிளைவ் [விடை: ஆ]

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. ஏகாதிபத்தியம் ________ என்னும் லத்தீன் சொல்லிலிருந்துப் பிறந்தது. **விடை: இம்பீரியம்**
2. 1786 இல்பினாங்குத் தீவின் வடகிழக்கு முனையில் ________ என்ற பெயரில் குடியேற்றம் உருவாக்கப்பட்டது. **விடை: ஜார்ஜ்டவுன்**
3. இந்தியாவில் கொள்ளையடிக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்ட பணம் இங்கிலாந்தில் ________ முதலீடு செய்ய உதவியது. **விடை: தொழில்புரட்சிக்கு**
4. இந்தியாவானது ________ நாட்டு துணிகளுக்கு சந்தையாகவும் கச்சாப் பொருள்களுக்கான மூலாதாரமாகவும் மாற்றப்பட்டது. **விடை: இங்கிலாந்து**
5. மக்களின் நலனில் அக்கறை கொண்ட ஆங்கிலேய அதிகாரிகள் ________. **விடை: ஆர்தர் காட்டன், பென்னிகுயிக்**

## III. பொருத்துக (விடையுடன்) :

| | | | |
|---|---|---|---|
| 1. | அமர்த்தியாசென் | – | நோபல்பரிசு |
| 2. | வங்காளபஞ்சம் | – | 30 இலட்சம் |
| 3. | பென்னிகுயிக் | – | முல்லை பெரியாறு அணை |
| 4. | அடிமைமுறை ஒழிப்பு | – | 1843 |
| 5. | எலி | – | பிளேக் |

## IV. கீழ்க்காணும் வினாக்களுக்குச் சுருக்கமான விடையளி :

**1. பர்மா சிறு குறிப்பு வரைக.**

- 1886 முதல் 1937 வரை இந்தியாவின் ஒரு பகுதியாகவே பர்மா இருந்தது. ஒரு துணை நிலை ஆளுநரால் நிர்வகிக்கப்பட்டது.
- நியமன உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றக் குழு அவருக்கு உதவியது. பர்மாதேக்கு பல வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.
- மேலும் தனது செழிப்பு மிகுந்த மண் வளத்தால் அரிசி ஏற்றுமதி செய்யும் முக்கிய நாடாகவும் திகழ்ந்தது. தென்னிந்தியாவின் பல பகுதிகள் பர்மாவிலிருந்து இறக்குமதியாகும் அரிசியைச் சார்ந்திருந்தன.

**2. மூன்றாம் கட்ட முதலாளித்துவத்தைப் பற்றிக் கூறுக.**

- மூன்றாம் கட்டத்தில் மேலாண்மை முகவர் நிறுவனங்கள், ஏற்றுமதி இறக்குமதி நிறுவனங்கள், நாணயமாற்று வங்கிகள் ஆகியவை செழித் தோங்கின.
- இருப்புப்பாதை அமைத்தல், அஞ்சல்துறை, நீர்ப்பாசனம், நவீன வங்கித் துறை, கல்வித்துறை ஆகியவற்றில் மிகப் பெருமளவிலான முதலீட்டினைச் இங்கிலாந்து அரசு செய்தது. கொண்டு செல்லப்பட்ட நிதியின் கணிசமான பகுதி இருப்புப்பாதை அமைக்கும் தொழிலில் முதலீடு செய்யப்பட்டது.
- ஆங்கிலப் படைகள் நாட்டின் பல பகுதிகளுக்கு விரைவாகச் செல்வதற்கு இது உதவியது.

**3. போயர் போரின் விளைவுகளைப் பற்றி கூறுக.**

- போயர் போர்கள் மூன்று ஆண்டுகள் நடைபெற்றன. இறுதியில் போயர் படைகள் தோற்கடிக்கப்பட்டுப் பிரிட்டோரியா கைப்பற்றப்பட்டது. இதில் போயர்கள் பெரும் துன்பப்பட்டனர்.
- அவர்களின் வேளாண் பண்ணைகளும், பயிர்களும் நாசமாக்கப்பட்டன.
- போயர் பெண்களும் குழந்தைகளும் சிறைவைக்கப்பட்டனர். அங்கு உணவு, படுக்கை, மருத்துவவசதி, சுகாதார வசதி ஆகிய பற்றாக் குறை காரணமாக 26,000 பேர் உயிரிழந்தனர்.

**4. பேரரசர் மெனிலிக்கின் அரசியல் செயல்பாடுகளைப் பற்றிக் கூறுக.**

- எத்தியோப்பிய அதன் பாரம்பரிய அரசியல் அமைப்புடன், பேரரசர் மெனிலிக் என்பவரால் ஆளப்பட்டது.
- அவருடைய ஆட்சியின் போது 1896 இல் எத்தியோப்பியா, இத்தாலியை அடோவா போர்க்களத்தில் புறமுதுகிடச் செய்தது.
- இதன் பின்னர் அந்நாட்டு மக்களின் சுதந்திரத்தை எந்த ஐரோப்பிய சக்தியாலும் குறைக்க இயலவில்லை. ரயில் போக்குவரத்து, மின்சார வசதி, போன்றவற்றை அறிமுகம் செய்ததன் மூலமாக மெனிலிக் தனது நாட்டை நவீனமாக்கினார்.

**5. ஒடிசா பஞ்சம் பற்றிக்று கூறுக.**

1886 – 1867 இல் ஏற்பட்ட ஒடிசா பஞ்சம் அப்பகுதியின் வரலாற்றில் நடைபெற்ற கொடூரமான நிகழ்வாகும். இப்பஞ்சத்தில் அப்பகுதி வாழ்மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் இறந்தனர்.

❖❁❁❁❖

www.nammakalvi.in